


கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2053*

*மலர் - 14 இதழ் - 11 - பிப்ரவரி 2023*



ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன்
முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் ந.முத்துமோகன்
முனைவர் மு.இராமசுவாமி
முனைவர் நா.இராமச்சந்திரன்
முனைவர் பா.ஆனந்தகுமார்
முனைவர் ஞா.ஸ்டீபன்
ப.கு.ராஜன்
முனைவர் இரா.அறவேந்தன்
முனைவர் இரா.காமராசு
முனைவர் உ.அலிபாவா

இதழ் வடிவமைப்பு

*கா. குணசேகரன்*



நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 45.00. ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch. Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

---

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.**
**அம்பத்தூர். சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## உள்ளே...


**1** தமிழை உலகிற்கு... உலகை தமிழிற்கு...
ஆசிரியர் குழு....................................................04

**2** படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன்.............................................06

**3** தமிழ் நாட்டில் தமிழ் பயிற்று மொழிக்கான சோதனை ஓட்டம்
டாக்டர். சு. நரேந்திரன்.............................................13

**4** திறந்த மார்க்சியம் தொகுதி 3: மார்க்சின் விடுவிப்பு
ந. முத்துமோகன்....................................................19

**5** ஜாம்பவான்
அ.கா.பெருமாள்......................................................23

**6** பால்மரக்காட்டினிலே இடப்பெயர்வு இலக்கியம்
இரா. காமராசு........................................................27

**7** அம்பேத்கர் குமரப்பா கருத்தியலின் நடைமுறைச் சாத்தியம்
க.பழனித்துரை.......................................................33

**8** செயிர்தீர் செம்மொழி
முனைவர் இரா. வெங்கடேசன்............................................41

**9** பேரரசி: நாவலைப் போல வரலாறு!
எம். பாண்டியராஜன்...................................................45

**10** வாசிப்பின் மூலம் இந்தளூரில் ஒரு ஜென்மம் வாழ்ந்து பாருங்கள்...
கே.பாலசந்திரன்....................................................47

**11** குழந்தைகளுக்கென்று 'பேமிலி ரூல்ஸ்' தேவையா?
மருத்துவர் ப.வைத்திலிங்கம்...............................................57

**12** பழந்தமிழில் சமண சமயச் சொற்கள் வருகை - வளர்ச்சி - ஒடுக்கம்
முனைவர் ஆ.கார்த்திகேயன்......................................60

**13** பன்னாட்டு திணைக்குடி மொழிகளுக்கான பத்தாண்டுகள்
முனைவர் சி. மகேசுவரன்.........................................67

**14** பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் நீர் மேலாண்மை
ஜெ. அமுதராணி.......................................................71

# தமிழை உலகிற்கு... உலகை தமிழிற்கு...

46ஆவது சென்னைப் புத்தகக் கண்காட்சியின் ஒரு பகுதியாக, ‘முதல் சென்னை சர்வதேச புத்தகக் கண்காட்சி’ ஜனவரி 16-18 தேதிகளில் நடந்து முடிந்தது. ‘தமிழை உலகிற்கும் உலகை தமிழிற்கும்’ கொண்டு செல்வது எனும் முழக்கத்தோடும் நோக்கத்தோடும் நடந்த கண்காட்சி, தமிழக அரசின் முழுமையான ஈடுபாடும் முன் முயற்சியும் இல்லாது நடைபெற்றிருக்க வாய்ப்பில்லை. தமிழக முதல்வர், பள்ளிக் கல்வி அமைச்சர் மற்றும் தலைமைச் செயலாளர், முதல்வரின் முதன்மைச் செயலாளர், கல்வித் துறைச் செயலாளர் ஆகிய அனைவரின் வழிகாட்ட, ஆதரவு ஆகியவற்றோடு நூலகத் துறை இயக்குநரின் தலைமையில் துறை அலுவலர்கள் முழுமையாகவும் மிகுந்த பொறுமையோடும் பொறுப்போடும் இயங்கி இதனைச் சாத்தியமாக்கியுள்ளனர்.

தமிழக மக்கள் சார்பாகவும், 70 ஆண்டுகளுக்கும் மேலாக உலகெங்கும் இருந்து மானுட ஞானத்தை தமிழுக்குக் கொணர்ந்து தரும் பணியைச் செய்து வரும் என்.சி.பி.எச். (NCBH) நிறுவனம் சார்பாகவும் உங்கள் நூலகம் ஆசிரியர் குழு நெஞ்சார்ந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றது.

இந்த முயற்சியும் நிகழ்ச்சியும் முதன்முறை நடக்கும்போதே நல்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதன் அறிகுறிகளைக்

காட்டியுள்ளது. இது மேலும் சிறக்கவும், வளரவும், விரிவடையவும் அரசும், அரசின் துறைகளும் முயல்வார்கள் என்பதற்கான உறுதிமொழிகளும் கிடைத்துள்ளன.

‘வளர்ச்சியடைந்த முன்னேறிய சமூகம் வளரும் சமூகத்திற்கு அதன் எதிர்காலத்தைக் காட்டும் கண்ணாடி’ என்பார் கார்ல் மார்க்ஸ். வளர்ச்சிக்கும் ஞானத்திற்கும் இன்று உலகம் முழுவதிற்கும் ஒரே மையப்புள்ளி, ஞானபீடம் இல்லையென்றாலும், பரிவர்த்தனைக்கும் அதன் மூலம் பலன் பெறுவதற்கும் ஏராளமான வாய்ப்புகள் உள்ளன என்பது வெளிப்படை.

தமிழகம் போன்ற ஒரு மாநிலம் பரப்பளவிலும், மக்கள் தொகையிலும், தனித்துவமான தன்மையிலும் ஒரு ஐரோப்பிய அல்லது லத்தின் அமெரிக்க நாட்டை ஒத்தது. அத்தோடு அனைத்திற்கும் அடிப்படையான பொருளாதாரம் என்பதிலும் இந்த ஒப்பீடு செய்யும் நிலை இருப்பதும் எதார்த்தம். உலகின் ஏனைய நாடுகள், இந்திய நாட்டின் ஏனைய பல மாநிலங்கள் ஆகியவற்றில் இருந்து கற்பதற்கும் அவர்களது வரலாறுகளிலிருந்து தவிர்ப்பதற்கும் ஏராளமான அனுபவங்கள் இருக்கின்றன.

தமிழ் மொழியின் தொன்மை, தொடர்ச்சி, உயிர்ப்பு ஆகியவற்றோடு இந்த மாநிலத்து மக்களின் வளர்ச்சி, மேம்பாடு, கலை, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றிலிருந்து மற்றவர்கள் கற்பதற்கும் ஏராளமான அனுபவங்கள் இருக்கின்றன. கலை, இலக்கியம் மட்டுமல்ல, அறிவியல் தொழில்நுட்பம், சமூகவியல், வளர்ச்சி-மேம்பாடு, சுற்றுச்சூழல் போன்றவற்றிலும், ‘தமிழை உலகிற்கும் - உலகை தமிழிற்கும்’ அறிமுகம் செய்யவும் பரிவர்த்தனைகள் நடக்கவும் தேவைகள் உள்ளன.

அரசும், அரசுத் துறைகளும் இவற்றை கணக்கில் கொண்டு இந்த இயல்களில் நூல்கள் பதிப்பிக்கப்படவும், மொழிபெயர்க்கப்படவும், அவை தமிழகம் முழுவதும் சகலருக்கும் சென்று சேரக்கூடிய வகையில் உருவாக்கப்படவும் நூலகங்கள் மூலம் கிடைக்கச் செய்யவும் குறிப்பான முன்முயற்சிகளை எடுக்க வேணடும் என்பது தமிழ்ச் சமூகம் எல்லாம் தழுவிய முழுமையான அறிவார்ந்த சமூகமாய் மாற வேண்டும் எனும் அவா கொண்டவர்கள் அனைவரின் வேண்டுகோளாய் இருக்கும் எனலாம்.

அந்த வகையில் இனிவரும் ஆண்டுகளில் அரசுத் துறைகள், பப்பாசி, பதிப்பாளர்களின் ஒருங்கிணைப்பு இன்னும் நெருக்கமாகவும், பரந்துபட்டதாக இருக்கவும், சர்வதேசப் புத்தகக் கண்காட்சிக்கு வரும் பதிப்பகங்களின் எண்ணிக்கை அதிகரிக்கவும், அவர்களின் தன்மை இன்னும் பன்முகம் கொண்டதாக இருக்கவும் அரசு ஆவன செய்ய வேண்டும் என்றும் வேண்டுகிறோம்.

**ஆசிரியர் குழு.**



## படித்துப் பாருங்களேன்...

ஆ.சிவசுப்பிரமணியன்

# 1921 மலபார் எழுச்சி

**Nidheesh Narayanan and Vijay Prashad. (Editors) (2022). 1921 Uprising in Malabar, A Collection Of Communist Writings. LeftWord Books, New Delhi 110008.**

*எங்கள்*
*போராட்டத்துக்கான காரணம்:*

*நாங்கள் விளைவித்த அரிசியால்*
*பண்ணையார்களுக்குச்*
*சோறிடுவதை எதிர்க்கிறோம்.*

*எங்கள்*
*போராட்டத்துக்கான காரணம்:*

*எங்களது சொத்துக்களை*
*இங்கிலாந்துக்கு*
*அனுப்புவதை எதிர்க்கிறோம்.*

(கம்பலாத் கோவிந்தன் நாயர்)

இந்திய விடுதலைப் போராட்ட வரலாறானது நீண்ட பாரம்பரியம் கொண்ட ஒன்று. இப்போராட்ட வரலாற்று வரைவின் பொருட்டு போராட்ட நிகழ்வுகள், அதில் பங்கேற்றோர், நிகழ்ந்த காலம் என்பனவற்றின் அடிப்படையில் சில கட்டங்களாகப் பகுத்துக் கொள்ளும் மரபு உள்ளது. இம் மரபில் பரவலாக இரண்டு கட்டங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. இவற்றுள் முதற் கட்டமானது இந்தியாவின் மன்னர்கள், குறுநில மன்னர்கள், பாளையக்காரர்கள், ஆங்கில இராணுவத்தில் பணியாற்றிய இந்தியர்கள் என்போர் பங்கேற்று நடத்திய நிகழ்வுகளை உள்ளடக்கியது. இந்தியாவின் பரந்துபட்ட நிலப்பரப்பு முழுவதிலும் இவை நிகழவில்லை. ஏதேனும் ஒருபகுதியில் நிகழ்ந்த எழுச்சிகளாகவே இவை அமைந்தன. ஆங்கில அரசின் ஆவணங்கள் இவற்றைக் கலகம் என்றே குறிப்பிடும். இவற்றுள் 1857இல் நிகழ்ந்த பெரிய எழுச்சியானது ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக்கு முடிவு கட்டி நேரடியான ஆங்கில அரசின் ஆட்சிக்கு வழிவகுத்தது.

இரண்டாவது கட்டமாக இந்திய தேசியக் காங்கிரசின் தோற்றம் (1885) அமைந்தது. தொடக்கத்தில் உயர்கல்வி பெற்ற இந்தியர்களின் நலனை முன்நிறுத்திய அமைப்பாக விளங்கிய இவ் அமைப்பு சுதேசி இயக்கம் என்ற இயக்கத்தை உருவாக்கிய பின்னர் பல்வேறு தரப்பினரையும் ஈர்த்த அமைப்பாக மாற்றம் பெற்றது. ஆனால் நகரப் புறங்களிலேயே இதன் தாக்கம் மிகுந்திருந்தது. காந்தியின் தலைமை ஏற்பட்ட பின்னரே கிராமப்புறங்களில் இவ்வியக்கம் கால்கொண்டதுடன் வெகுமக்கள் இயக்கமாக மாறியது.

இவ்இரு கட்டங்களும் பாடநூல்களில் பரவலாக இடம் பெற்றவைதான். ஆயினும் இவை இரண்டின் சமூகப்பார்வை என்னவாக இருந்தது என்பது குறித்துப் பாட நூல்கள் பெரிதாக ஆராய்வதில்லை. தோழர் இ.எம்.எஸ்.நம்பூதிரிபாட் (2011:18) இவ் இரண்டு கட்டங்களுக்கும் இடையிலான வேறுபாட்டை இவ்வாறு மதிப்பிட்டுள்ளார்:

"இந்திய தேசிய இயக்கப் போராட்டத்தின் முதற் கட்டத்தில் நிலவுடைமை சார்ந்த மன்னர்கள் தலைமை ஏற்றார்கள்.

இரண்டாவது கட்டத்தில் பூர்ஷ்வாக்கள் தலைமை ஏற்றார்கள். ஆனால் முதலாளித்துவ சமூக அமைப்பு தோன்றுவதற்கு முன்பிருந்த சமூக அமைப்பை இப் பூர்ஷ்வாக்கள் புறந்தள்ளவில்லை. மாறாக அதனுடன் இணக்கம் காட்டினார்கள்.

ஆகையால் இவ்விரு போராட்டக் கட்டங்களையும் மறு ஆய்வு செய்யவேண்டியுள்ளது. இதில் முதலாவது 1857இல் முடிவுற்றது.இரண்டாவது கட்டம் 1947இல் முடிவுற்றது."

இ.எம்.எஸ், குறிப்பிடும் இவ் இரு போராட்டக் கட்டங்களில் வட்டார அளவில் நடந்து முடிந்த தன்னியலார்ந்த போராட்டங்களும் அடங்கும். ஒரு பெரிய அளவிலான திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட போராட்டங்களில் இவை இணைந்து கொள்வதும் உண்டு. இவை பெரும்பாலும் நம் கல்விப்புல வரலாற்றியலாளர்களால் கண்டுகொள்ளப் படுவதில்லை. அப்படியே பதிவானாலும் "நாமரூப" என்பது போல மேலோட்டமான பதிவாகவே அமையும். சில நேரங்களில் திரித்தும் எழுதப்படும்

இதற்கு எடுத்துக்காட்டாக அமைவது இன்றையக் கேரளத்தின் மலபாரப் பகுதியில் 1921இல் நிகழ்ந்த மாப்பிள்ளை முஸ்லிம் விவசாயிகளின் கிளர்ச்சி அமைகிறது. ஆனால் காலனிய அரசின் ஆவணங்களும், அவர்கள் சார்பான நம்மவர்கள் உருவாக்கிய பதிவுகளும் இக் குடியானவர் எழுச்சியை இஸ்லாமியர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையில் நிகழ்ந்த மதக் கலவரமாகவே சித்தரிக்கின்றன. 1921இல் நிகழ்ந்த இவ் எழுச்சியின் நூற்றாண்டு விழாவை ஒட்டி ஒரு வர்க்கப் போராட்டத்தை மதக் கலவரமாக அறிமுகம் செய்யும் முயற்சியில் இந்துத்துவா அமைப்புகள் ஈடுபட்டு வருகின்றன.

ஒரு நூற்றாண்டுக்கு முன் நிகழ்ந்த எழுச்சி என்பதால் இது சமூக மறதிக்கு ஆளாகியுள்ளது. இதன் உண்மையான வரலாற்றுப் பின்புலத்தை அறியாமல் இந்துக்கள் மீதான இஸ்லாமியர்களின் கும்பல் வன்முறை என்ற பரப்புரைக்கு சிலர் ஆளாகிவிடுகின்றனர். இத்தகைய சூழலில் இந்நூல் வெளிவந்துள்ளது.

**நூல்**

இது ஒரு தொகுப்பு நூலாகும். முகவுரை, அறிமுக உரை நீங்கலாக ஆறு கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இக் கட்டுரைகளில் ஒன்றாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1946 ஆகஸ்ட் 18, 19, நாட்களில் கோழிக்கோடு நகரில் கூடியபோது மாப்பிள்ளை எழுச்சி குறித்து நிறைவேற்றிய தீர்மானம் இடம் பெற்றுள்ளது. ஒரு முக்கிய வரலாற்றாவணம் என்ற முறையில் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

எஞ்சிய ஐந்து கட்டுரைகளில் நான்கு கட்டுரைகள் மாரக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தோழர்களான இ.எம்.எஸ்(1943), ஏ.கே.ஜி(1946) அபினி முகர்ஜி (1922), சுமேந்திரநாத் தாகூர் (1937), ஆகியோர் எழுதியவை. (அடைப்புக் குறிக்குள் இவை வெளிவந்த ஆண்டு இடம் பெற்றுள்ளது). இறுதிக் கட்டுரை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட் பீரோ உறுப்பினரான சுபாஷினி அலி 2021இல் எழுதியது. இதன் அடிப்படையிலேயே இந்நூலின் முகப்பில் "கம்யூனிஸ்ட் எழுத்துக்களின் தொகுப்பு" (A Collection of Communist Writings ) என்ற குறிப்பு இடம் பெற்றுள்ளது.

நூலின் முகவுரையை கேரள முதலமைச்சர் தோழர் பினாராய் விஜயன் எழுதியுள்ளார்.மலபார் பகுதியை உள்ளடக்கிய கேரளத்தின் முதலமைச்சர் என்பதன் அடிப்படையில் கேட்டுப் பெற்ற மரியாதை அடிப்படையிலான முகவுரை என்று யாரும் கருதினால் அவர்கள் ஏமாற்றம் அடைவார்கள்.. இம் முகவுரையும் ஓர் ஆய்வுக் கட்டுரையாகவே அமைந்துள்ளமை சிறப்புக்குரிய ஒன்று.

மொழிக் குன்னத் பிராமதன் நம்பூதிரிபாட் எனபவர் கிலாபத் போராட்டத்தில் கைதாகி நீண்டகாலம் சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டவர். மலபார் எழுச்சிக்குப் பின்னர் அவர் எழுதிய சுயசரிதையில் இருந்து பின்வரும் தொடர்கள் இம் முன்னுரையில் இடம் பெற்றுள்ளன:

“இவ் எழுச்சிக்கு வகுப்புவாதப் பூசல் மூல காரணமல்ல.அரசியல் ஒடுக்கு முறையும் காவல் துறையின் மூர்க்கத்தனமான நடவடிக்கைகளும் அமைதியின்மையைத் தோற்றுவித்தன. இவ்எழுச்சியானது விடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதிதான்.”

நூலின் பதிப்பாசிரியர்கள் இருவரில் ஒருவரான நிதிஷ் நாராயணன் சமூக ஆய்வு நிறுவனம் ஒன்றில் *(Tricontinental Institute for Social Research)* ஆய்வாளராகப் பணியாற்றுவதுடன் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்ட ஆய்வாளராகவும் பணியாற்றி வருகிறார். மற்றொரு பதிப்பாசிரியரான விஜயபிரசாத் மேலே குறிப்பிட்ட ஆய்வு நிறுவனத்தில் நிர்வாக இயக்குநராக உள்ளார். "லெஃப்ட் வேர்டு” வெளியீடுகளின் ஆசிரியராகவும் பணியாற்றி வருகிறார்.

இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள கட்டுரைகளின் சாரமாகவும் ஆழமும் தெளிவும் கொண்டதாகவும் இருவரும் இணைந்து எழுதியுள்ள அறிமுக உரை அமைந்துள்ளமை பாராட்டுதலுக்குரியது.

இந்நூலை அறிமுகம் செய்துகொள்ளும் முன் பின்வரும் மூன்று அடிப்படைச் செய்திகளை அறிந்துகொள்வது அவசியமாகிறது. (1) இப் போராட்ட காலத்தில் மலபார் பகுதியில் நடைமுறையில் இருந்த வேளாண் உறவுகள்.(2)மாப்பிள்ளை முஸ்லிம்கள். (3)கிலாபத் இயக்கம்.

**வேளாண் உறவுகள்:**

மாப்பிள்ளை முஸ்லிம்களின் கிளர்ச்சி நடந்த காலத்தில் இன்றைய மலபார் மாவட்டம் அன்றையச் சென்னை மாநிலத்தில் *(Madras Presidency)* இணைந்திருந்தது. நிர்வாக அடிப்படையில் சென்னை மாநிலத்தில் இணைந்திருந்தாலும் மொழி, பண்பாடு அடிப்படையில் கேரளத்தின் தாக்கத்தைக் கொண்டிருந்தது. அப்போதையக் கேரளமானது மன்னர் ஆட்சிப் பகுதியாக விளங்கியதுடன் மட்டுமின்றி நிலமானியச் சமூகத்தின் எதிர்மறைக் கூறுகளையும் சனாதனச் சிந்தனைகளையும் உள்வாங்கி இருந்தது. இப்போக்கு மலபார் பகுதியிலும் நிலவியது.

இதன் அடிப்படையில் கேரளத்தின் சாதியப் படிநிலையில் முதலாவது இடத்தில் நம்பூதிரிப் பிராமணர்களும் இரண்டாவது இடத்தில் நாயர் சமூகத்தினரும் இருந்தனர்.பெரும்பாலான சாகுபடி நிலங்களும் தோப்புகளும் இவர்களுக்கே உரியதாக இருந்தன. "ஜன்மிகள்” என்றழைக்கப்பட்ட இப் பெரு நிலக்கிழார்களின் உழுகுடிகளாகவும், குத்தகையாளர்களாகவும் ஏனைய சமூகத்தினர் விளங்கினர். இவர்களுக்குப் பணிவழங்குதல், குடிஇருப்பு மனையில் வாழ அனுமதித்தல், குத்தகையாளராகத் தொடரச் செய்தல் என்பன ஜன்மியின் விருப்பு வெறுப்புகளுக்கு ஆட்பட்டதாகவே இருந்தது. (மலையாள மொழியின் கவிஞர்களில் ஒருவரான சங்கம்புழா என்பவர் எழுதியுள்ள “செவ்வாழை” என்ற நெடுங்கவிதை இந்நிலை குறித்த சிறந்த இலக்கியப் பதிவாகும்) நிலவெளியேற்றம் செய்தல், வேலை தர மறுத்தல் என்பன அவர்களை அச்சுறுத்தும் ஆயுதங்களாக அமைந்தன. இந்த வேளாண் உறவு நிலைதான் மலபார்ப்பகுதியிலும் நிலவியது.

மலபார்ப் பகுதியின் ஜன்மிகளாக நம்பூதிரிப் பிராமணர்களும் நாயர்களும் இருந்தனர். மத அடிப்படையில் இவர்கள் இந்துக்கள். இவர்களைச் சார்ந்து நிற்கும் உழுகுடிகளாகவும் குத்தகைதாரர்களாகவும் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருந்தனர். மலபார்ப்பகுதிக்கு உரித்தான இவ் வேளாண் உறவு முறையானது இந்துக்களையும் இஸ்லாமியர்களையும் எதிர் எதிர் நிலையில் நிறுத்தும் தன்மை கொண்டதாக இருந்தது.

மன்னர் ஆட்சிக் காலத்தில் நிலவிய இவ்வேளாண் உறவுமுறையானது ஆங்கிலக் காலனிய ஆட்சிக் காலத்திலும் தொடர்ந்தது. மன்னர்களைப் போன்று இவர்களும் நிலவுடைமையாளர்களின் நலனைப் பேணுபவர்களாகவே விளங்கினர். தாம் விதிக்கும் வரியை ஒழுங்காகச் செலுத்திவரும் வரையில் உழுகுடிகள் மீது அவர்கள் நிகழ்த்தும் அத்துமீறல்களை ஆங்கில அரசு கண்டு கொள்ளாதிருந்தது.

காலனிய ஆட்சியாளர்கள் தங்கள் விருப்பம் போல் நிலவரியை உயர்த்தும் போதெல்லாம், நில உடைமையாளர்கள் இதை நிலக் குத்தகைதாரர்கள் மீது சுமத்தினர். இதனால் பாதிக்கப்பட்ட குத்தகை விவசாயிகள் காலனிய எதிர்ப்பாளர்களாயினர். இவர்களின் எதிர்ப்பு சிலநேரங்களில் வன்முறையாகவும் மாறியது. இதனால் 1836க்கு முன் கலகம் ஒன்று நிகழ்ந்தது. இது ஆங்காங்கே தொடர்ந்தது. ஆங்கில உயர் அதிகாரிகள் சிலர் கொலை செய்யப்பட்டனர். இவர்களைத் தண்டிப்பதற்கென்றே புதிய சட்டங்களும் இயற்றப்பட்டன. எவரையும் கைது செய்யும் அதிகாரம் காவல் துறைக்கு வழங்கப்பட்டது. உழுகுடிகள் குத்தகைதாரர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. சிலர் நாடு கடத்தலுக்கும் ஆளாயினர்.

**மாப்பிள்ளை முஸ்லிம்கள்**


மலபார் எழுச்சியில் குறிப்பிடப்படும் முஸ்லிம்கள் மாப்பிள்ளை முஸ்லிம்கள் என்றழைக்கப்படுவதற்கு ஒரு வரலாற்றுக் காரணம் உண்டு. அரேபிய நாட்டு முஸ்லிம் வணிகர்கள் மலபார்க் கடற்கரையில் இறங்கி அங்கும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளிலும் சிறிது காலம் தங்கி வாணிபம் மேற்கொண்டு

திரும்புவது வழக்கம். அரேபியாவிலிருந்து இங்கு வருவதற்கும் இங்கிருந்து அங்குத் திரும்பிச் செல்லவும் சிறிது காலம் பிடிக்கும். ஏனெனில் கடல் வாணிபம் என்பது ஏற்றுமதி இறக்குமதி சார்ந்த ஒன்று. எனவே விற்பனை, கொள்முதல் என்ற இரண்டையும் மேற்கொள்ளவேண்டும். மேலும் காற்றின் துணையுடன்தான் கப்பல்கள் இயங்கியதால் பயணகாலம் நீண்டதாய் அமைந்தது. இதனால் குடும்பத்தை விட்டு அதிககாலம் பிரிந்திருக்க வேண்டிய நிலை இருந்தது.

பலதாரமணத்தை அவர்களது மதம் தடை செய்யவில்லை என்பதால் அவர்கள் மலபார்ப் பகுதியில் தங்கியபோது அங்கு வாழ்ந்துவந்த இந்து சமூகப் பெண்களை அவர்களது குடும்பத்தின் இசைவுடன் மதம் மாற்றம் செய்து திருமணம் செய்துகொண்டு குடும்பம் நடத்தினர். இத் திருமண உறவில் பிறந்து வளர்ந்தவர்களே மாப்பிள்ளை முஸ்லிம்கள் என்ற சமூகமானார்கள் என்ற கருத்து உண்டு. தீண்டாமைக்கு ஆட்பட்டிருந்த மக்கள் பிரிவினரும் தம்மீதான சமூக ஒடுக்குமுறைகளிலிருந்து வெளிவரும் வழிமுறையாக இஸ்லாமியர்களாக மதம் மாறியுள்ளனர். வாணிப மரபினர்களாக மாறியதால் இவர்கள் வாணிபம் மேற்கொண்டு வளம் பெற்றார்கள். 15, 16 ஆவது நூற்றாண்டுகளில் போர்ச்சுக்கீசியர்கள் இப்பகுதியில் வாணிபம் மற்றும் அரசியல் ஆதிக்கம் செலுத்தியபோது அவர்களை எதிர்த்துத் தீரமுடன் போராடினார்கள். இவ்வகையில் இவர்கள் முதல் காலனிய எதிர்ப்புப் போராளிகளானார்கள். குஞ்சாலி மரக்காயர் என்பவர் குறிப்பிடத்தக்க விடுதலைப் போராளியாக விளங்கினார். இதனால் இவரது மறைவையடுத்து வந்த போராளிகளும் குஞ்சாலி என்றே அழைக்கப்பட்டனர்.

ஆங்கில ஆதிக்கம் தொடங்கியதும் இவர்களது வாணிபம் சிதைவுற்றது. ஒரு சிலரால் மட்டுமே வாணிபத்தில் தாக்குப் பிடிக்க முடிந்தது. வாணிபத்தை முழுமையாக மேற்கொள்ள முடியாதவர்களில் பெரும்பாலோர் நாயர், நம்பூதிரி நில உடைமையாளர்களிடம் குத்தகை விவசாயிகளாகவும் உழுகுடிகளாகவும் மாறினர். இவர்களில் பெரும்பாலோர் ஏழைகளாகவே இருந்தனர். எரநாடு பகுதியில் வாழும் மாப்பிள்ளைகள் மரவியாபாரம் செய்பவர்கள். ஓரளவு வளம்படைத்தவர்கள். ஆனால் இவர்களது எண்ணிக்கை குறைவுதான். நீலாம்பூர் வண்டு ஊர் ஆகிய மலையடிவார ஊர்களில் வாழும் ஒரு சில மாப்பிள்ளைகள் அரசு நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து வளமானவர்களாக உள்ளனர்.

முதல் உலகப் போரின் போது இவர்களில் பலர் ஆங்கில இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றினர். நாடு கடந்து உலகின் பல பகுதிகளுக்கும் சென்றதால்




இவர்களது அறிவு விரிவடைந்ததுடன் .சுயமரியாதை உணர்வும் உருப்பெற்றது. போர் முடிந்த பின்னர் 1915 இல் படைப் பிரிவுகள் கலைக்கப்பட்டதால் இவர்கள் நாடு திரும்பினர். நன்கு பயிற்சி பெற்ற படைவீரர்கள் என்பதால் நம்பூதிரி, நாயர் ஜென்மிகளின் சுரண்டலையும் ஆதிக்கத்தையும் எதிர்த்துப் போராடும் திடம் இவர்களிடம் இருந்தது.

மாப்பிள்ளைகள் முக்கியமான தொழில் வேளாண்மைதான். காடு திருத்தி கழனியாக்கும் கடினமான உழைப்பாளிகளாக விளங்கினர். இன்றும். மூங்கில் காடுகளிலும் ரப்பர் தோட்டங்களிலும் பணியாற்றுகிறார்கள,

**கிலாபத் இயக்கம்**

ஜன்மிகள், குத்தகை விவசாயிகள், உழுகுடிகள் என வர்க்க முரண்பாடு நிலவிய மலபார்ப் பகுதியில் ஜன்மி எதிர்ப்புப் போராட்டம் ஒரு பேரியக்கமாக மாறியதில் கிலாபத் இயக்கம் ஒத்துழையாமை இயக்கம் என்ற இந்திய அளவிலான இரு இயக்கங்களுக்கும் குறிப்பிடத்தக்க அளவிலான பங்களிப்பு உண்டு. இவை இரண்டும் அடிப்படையில் தனித்தனி இயக்கங்கள் என்றாலும் ஒன்றுடன் ஒன்று இந்திய அளவில் இணைந்திருந்தன. இவற்றுள் கிலாபத் இயக்கத்தின் தாக்கம் 1921 மலபார் எழுச்சியில் மிகுந்திருந்தது.

இஸ்லாத்தை அறிமுகப்படுத்திய முகமது நபி இஸ்லாமியர் வாழும் பகுதிகளில் இஸ்லாமிய சமய ஆட்சியை நிறுவினார். அவரது மறைவிற்குப் பின்னர் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தியவர்கள் "கலிபாக்கள்" என்று அழைக்கப்பட்டனர். இவர்களது ஆட்சி இஸ்லாமிய சமயம் சார்ந்த ஆட்சியாக இருந்தமையால் இவர்கள் மன்னர்களாக மட்டுமின்றி உலக இஸ்லாமியர்களின் தலைவர்களாகவும் கருதப்பட்டனர்.

முதல் உலகப்போரில் அணிசேர்ந்த நாடுகள் அச்சு நாடுகள், நேசநாடுகள் என இரு பிரிவுகளாகப் பிரிந்து நின்று போரிட்டன. இவற்றுள் இங்கிலாந்து தலைமை ஏற்றிருந்த நேச நாடுகள் அணி வெற்றி பெற்றது. தோல்வியுற்ற அச்சுநாடுகள் அணியில் உதுமானியப் பேரரசு என்ற பெயரில் துருக்கி இணைந்திருந்து. போரில் துருக்கி தோற்றமையால் அதன் பலபகுதிகளை வெற்றியடைந்த இங்கிலாந்து கைப்பற்றியது. அத்துடன். அதன் கலிபாவாவை(மன்னர்) வீட்டுச் சிறையில் வைத்தது. தங்கள் சமயத் தலைவரைக் காவலில் வைத்ததைக் கண்டித்து உலக முஸ்லிம்கள் கிளர்ந்தெழுந்தனர். அவரை விடுவிக்க ஆயுதப் போராட்டத்திற்கும் ஆயத்தமானார்கள். இவர்களுள் இந்திய முஸ்லீம்களும் அடங்குவர். இவர்களது எதிர்ப்புணர்வின் அமைப்பு வடிவமாக கிலாபத் இயக்கம் அமைந்தது (கிலாபத்:எதிர்த்தல்).

மற்றொரு பக்கம் 1920 செப்டம்பரில் சிறப்பு மாநாடு ஒன்றை இ.தே.காங்கிரஸ் கொல்கத்தாவில் நடத்தியது. காந்தியின் தலைமையில் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்குவது என்று அதில் முடிவெடுக்கப்பட்டது. இவ்இயக்கத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் கிலாபத் இயக்கத்தை ஆதரிப்பது என்ற முடிவை இ.தே. காங்கிரஸ் எடுத்தது. இம்முடிவின் வழி இரு அமைப்புகளும் நெருக்கமாகி தத்தம் வலிமையை வலுப்படுத்திக் கொண்டன. இது மலபார்ப் பகுதியிலும் வெளிப்பட்டது

1920 இல் மலபாரின் எரநாடு வட்டத்தில் உள்ள மஞ்சேரியில் இ.தே.காங்கிரஸ் மாவட்ட மாநாடு நடத்தியது. இப் பகுதியில் காங்கிரஸ் அமைப்பானது நம்பூதிரி, நாயர் ஆதிக்கத்தில் இருந்தது.இவர்கள் கனம்தார் என்றழைக்கப்படும் பெரு நிலக்கிழார்களாகவும் வழக்கறிஞர்களாகவும் இருந்தனர்.

1920 கிலாபத் இயக்கத்துடன் காந்தியும் காங்கிரசும் மேற்கொண்ட ஆதரவுப் போக்கின் அடிப்படையில் மாப்பிள்ளைகள் ஒத்துழையாமை இயக்கத்துடன் நெருங்கிவரத் தொடங்கினர். இதன் அடிப்படையிலேயே இவர்கள் மிகுதியாக வாழும் மஞ்சேரி நகரை மாநாடு நடத்தும் இடமாகத் தேர்வு செய்திருந்தனர்.

1920 ஆகஸ்டில் மலபாரின் கோழிக்கோடு நகரில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் காந்தியும் கிலாபத் இயக்கத்தின் தலைவர்களில் ஒருவருமான சௌகத் அலியும் கலந்து கொண்டு உரையாற்றினர். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்பில் காங்கிரசின் ஒத்துழையாமை இயக்கமும் இஸ்லாமியர்களின் கிலாபத் இயக்கமும் ஒன்றிணைவதன் அவசியம் இப் பொதுக்கூட்டத்தின் வழி உணர்த்தப்பட்டது. இருப்பினும் கிலாபத் இயக்கத்துடன் இணக்கம் காட்டும் போக்கிற்கு எதிரான கருத்துடையோரும் காங்கிரசில் இருந்தனர்.

தமது உரையில் இந்துக்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையிலான நட்புறவின் அவசியத்தை காந்தி வலியுறுத்தினார்.

காந்தியின் இம்முயற்சிக்கு மாப்பிள்ளைகளிடம் வரவேற்பு உருவானது. இவர்களது தலைவர்களும் மலபார்ப் பகுதி காங்கிரஸ் தலைவர்களும் ஒருவருக்கொருவர் நெருக்கம் காட்ட ஆரம்பித்தனர். ஒத்துழையாமை இயக்கம் முன்வைத்த அந்நியப் பொருள்கள், அந்நிய நிறுவனங்களைப் புறக்கணித்தல், காலனிய அரசுப் பதவிகளைத் துறத்தல் என்பனவற்றை அவர்கள் நடைமுறைப் படுத்தத் தொடங்கினர். இச்செயல்கள் சமயம் சார்ந்தவை அல்ல என்பதையும் வேளாண் உறவுச் சிக்கலை மையமாகக் கொண்டவை என்பதையும் ஆங்கில அரசு உணரலாயிற்று. மலபார் மாவட்டத்தின் ஆட்சித் தலைவராக இருந்த இ.இ. தாமஸ் என்பவர் 1821 சனவரியில் எழுதிய குறிப்பில் இதைக் குறிப்பிட்டுள்ளார்.

**எழுச்சியின் வெளிப்பாடு**

சுயராச்சியம் என்ற சிந்தனை அவர்களிடம் வலுப்பெறத் தொடங்கியது. மலபாரின் எரநாடு, வள்ளுவநாடு என்ற பகுதிகளை முற்றுகை இட்டதுடன் அவற்றை விடுதலை பெற்ற சுயேச்சையான பகுதிகள் என்று அறிவித்தனர். மூன்று மாதங்கள் வரை இந் நிலைமை நீடித்தது. காலனிய ஆட்சி அதிகாரிகள் மக்களின் தாக்குதலுக்கு ஆளாயினர். வரியை ஒழித்ததுடன்.விவசாயிகள் வாங்கிய கடன்களைப் பதிவு செய்திருந்த அரசு ஆவணங்களையும் அழித்தனர். புதிய கடவுச் சீட்டுக்களை வழங்கினர். சமய வேறுபாடில்லாத சுதந்திரக் குடியரசாக அப்பகுதியை அறிவித்தனர்.


மலபார் விவசாயிகள் எழுச்சியின் (1921) தொடர் நிகழ்வுகளை அடுத்த இதழில் காண்போம்.

தொடரும்...


●

கட்டுரையாளர், தமிழர் சமூக வரலாற்று ஆய்வாளர்,
மார்க்சிய சிந்தனையாளர்


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்





₹ 180/-




₹ 350/-




₹ 45/-





₹ 260/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் தொ.பரமசிவன் அவர்களின் நூல்கள்





₹ 270/-





₹ 215/-





₹ 215/-




₹ 400/-




₹ 55/-




₹ 75/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

கட்டுரை



# தமிழ் நாட்டில்
## தமிழ் பயிற்று மொழிக்கான சோதனை ஓட்டம்
## (1960-1961)

டாக்டர். சு. நரேந்திரன்

**ஐம்பதுகளில் தமிழ்வழிக் கல்வியின் முன்னேற்றம்**

சென்னை மாகாணத்திற்கு உட்பட்டிருந்த பள்ளிகளில் தமிழ், தெலுங்கு போன்ற மாகாண மொழிவழியாகப் பயிற்றுவிக்கும் பள்ளிகளின் எண்ணிக்கை 1948 முதல் 1950 வரையிலான காலப் பகுதிகளில் குறிப்பிட்டுச் சொல்லுமளவிற்குக் கூடியது.

| ஆண்டு | மொத்தப் பள்ளிகள் | தாய்மொழி வழிப் பள்ளிகள் | விழுக்காடு |
|---|---|---|---|
| 1948 | 626 | 527 | 83 |
| 1949 | 693 | 647 | 93 |
| 1950 | 769 | 749 | 97 |

15-6-1946 ஜூன் 15இல் ஆங்கிலம் இரண்டாவது மொழி, வட்டார மொழி முதல் மொழி என்கிற குறிப்பாணையை அரசு வெளியிட்டது. இதன் பலனாக, 1948இல் 626 பள்ளிகளில் 527 பள்ளிகளும், 1949இல் 693 பள்ளிகளும், 1950இல் 769 பள்ளிகளும் எஸ்.எஸ்.எல்.சி. வரை தாய்மொழியிலேயே கற்பித்தன. ஆங்கிலப் பாடம் ஆறாம் வகுப்பிலிருந்து நடத்தப்பட்டது.

தாய்மொழிவழிக் கல்வியின் நிலைபற்றி அறிய அரசு அமைத்த கமிட்டி (1956) தாய்மொழிவழிக் கல்விக்கு மாறியதில் எந்தச் சிரமமும் இல்லை. தாய்மொழிவழிக் கல்வி சோதனைக் கட்டத்தைத் தாண்டி வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. மாணவர்களும் தங்கள் கருத்துக்களைத் தாய்மொழியில் திறம்படத் தெரிவிக்கின்றனர் என்று குறிக்கப்பட்டது.

1956இல் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மாறியது வெற்றி பெற்றது. முழுமையுற்றது. ஆனால், அதன்பின் காட்சிமாறியது. ஆங்கிலோ - இந்தியப் பள்ளிகள், மத்திய அரசுப்பள்ளிகள், தனியார் பள்ளிகள் பல்கிப் பெருகவே, மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதையாக ஆங்கிலம் முதன்மை பெறத்தொடங்கியது. அதன் பயனாக, 1968இல் அரசு அறிவித்த தமிழ் பயிற்றுமொழிக் கொள்கை பலத்த எதிர்ப்புக்கு ஆளானது. பயிற்றுமொழி அரசியலாக்கப்பட்டது.

இதற்கிடையில் 1960களில் கல்லூரிகளில் தமிழைப் பயிற்றுமொழியாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1960 - 61இல் கோவை அரசினர் கல்லூரியில் இச்சோதனை மேற்கொள்ளப்பட்டது. 1966 - 67இல் புதுமுக வகுப்பிலும் (எல்லாக் கல்லூரிகளிலும் ஒரு பிரிவு) 67 - 68 பி.எஸ்ஸி. வகுப்பிலும் சோதனை நடந்தது. இதற்கு முன்பே, 1948இல் இண்டர்மீடியட் வகுப்பில் திருச்சி நேஷனல் கல்லூரி, கோவை, சேலம் அரசினர் கல்லூரிகளில் தமிழ் பயிற்றுமொழியாக இருந்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் ஏறத்தாழ இதே காலகட்டத்தில் அறிவியல் பாடங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதனைச் சற்று விரிவாகப் பார்ப்போம்.

**மாநாட்டுத் தீர்மானம்**

இதன் பிறகு 1950, மே மாதம் கோவை நகரில் பைந்தமிழ் மாநாடு நடைபெற்றதில் தமிழ்நாட்டில் தமிழ்மொழி கட்டாயப் பாடமாக அமைந்திருப்பது அவசியமாகையால் அதை அனுசரித்து பாடத் திட்டத்தை அமைக்க வேண்டுமென இம்மாநாடு வலியுறுத்திய தீர்மானத்தை அவினாசிலிங்கமும், கி.வா. ஜகந்நாதனும் முன்மொழிந்தனர் என்பதும் இங்கு நினைவுகூர வேண்டியுள்ளது.

1950இல் மாதவராவைக் கல்வியமைச்சராகக் கொண்டபோது பிறப்பிக்கப்பட்ட ஆணையிலும் 6 ஆம் வகுப்பு முதல் 11ஆம் வகுப்பு வரை இரண்டாவது மொழி ஆங்கிலம் கட்டாயம். மூன்றாம்மொழி இந்தி கட்டாயம். முதல் மொழியாக இந்திய மொழிகளில் ஏதேனும் ஒன்று அது தமிழாக இருக்கலாம். இல்லாமலும் போகலாம் என்று கூறுகிறது. இதிலும் தமிழ் கட்டாயம் என்கிற நிலை உருவாகவில்லை. எவ்வாறு என்றால் தமிழ், இந்தி, கன்னடம், தெலுங்கு, மலையாளம், உருது, குஜராத்தி, சமஸ்கிருதம், அரபி, பெர்சியன், பிரெஞ்சு, இலத்தீன், ஜெர்மன் ஆகிய மொழிகளுள் ஏதேனும் ஒன்றினைப் பியிற்சி மொழியாகக் கொள்ளலாம் என்று இவ்வறிக்கை கூறியது. இவ்வறிக்கை தமிழின்றி உயர்நிலைப் பள்ளி படிக்க வழி வகுத்தது.

1952, ஜூலை 25 வரவு செலவுத் திட்ட அறிக்கை விவாதத்தில் கலந்து கொண்ட முதல்வர் ராஜாஜி அரசாங்க நடவடிக்கை திருச்சி மாவட்டத்தில் பரிட்சார்த்தமாகத் தமிழில் நடத்தி வருவது உண்மைதான். ஆனால், அதை விரிவுபடுத்த விரும்பவில்லை என்று கூறினார். மற்றைய இடங்களில் ஆங்கிலத்தில் நடப்பது அறிந்து வி.ஆர்.கிருஷ்ண அய்யர் “ஆங்கிலேயர்களை விரட்டிய பின்பும் தொடர்ந்து அவர்கள் விட்டுச் சென்ற மொழியைப் பயன்படுத்துவது மிகவும் அவமானத்தைத் தரக்கூடிய ஒன்றாகும்” என்றார். இதைத் தொடர்ந்து கருத்திருமன் பேசியது: (4.12.52)

“ஆங்கிலப் பொதுப் பாஷையை வைத்துக் கொண்டு நாம் சுதந்திரப் போராட்டத்தைக் கூட்டாக நடத்த முடிந்தது... ஆகையினாலே, ஒருவரை ஒருவர் உணர்ந்து கொள்வதற்கு வசதியளித்த பொதுமொழி ஆங்கிலத்தை நாம் ஒழிக்க முயற்சி செய்யக்கூடாது” என்றார்.

கருத்திருமனுக்குப் பின் பேசிய டி.எம்.நாராயணசாமிப் பிள்ளை, “தமிழுக்கு எதிர்காலத்தில் ஓர் உயர்வையோ, மேம்பாட்டையோ, தரத்தையோ தரவேண்டுமானால் ஆங்கிலம் இருந்தே தீரவேண்டும்... ஆங்கிலத்தின் துணையில்லாமல் ஒருநாளும் தமிழ் குறைவின்றி மேன்மையடைய முடியாது” என்று கூறினார்.

“கல்லூரிகளும், பள்ளிகளிலும் ஆங்கிலமே தொடர்ந்து பயன்படுத்த வேண்டுமென்பதை ஆதரிக்கிறோம். இன்று மத்திய அரசில் ஆட்சி மொழியாக ஆங்கிலம் இருக்கிறது. பதினைந்து ஆண்டுகள் கழித்து இந்தி புகுத்தப்பட வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு இந்தி ஆட்சிமொழி ஆவதில் எனக்கு ஆட்சேபணை ஏதுமில்லை” என்று ராஜா முத்தையா செட்டியார் பேசினார்.

இக்காலகட்டத்தில் இந்தியைக் கட்டாயமாக்க பள்ளிகளில் புகுத்த வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தபோது, சென்னை மாநிலத்தின் தீர்ப்பு வேறுவிதமாக இருந்தது. ஆங்கிலம் தொடர வேண்டுமென்ற ஆசையும், நாட்டின் ஒருமைப்பாட்டைக் காக்க இந்தியைக் கற்க வேண்டும் என்ற வற்புறுத்தலும், எங்கள் தாய்மொழி எழுச்சி பெற வேண்டும் என்ற எண்ணப் போக்கும் விடாது மோதிய காலகட்டம் இது.

ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு காமராசர் முதலமைச்சர் பதவி ஏற்றதும் தமிழுக்கு ஏற்றம் கொடுத்தார்.

சி.சுப்ரமணியம்-5ஆம் வகுப்பிலிருந்து ஆங்கிலம். காமராசரின் கல்வி அமைச்சரான சி.சுப்ரமணியம் ஆங்கிலத்தை 5ஆம் வகுப்பிலிருந்து மொழிப் பயிற்சிக்கான ஆணையைப் பிறப்பித்தார். எல்லாப் பள்ளிகளிலும் இந்தியைப் புகுத்தினார்.

இந்தித் திணிப்பு குறித்து ஆளுநர் உரையின்மீது (2.8.55) பி.அரங்கசாமி ரெட்டியார் பேசியதாவது: "சமீபத்தில் 2 வார காலமாகத் தென்னாட்டில் ஒரு புரட்சிகரமான செய்தி பரவி வந்தது. இந்தி மொழியை எதிர்ப்பதன் அறிகுறியாக 1.8.1955இல் தேசியக் கொடியை எரிப்பது எனத் திராவிடக் கழகத்தார் முடிவு செய்து ஒரு பெரிய கிளர்ச்சியைச் செய்து வந்தார்கள். 10, 15 நாட்கள் கிளர்ச்சி இருந்திருக்கிறது. இது பெருமைப்படக்கூடிய விஷயம் அல்ல. தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் தமிழ்மொழி ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமானால், அதற்கு விரோதமான செயல்கள் இருக்கக் கூடாது. இப்பொழுது கார்டு, கவர் முதலியவைகளில் பூராவும் இந்தி மணியார்டர் பாரங்கள். பி.ஏ., படித்தவர்கள் கூட வாங்கிப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இருக்கின்றன... இந்தியைக் கட்டாயமாகப் போதித்து அதை ஆட்சி மொழியாக ஆக்க வேண்டுமென்ற ஏற்பாடு இல்லையென்று சொல்லுகிறார்களேயொழிய, தமிழ் ஆட்சிமொழி ஆக்குவதற்கு இப்போது எந்த விதி ஏற்பாடும் செய்யப்படவில்லை."

இவ்வுரைக்கு அடுத்த நாள் (3.8.1955) ப.ஜீவானந்தம் பேசுகையில், "இந்த இராஜ்ஜியத்தின் ஆட்சிமொழி, இந்த இராஜ்ஜியத்தின் கல்லூரிகளில் இருக்க வேண்டிய போதனா மொழி. இதைப்பற்றி ஒரு வார்த்தைகூட கவர்னர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது... கல்லூரிகளிலும் கூட ஆங்கிலம் இருந்த ஸ்தானத்தில் இந்தி போதனா மொழியாகத் திணிக்கக்கூடிய ஆபத்தும் இருக்கிறது. ஆகவேதான் உடனடியாக நமது இராஜ்ஜியக் கல்லூரிகளில் நம் நாட்டில் வழங்கும் தமிழ்மொழியைப் போதனா மொழியாக ஏற்படுத்த வேண்டும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்" என்று உரையாற்றினார்.

இதனை ஒட்டி ப.ஜீவானந்தம் சட்ட சபையை விடுத்து பொது நிகழ்ச்சிகளிலும் இக்கருத்தை வலியுறுத்தினார்.

"தமிழ்நாட்டில் சென்னை சர்க்காரின் ஆட்சி மொழி தமிழ்மொழியாக இருக்க வேண்டும். சட்ட சபையில் தமிழ்மொழியே பேசவேண்டும். சர்க்கார் நிர்வாகம் அனைத்தும் போலீஸ் ஸ்டேசன் முதல் கச்சேரி வரை தமிழ் மொழியில் நடவடிக்கைகள் நடைபெற வேண்டும். நீதிமன்றங்களிலும் பள்ளிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் விஞ்ஞானமும் தமிழ் மொழியிலேயே போதிக்கப்படவேண்டும். இது 'ஸ்புட்னிக் காலம்' என்பதை உணரவேண்டும். தமிழ் மொழியில் விஞ்ஞானத்தைப் பயிற்றுவிக்க முடியாது என்று சொல்லுகிறார்கள். முடியும் என்று சொல்கிறது கம்யூனிஸ்ட் கட்சி. ஸ்புட்னிக் ஆங்கிலத்தில் பயின்றவர்களால் கண்டுபிடிக்கப்பட்டதா? அவர்கள் தாய்மொழியின் மூலம் விஞ்ஞானத்தைப் பயின்று அல்லவா ஸ்புட்னிக்கைக் கண்டுபிடித்தார்கள். விஞ்ஞானத்தைத் தன் தாய் மொழியில் போதித்தால் இந்தக் கூட்டத்தில் உள்ள மாணவர்கள் வருங்காலத்தில் விஞ்ஞானிகளாக வரமாட்டார்கள் என்று கூரமுடியுமா?" என்று முழக்கமிட்டதும் இங்கு நினைவு கூரத்தக்கது (பொதுவுடைமை வளர்த்த தமிழ் சு.பொ.அகத்தியலிங்கம், பக்.21).

1953ஆம் ஆண்டு அன்றைய சென்னை ராஜதானியில் ஆந்திர மாகாணம் அமைப்பதற்கான மசோதாவின் மீது ம.பொ.சி பேசும் போதும் ஆட்சி மொழியைக் குறித்த அவசியம் வலியுறுத்தப்பட்டது.

"இந்தியாவுக்குக் கிடைத்த சுதந்திரம் சமுதாயத்தின் மேல்தளத்தில் இருப்பவர்களுக்கே பயன்படுகிறது. அடித்தளத்தில் இருப்பவர்கள் பயன்படுத்த முடியவில்லை. பொதுமக்கள் பேசுகின்ற மொழியை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி அமைய வேண்டுவது இன்றியமையாதது. அப்பொழுது தான் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருப்பவர்கள் மற்றவர்களோடு சமத்துவமாக வாழமுடியும்" என்று கூறினார்.

இங்கு நாம் நினைவில் நிறுத்த வேண்டியது 1953ஆம் ஆண்டிலே ஆந்திரமும் 1956இல் கருநாடகமும், கேரளமும், சென்னை மாகாணத்திலிருந்து பிரிந்தன என்பதாகும். ஆந்திரர்களும், கன்னடியர்களும், ஒரியா மொழி பேசுபவர்களும் தங்களுக்கென்ற தனி மாநிலமும், தங்கள் மொழி வழக்கில் வரவேண்டும் என்ற கோரிக்கைகள் கேட்ட வண்ணம் இருந்த நேரத்தில், தமிழர்கள் தங்களுக்கென தனியாக மாநிலமும், தங்களுடைய மொழியே பயன்படுத்தப்பட வேண்டுமென்ற வற்புறுத்தலும் இல்லாமலும் அமைதியாக இருந்தனர். இதன்பிறகு சில முக்கிய நிகழ்வுகள் தமிழகத்தில் நடைபெற்றன.

ஆளுநர் உரையின் மீது நடந்த விவாதத்திற்குப் பதிலளித்து நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம் 1955, ஆகஸ்டு 5ஆம் நாள் பேசும்போது, "எங்களைப் பொறுத்த வரை வட்டார மொழிதான் பயிற்று மொழியாக இருக்க முடியும் என்பதைத் திட்டவட்டமாக அறிவித்துள்ளோம்," என்றார். இதன் பிறகு அதே ஆண்டு செப்டம்பர் 29ஆம் நாள் ப.ஜீவானந்தம் பேசுகையில், "பிரதேச மொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். நான் தமிழன். என்னுடைய மொழியே இந்த இராஜ்ஜியத்தில் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை... கல்விக் கூடங்களிலும், ஆட்சி மன்றத்திலும், நியாய மன்றத்திலும் நிருவாகத்துறையிலும், பிரதேசமொழியே விளங்க வேண்டும்... "கல்வியைப் பொறுத்த

அளவில் பல படிகளிலும் தமிழ் மொழியே போதனா மொழியாக இருக்க வேண்டும்... சுயராஜ்ஜியம் கிடைத்த பிறகு ஆரம்பப் பாடசாலைகளில் நாம் தமிழையே போதனா மொழி ஆக்கிவிட்டோம். அதற்கு அடுத்தபடியாக உயர்நிலைப் பள்ளிகளிலும் தமிழையே போதனா மொழி ஆக்கிவிட்டோம். தர்க்க ரீதியாகத் தொடர்ந்து தமிழையே கல்லூரிகளிலும் போதனா மொழியாக்குவதுதான் நியாயம்,'' என்றார்.

இதனைத் தொடர்ந்து பேசிய குமாரராஜா முத்தையா செட்டியார், "கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் ஆங்கிலமே தொடர்ந்து பயன்படுத்த வேண்டும் என்பதை ஆதரிக்கிறேன். இன்று மத்திய அரசில் ஆட்சி மொழியாக ஆங்கிலம் இருக்கிறது. பதினைந்து ஆண்டு முடிவில் இந்தி புகுத்தப்பட வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு இந்தி ஆட்சி மொழி ஆவதில் எனக்கு ஆட்சேபணை ஏதுமில்லை,'' என்றார். இதனையே பி.ஜி.கருத்திருமனும் முழுமையாக ஆதரித்தார்.

இதன்பிறகு பி. ராமமூர்த்தி, "பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்க்க வேண்டாமென்ற உணர்ச்சி மேலிட்டபோதே நம் நாட்டில் எந்தப் பிரதேசத்தை எடுத்துப் பார்த்தாலும் சரி, அந்தக் காலகட்டத்தில் மொழிப்பற்றும் கூடவே வளர்ந்து வந்திருக்கிறது... தமிழ்மொழி வளர்ச்சி அடைந்தபிறகு, அதைக்கொண்டு வரலாம் என்று சொல்வது எப்படி இருக்கிறது என்றால், நீந்திப் பழகியபிறகு தண்ணீரில் இறங்கினால் போதும் என்று சொல்வதுபோல் இருக்கிறது. நீந்திப் பழகிய பிறகு தண்ணீரில் இறங்க வேண்டும் என்று ஒருவன் இருந்தால், இவன் ஒருநாளும் நீந்தக் கற்றுக்கொள்ளப்போவதில்லை. அதைப்போல இருக்கிறது, தமிழ்மொழி வளர்ச்சி அடைந்தபிறகு அதைக் கொண்டுவரலாம் என்று சொல்வது... நம்முடைய இராஜ்ஜியத்தில் தமிழாகிய தேசிய மொழியே வேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த மொழியில்தான் நம் நாட்டில் சகலவிதமான நடவடிக்கைகளும் நடக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். போதனைகளும் நடக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். போதனையையும் அதில்தான் இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். தமிழ்மொழியில்தான் எல்லா நடவடிக்கைகளும் நடக்க வேண்டும் என்று அரசாங்கம் சொல்லிவிட்டால், அந்த மொழி வளர்ச்சி அடைய வசதி ஏற்பட்டுவிடும்... ஒரு மொழி வளர்ச்சி அடைய சந்தர்ப்பம் கொடுக்காமல் இருந்தால் அது எப்படி வளர்ச்சி அடைய முடியும்?'' என்று உரையாற்றினார்.

அவர் மற்றோர் சமயம் பேசுகையில், "தமிழ் ஆட்சி மொழியாக அரசாங்கத் துறைகளில் தமிழில் போதிப்பது என்பதும் முக்கியமான பிரச்சனையாகும். நமது அரசாங்கம் தமிழ் மொழியில் ஆட்சி நடத்த வேண்டுமென்று ஏற்படும் போது போதனா முறையும் தமிழில் இருக்க வேண்டும்... பள்ளிகளில் ஆங்கிலம் பயின்றுவிட்டு, நிருவாகத்தில் வரும் போது, அது தமிழில் இருந்தால் வேலைசெய்ய முடியாமல் மிகப் பெரிய அளவில் திணறல் ஏற்படும். தமிழ் ஆட்சி மொழியாகி அது அமலில் சீக்கிரம் நடக்க வேண்டுமென்றால் இதற்குத் தகுந்தாற்போல், இன்றைக்குக் கல்விபோதனா முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்'' என்று தமிழ்ப் பயிற்சிமொழி அவசியத்தை வலியுறுத்தினார்.

இதைத் தொடர்ந்து எம். கல்யாணசுந்தரம் "ஆட்சிமொழி மசோதாவுடன் தமிழ்தான் நம் சர்வகலாசாலைகளில் போதனா மொழியாக இருக்க வேண்டும் என்ற பிரிவைச் சேர்த்திருந்தால்; நாம் எல்லாரும் இருகரங்களைக் கூப்பி இந்த மசோதாவை வரவேற்கக் கூடிய நிலையிலிருந்திருப்போம். காலக் கிரமத்தில் அதற்கு ஒரு சந்தர்ப்பம் வந்தே தீரும். அப்பொழுது ஓர் எதிர்ப்பும் இருக்க முடியாது'' என்று முழக்கமிட்டார்.

இப்படியாக நடைபெற்ற நெடிய போராட்டப் பின்புலத்தில் 1956, டிசம்பர் 27 அன்று தமிழ் ஆட்சி மொழி மசோதாவினை சி.சுப்பிரமணியம் முன்மொழிந்தார். தமிழகத்தில் தமிழை ஆட்சி மொழியாக்கியதிலே சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு செய்தி உண்டு. பிற்காலச் சோழர் ஆட்சி மறைந்த பின்னர் தமிழகத்தில் தோன்றிய நாயக்க மன்னர்கள் ஆட்சிக்காலத்திலே தெலுங்கும் நவாபுகள் ஆட்சிக் காலத்திலே உருது-அரபிமொழிகளும் ஆட்சியிலே செல்வாக்குச் செலுத்தின. இரண்டாம்தரமான மொழியாகவே தமிழ் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆங்கிலேயர் ஆண்ட 200 ஆண்டுகாலத்திலே ஆங்கிலம் ஒன்றே ஆட்சியில் துறைதோறும் ஆதிக்கம் செலுத்தியது. இப்படி பல நூறாண்டுக் காலம் ஆட்சித்துறையில் புறக்கணிக்கப்பட்டிருந்த தமிழ்மொழியானது தமிழகம் தனியரசு மாநிலமாக ஆன பின்னர்தான் திரும்பவும் ஆட்சிமொழியாக வரும் வாய்ப்பினை முதன் முதலாகப் பெற்றது. தமிழ் ஆட்சி மொழி மசோதாவை அமைச்சர் சி.சுப்பிரமணியம் பிரேரேபித்துத் தமிழில் பேசத் தொடங்கிய போது சட்டமன்ற உறுப்பினர்கள் ஆரவாரம் செய்து அதனை வரவேற்றனர் (ஏனென்றால் இதுவரை ஆங்கிலத்திலேயே சட்டமன்ற நடவடிக்கைகள் நடைபெற்றது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்). இதன் மீது நடைபெற்ற விவாதங்கள் உயிர்த் துடிப்புடன் உள்ளன. இதைப் பற்றி அமைச்சர் கூறுகையில் "ஐம்பது, அறுபது வருட முயற்சியின் பலன்'' என்றார். இது குறித்து அவர் உரையாற்றும் போது "ஒரு பூ மலர்கிறது. அது மலர்கின்ற மலர்ச்சி நம் எல்லாருக்கும் மகிழ்வைக் கொடுக்கிறது. அம்மலர்ச்சி ஒரு தனிப்பட்ட மகிழ்ச்சி

அல்ல, செடி வளர்ந்து, அரும்பு விட்டு போதாகி அது மலர்கிறது. இது மலர்வதோடு நின்றுவிடுவதில்லை. அதில் காய் ஏற்பட்டு அது மக்களுக்கும் பயன்படுகிறது.

அதே மாதிரி தான் தமிழ் மலர்கிறது என்றால் அது ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி அல்ல. நாட்டிலே இந்த ஐம்பது, அறுபது வருட காலமாக நடந்த நிகழ்ச்சியின் பலனாக இன்றைக்கு ஒரு செடியிலே ஒரு பூ மலர்கிறது'' என்றார். (சு.பொ.அகத்தியலிங்கம், 2010:38)

விவாதத்தில் உரையாற்றிய ப. ஜீவானந்தம் ''இன்று தமிழ் ஆட்கி மொழி ஆவது கல்லூரிகளில் தமிழ் போதனா மொழியாவதற்குள்ள ஒரு படியாகும். இந்த அபிப்பிராயத்தை நிதியமைச்சர் கலைச்சொற்கள் ஒப்படைப்பு விழாவில் வெளியிட்டார். தமிழ் அறிஞர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்துக் கலைச் சொற்களையும், பல்வேறு துறைகளில் உள்ள சொற்களையும் சேர்த்து ஓர் அகராதி வெளியிடவேண்டும். அவ்வாறு செய்வார்களாயின் எல்லாரும் ஒட்டிக் கொள்ளக்கூடிய தமிழை, அதிகாரப்பூர்வமான சொற்களைக் கொண்டு வந்து தமிழ் ஆட்சி மொழியாவதை நன்கு வளரச் செய்யலாம் என்றார்.

இவ்விவாதத்தில் கே.வினாயகம் அங்கம் வகித்தார். அவர் தமிழ் ஆட்சிமொழி மசோதாவை மனநிறைவுடன் வரவேற்றாரென்றாலும், ஆட்சிமொழியாக இருந்துவரும் ஆங்கிலத்தை அகற்றுவதற்கு ஒரு கால வரம்பு ஏற்படும் விதியை மசோதாவில் சேர்க்க வேண்டும் என்று ஒரு திருத்தம் கொடுத்தார். தமிழை ஆட்சி மொழியாக்கி முடிப்பதற்கான கால வரம்பை நிர்வாக ரீதியில் அரசே ஏற்படுத்தும் என்று சட்ட அமைச்சர் சி.சுப்பிரமணியம் உறுதி கூறினார். அதன் பின்னர் கே.வினாயகம் தமது திருத்தத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்.

இந்த விவாதத்திற்குப் பதில் அளித்துப் பேசிய அமைச்சர் சி.சுப்பிரமணியம், ''தமிழ்ச் சொற்களை எப்படி அமைக்க வேண்டும்? என்பதில் ஒருசில அபிப்பிராய பேதங்கள் காணப்பட்டன. இந்த அபிப்பிராய பேதங்களைக் கவனித்துக் கொண்டிருந்தால் நாம் முன்னேற்றம் அடைய முடியாது. ப. ஜீவானந்தம் அவர்கள் சொன்ன மாதிரி கரடுமுரடான கல்லை உருட்டிவிட்டால் அது எப்படி கடைசியில் நல்ல உருளைக் கல்லாக மாறிவிடுமோ அதுபோல பழக்க வழக்கத்தில் இது வந்துவிடும் என்று நினைக்கிறேன்,'' என்று கூறினார்.

விவாதத்தை முடித்து வைத்து அமைச்சர் திரு.சி.சுப்பிரமணியம் பேசியது வருமாறு: ''கனம் உதவி சபாநாயகர் அவர்களே! சட்ட சபையின் சார்பாக, தமிழ்மக்கள் சார்பாக இந்த மசோதாவைத் தமிழன்னையின் மலரடியில் சமர்ப்பிக்கிறேன். தமிழனாகப் பிறந்த பிறப்பின் பயனை இன்று பெற்றுவிட்டதாகவே கருதுகிறேன். இந்த மசோதாவை இங்குப் பிரேரேபித்து இதைச் சட்டமாக்குவதற்கு நான் கருவியாக அமைந்தது பற்றி உண்மையிலேயே பெருமைப்படுகிறேன்.''

''அந்தப் பெருமை எனக்கு ஏற்பட்டது என்னுடைய தகுதியினால் அல்ல என்பதை உணர்கிறேன். ஏதோ நான் செய்த தவப்பயன் காரணமாக அந்தப் பெருமை எனக்குக் கிடைத்தது என்று கருதுகிறேன்.''

''தமிழிலே பெரும் பாண்டித்தியம் பெற்றவர்களெல்லாம் இருக்க; எனக்கு இந்தப் பாக்கியம் கிடைத்தது தனிப்பெருமை. அதைப் பற்றி உண்மையிலேயே எண்ணியெண்ணி மகிழ்கின்றேன்.'' ''இன்றைக்கு உயிர்நீத்த தமிழ்ப் பெரியார்களின் ஆவிகள் எல்லாம் இதனைப் பார்க்கச் சக்தி பெற்றிருக்குமானால் இன்று நமது சட்டசபையின் மேலிருந்து ஆரவாரம் செய்து கொண்டிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. அப்பேர்ப்பட்ட ஒரு நல்ல நிகழ்ச்சியிலே பங்கு எடுத்துக் கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு கிடைத்தது. நம் எல்லோருக்கும் பெரு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. ஆகையால் பாரதியார் சொன்ன வாக்குடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

''பாரதியார், 'வாழிய செந்தமிழ்' என்று சொன்னார். 'வாழ்க நற்றமிழர்' என்றும் சொன்னார். அந்த வாழ்வு ஏதோ பிரிந்த வாழ்வு என்று அவர் கருதவில்லை. வாழிய பாரத மணித்திருநாடு என்றும் சொன்னார். அப்பேர்ப்பட்ட வாழ்வு எங்கெங்கும் தங்க வேண்டும். வாழ்க தமிழ், வாழ்க தமிழ், வாழ்க தமிழ்'' (பலத்த கைதட்டல்).


அவைக்குத் தலைமை வகித்த பி.பக்தவச்சலு நாயுடு வழக்கமாக ஆங்கிலத்தில் பேசுபவரென்றும் தமிழ் ஆட்சி மொழி மசோதா மீது வாக்கெடுப்பு நடத்தத் தொடங்கிய போது வழக்கத்திற்கு மாறாக, தமிழில் பேசினார். இந்த மாறுதலை அவையினர் ஆரவாரம் செய்து வரவேற்றனர். மசோதா எதிர்ப்பின்றி நிறைவேற்றப்பட்டவுடன் 'வாழ்க தமிழ்' 'வாழ்க தமிழ்' என்ற வாழ்த்தொலி அவையின் மண்டபம் அதிர மும்முறை எழுந்தது. இது சட்டமன்ற மரபு காணாததாகும் (விடுதலைக்குப் பின் தமிழ் வளர்ந்த வரலாறு, ம.பொ.சி. பக்.72-73).

தமிழ் ஆட்சி மொழி மசோதா ஆளுநர் இசைவுடன் 1957, ஜனவரி 19 அன்று நிறைவேற்றப்பட்டு, ஜனவரி, 23 அன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.


●

கட்டுரையாளர், சென்னை டாக்டர் எம்.ஜி.ஆர்.
மருத்துவப் பல்கலைக்கழக சிறப்புநிலைப் பேராசிரியர்.


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்





₹ 160/-




₹ 240/-




₹ 95/-




₹ 985/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

கட்டுரை

# திறந்த மார்க்சியம் தொகுதி 3:
# மார்க்சின் விடுவிப்பு

ந. முத்துமோகன்




மார்க்சியத்தின் புதிய பிரச்சினைகளை ஒன்பது கட்டுரைகளாக்கி இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. அவை நான்கு பேராசிரியர்களால் எழுதப்பட்டுள்ளன. அறியப்பட்ட மார்க்சியத்தினுள் உட்பொதிந்துள்ள சில பிரச்சினைகள் முதல் நான்கு கட்டுரைகளில் வெளிப்படுத்தப்பட்டு அவை விளக்கமளிக்கப்பட்டுள்ளன. அடுத்து வரும் இரண்டு கட்டுரைகள் ஹெகலின் "உரிமை பற்றிய தத்துவ"த்தை அரசியல் மற்றும் சமூகவியல் தளத்தில் விவாதிக்கின்றன.

கிரேக்க தத்துவத்தில் இயங்கியல் பற்றி ஒரு கட்டுரை பேசுகிறது. மார்க்ஸ் அவரின் முனைவர் பட்டத்திற்காக டெமாக்ரிட், எப்பிக்யூர் என்ற இரண்டு பொருள்முதல்வாதிகளை ஒப்பிட்டு எழுதிய கருத்துக்கள் இக்கட்டுரையில் தரப்பட்டுள்ளன. இளம் மார்க்சின் காத்திரமான தத்துவ விவாதங்களுக்கு மார்க்சின் இக்கட்டுரை சாட்சி. இறுதியாக நிற்கும் மூன்று கட்டுரைகள் பின்- வரலாறு *(Post-History)*, மறுத்தலின் சீற்றம், மூலதனம்-உழைப்பு ஆகிய பிரச்சினைகளைக் குறித்துப் பேசுகின்றன.




முன்னுரை வடிவில் எழுதப்பட்ட முகப்புக் கட்டுரை, "செய்ய வேண்டுவது என்ன?" என்ற புரட்சிக்காரர்களின் மரபார்ந்த கேள்வியை முன்வைத்து பதில் காண முயலுகிறது. "மூடப்பட்ட, வறட்டுத்தனமான ஒரு மரபை நெகிழ்வாக்குவதுதான் செய்ய வேண்டுவது" என்று பதில் கிடைக்கிறது. "இந்த மரபின் துன்பியல் வரலாற்றைத் தூண்ட வேண்டும். அதுவே இப்போது இருக்கும் மிகச்சக்தி வாய்ந்த எதிர்ச்சிந்தனை மரபாக நீடிக்கிறது." மார்க்சியத்தின் துன்பியல் வரலாறு இன்று வரை நினைவூட்டத்திற்கு உரியது. அமைப்பியல், நேர்க்காட்சிவாதம், சில சமூகவியல் கோட்பாடுகளின் செல்வாக்கு ஆகியவற்றிலிருந்து மார்க்சியத்தை விடுவித்தல் இத்தொகுதியின் வேலைத்திட்டம் என நூலாசிரியர் வெர்னர் போன்ஃபீல்ட் விளக்குகிறார். போராட்ட அனுபவங்கள் மார்க்சியத்தின் விமர்சனரீதியான அனுபவங்களை மீட்டுத்தரும் எனவும் சுட்டிக் காட்டுகிறார். எஞ்சிய மூன்று ஆசிரியர்களின் பங்களிப்புகள் ஒவ்வொன்றும், ஹெகல், மார்க்ஸ் இருவரின் பிரதிகளுக்கு திரும்பிச் சென்று மார்க்சியரின் விமர்சன ரீதியான அம்சத்தை வளர்த்தெடுக்க முயற்சிக்கின்றன.

"முதலாளித்துவமும் மறுவுற்பத்தியும்" என்ற இரண்டாவது கட்டுரை மரியா ரோசா டல்லா கோஸ்டா என்ற இத்தாலியப் பேராசிரியரால் எழுதப்பட்டது. ஆரம்பகால முதலாளியத்தால் தீவிரமாகப் பயன்படுத்தப்பட்ட "மறு உற்பத்தி" எனும் தொழில் உத்தி எவ்வாறு 20 ஆம் நூற்றாண்டின் காலப்பகுதியில் கொடூரமாகப் பயன்படுத்தப்பட்டது என்பதை இக்கட்டுரை விரிவாக எடுத்துப் பேசுகிறது.

16-18 ஆம் நூற்றாண்டுகளில் நிலம் என்னும் ஆதி உடைமை பறிக்கப்பட்டது. பின்னர் கூலி பெறும் தொழிலாளி, கூலி பெறாத தொழிலாளி என்ற பிரிவினை உருவாக்கப்பட்டது. வர்க்கம், பாலினம், இனம், தேசியம் என்ற பிரிவினைகள் கட்டப்பட்டன. விரைவில் முதலாளித்துவ மூலதனத் திரட்டல் தொழிற்சாலைகள், தோட்டத்தொழில், அணைகள், சுரங்கத் தொழில் ஆகியவற்றில் குழந்தை அடிமைத் தொழில் உலகம் முழுவதும் பரப்பப்பட்டது. இவற்றை ஓரளவு ஈடுகட்ட அடிமை உழைப்புக்கு மக்கள் நலத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

சமீப காலங்களில், "பேய்த்தனமான திருப்பமாக உடல் உறுப்புகளை விற்பவர்களைக் கொண்டு" கடைக்கோடி உற்பத்தி சக்திகளைத் திரட்டி வருகின்றனர். இதற்கு இணையாக குற்றத் தொழில்களும் கொழித்து வருகின்றன. ஆதித்திரட்டலின் வழியாக உடைமை பறிப்புகள் நிகழ்த்தப்பட்டது இப்போது மீண்டும் அவை மறு உற்பத்தி செய்யப்படுகின்றன. கூலி பெறாத பெண் தொழிலாளர்கள், பெண்கள் கடத்தப்பட்டு அடிமையாக்கப்படுதல், பாலியல் சுரண்டல் ஆகியன பெருகி வருகின்றன.

மனித இன அழிவு, சுற்றுச் சூழல் அழிவு என்பவை இணைகின்றன. பெண்கள் இனப்பெருக்கம் செய்ய மறுத்து வருகின்றனர். எந்திரகதியிலான மறு உற்பத்தி பெருகி வருகிறது. இவற்றை எதிர் கொள்ள



சோசலிசம் இன்னும் தயாராகவில்லையா என்ற கேள்வி மிஞ்சத்தான் செய்கிறது?

இந்தப் பகுதியின் நாலாவது கட்டுரையாக, மார்க்சினுடைய ஆய்வுப் பட்டத்திற்கான கிரேக்கத் தத்துவம் குறித்த கட்டுரை அமைகிறது. டெமாக்ரிட், எப்பிக்யூர் ஆகிய இரண்டு பொருள்முதல்வாதிகளை ஒப்பிட்டு எழுதிய கட்டுரை அது. கிரேக்கத் தத்துவத்தை அதன் கோட்டையிலேயே மார்க்ஸ் சந்தித்த ஓர் அற்புதமான தருணம் அது. கிரேக்க பொருள்முதல்வாதம், இயங்கியல், தருக்கவியல் குறித்த ஒரு திறந்த விவாதத்தை மார்க்ஸ் நடாத்திய சந்தர்ப்பம் அது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்திய கிரேக்க தத்துவம் ஒருபுறம், மார்க்ஸ் வாழ்ந்து உருவாக்கிய இயங்கியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் ஆகியன உருவெடுத்த காலம் ஆகியவற்றைத் தாண்டி, 22-23 ஆம் நூற்றாண்டுகள் படையெடுத்து விட்ட மற்றொரு காலம் எனப் பலவகைப்பட்ட கால முரண்களைத் தன்னில் எதிரொலிக்கும் பரப்புகளைக் கொண்டது இக்கட்டுரை. பல தத்துவங்கள் சந்தித்துக் கொண்டு, சூடுபரக்கும் அற்புதமான சந்திப்பு அது.

பண்டைய கிரேக்கத்தின் இயங்கியல் முறையைத் "தேவையற்ற பழம்பொருளாக" மார்க்ஸ் கருதினாரா? என்ற ஒரு கேள்வியோடு விவாதத்தை கட்டுரை ஆசிரியர் துவக்குகிறார். கிரேக்கத் தத்துவ விவாதம் "மூலதனம்" (முதல் தொகுதி) முதல் பதிப்பிற்கும் இரண்டாவது பதிப்பிற்கும் இடையிலான வேறுபாடுகளை எடுத்துக் கூறும் முக்கியமான பகுதி ஆகும். கிரேக்கத் தத்துவத்தின் வெளிப்படையான வாரிசாகவும் தெளிவான ஞானியாகவும் மேதமையாகவும் மார்க்ஸ் இப்பகுதியில் மிளிருகிறார்.

தத்துவம் தனக்கு இணையாக வேறு எதையும் கருதாது. அது ஹெகலிலிருந்து தொடங்குகிறது என்ற கருத்துடன் மார்க்ஸ் விவாதத்தைத் தொடங்குகிறார். உச்சநிலைகளில் அரிஸ்டாட்டில், எப்பிக்யூர் ஆகிய இருவரை மார்க்ஸ் சுட்டிக்காட்டுகிறார். எப்பிக்யூர், டெமாக்ரிட், அரிஸ்டாட்டில் மூவரில் எப்பிக்யூரைத்தான் உயர்த்திக் காட்டுகிறார். தத்துவத்தை மார்க்ஸ் உலகுடன் இணைக்கிறார். இது எப்பிக்யூரிய அணுகுமுறை. உலகம் தத்துவத்தோடு இணையும்போது, தத்துவமும் உலகம் சார்ந்ததாகிறது.

அறிவு, சுதந்திரம், சனநாயகம் ஆகியன மார்க்சின் வாதங்களில் ஒன்றுபடுகின்றன. அறிவின் இடத்தை சனநாயகம் எடுத்துக் கொள்கிறது. முன்பிருந்த முடியாட்சி அரசின் வடிவங்கள் தலைகீழாக நிறுத்தப்படும்போது சனநாயகங்கள் தோற்றமெடுக்கின்றன. அறிவியலும் தத்துவமும் அரிஸ்டாட்டில் தொடங்கி அல்தூசர் வரை பின்னிப் பிணைந்து இணைந்து கிடக்கின்றன. தொடர்ந்து மார்க்ஸ் ஹெகலின் "உரிமை பற்றிய தத்துவத்தை"ப் பற்றி எழுதுகிறார். அறிவு, சுதந்திரம், சனநாயகம், மனித உரிமை இவற்றில் எது ஒன்றும் மார்க்சியத்தை விட்டு விலகியவை அல்ல.

சமீப காலங்களில் உரிமை புத்துயிர் பெற்றுள்ளது. உரிமை முக்கியமான கோட்பாடாகிறது. மனிதர் மனிதரோடு இணைக்கப்படுகிறார். மனித இருத்தலிலிருந்து அந்நியமாதல் விலகுகிறது. மனிதர் சமூக மனிதராக்கப்படுகின்றனர்.

நூலின் இறுதி அத்தியாயம் பின் வரலாறு, மறுத்தலின் சீற்றம் ஆகியன குறித்துப் பேசுகின்றன. வால்டர் பெஞ்சமினின் சொற்கள் இங்கு எடுத்துப் பயன்படுத்தப்படுகின்றன. "வரலாற்றில் உள்ள புனைகதைக் காரணிகளைக் கைவிட்டு விட்டு, மாறாக, சகாப்தத்தின் தொடர்ச்சியை வெடித்துப் பிளக்க வேண்டும்" என்கிறார் வால்டர் பெஞ்சமின்.

"ஆரம்பத்தில் சீற்றம் இருந்தது" இதுவே முதுபெரும் மொழி.

●

கட்டுரையாளர், இந்திய மார்க்சிய சிந்தனையாளர்களில் மிக முக்கியமானவர், தமிழர் சமூக வரலாற்று ஆய்வாளர்.


**புத்தகங்கள் அச்சிட**
**அற்புதத் தீர்வு**

**குறைந்த செலவு**
**அதிகபட்ச தரம்**


அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**


தொடர்பு கொள்ள

**98412 93503**

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 325/-




₹ 75/-




₹ 200/-




₹ 130/-




₹ 90/-




₹ 70/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

கட்டுரை

# ஜாம்பவான்

அ.கா.பெருமாள்



"அவன் அந்த விஷயத்தில் பெரிய ஜாம்பவான்" என்ற வழக்காறு இப்போதும் நிலவுகிறது. பழைய அகராதிகள் இதற்கு நெடுங்காலம் வாழ்ந்தவன், வயதானவன், கரடியின் அரசன் எனப் பொருள் கொள்கின்றன. ஒரு துறையில் அதிக அனுபவமும் தேர்ச்சியும் உடையவன் என க்ரியா அகராதி பொருள் கூறுகிறது. இப்போது இந்த சொல் வழக்காறு அருகி வருகிறது. முந்தைய படைப்பாளிகளும் கதாகாலட்சேபக்காரர்களும் இச்சொல்லைச் சாதாரணமாகப் பயன்படுத்தியுள்ளனர்.

ஜாம்பவான் ராமாயண காவியத்தில் வருபவன் ராம ராவண போரில் ராமனின் பக்கம் நின்று போர் செய்தவன் இவன் கரடிகளின் தலைவன். ராமாயண காவியத்தில் மிகக் குறைவான இடங்களில் வருகிறான். ஆனால் பரவலாக எல்லோரும் அறிந்த பாத்திரமாக உள்ளான். இதற்கு இவனைப் பற்றி வேறு புராணங்களில் வருகின்ற கதைகளும் காரணம்.

இவன் ஜாம்பவித் (சமஸ்கிருதம்), ஜாம்ப வந்தா (அசாமி), ஜாம்பசந்தா (கன்னடம்), ஜாம்புலன் (வங்காளி), சாம்புவன் (தமிழ்) என வேறு பெயர்களிலும் அழைக்கப்படுகிறான். குரங்குகளின் முதல்வன் என்னும் பொருளில் அபிஸ்ரேஷ்டா என்றும் அழைக்கப்படுகிறான்.

கம்பன் ஜாம்பவானை விரிஞ்ஞுகன் மகன், (பிரம்மகுமாரன்) நாலு முகத்தான், உதவுற்றான் (நான்கு முகங்களை உடைய பிரம்ம தேவனால் பெறப்பட்டவன்), அயன் மைந்தன் (பிரம்மனின் மகன்) என குறிப்பிடுகிறான்.

ஜாம்பவான் விஷ்ணுவின் முதல் அவதாரம் பிறப்பதற்கு. முன்பு தோன்றி ஒன்பதாம் அவதாரத்தில் ராமனுக்கு உதவியவன். விஷ்ணுவின் எல்லா அவதாரங்களிலும் வாழ்ந்தவன், இப்போதும் அவன் வாழ்கிறான் என்பது தொன்மம், இவன் திரேதா யுகம் துவாபரயுகம் ஆகிய யுகங்களில் வாழ்ந்தவன். கலியுகத்திலும் வாழ்கிறான் என்பது நம்பிகைை.

விஷ்ணுவின் வாமன அவதாரத்தின் போது உலகை 7 முறை சுற்றி வந்தவன் என்பதை ஜாம்பவானே அனுமனிடம் சொல்லுகிறான். ஜாம்பவானின் பிறப்பு பற்றி பாகவதம், சிவபுராணம், ராமாயணம் போன்றவற்றில் செய்திகள் உள்ளன. இந்தக் கதைகள் வேறுபட்ட வடிவங்களை உடையவை.

விஷ்ணு பாற்கடலில் அறிதுயில் கொண்டிருந்தபோது அவரது நாபிக் கமலத்தில் இருந்து பிரம்மா பிறந்தார். சிறிது நேரத்தில் ஜாம்பவன் பிறந்தார், விஷ்ணுவின் கொட்டாவியில் ஜாம்பவான் (ஜரிட்டன்) பிறந்தான் என்னும் கதைகள் உண்டு.

சிவனும் பார்வதியும் ஆண் கரடியும்: பெண் கரடியுமாக உருமாறி உறவு கொண்டபோது ஜாம்பவான் பிறந்தான் என்பது ஒரு கதை. இந்தக் கதைகள் வழி ஜாம்பவான் பிரம்மாவின் அம்சமாகவும் சிவனின் அம்சமாகவும் சொல்லப்படுகிறான்.

தேவர்களும் அசுரர்களும் கடலைக் கடைந்த போது தேவர்களுக்கு ஜாம்பவான் உதவினான். தேவர்கள் சோர்ந்துபோய் அமர்ந்தபோது ஜாம்பவான் அசுரர்களுக்கு எதிர் பக்கம் தனியாக நின்று கடலைக் கடைந்தான் என்பது ஒரு கதை. ராம ராவண போரில் இந்திரஜித்தின் பாணத்தால் எல்லோரும் மயக்கம் அடைந்த போது ஜாம்பவான் விழித்துக்கொண்டிருந்தான். கிருஷ்ணனுடன் சண்டையிட்டு தோற்றவன், அனுமனுக்கு அவன் பலத்தை நினைவுபடுத்தியவன் ஜாம்பாவானுக்கு ஜாம்பவ என்ற மகள் உண்டு.

விஷ்ணு புராணத்தில் ஜாம்பவான் பற்றி விரிவான ஒரு கதை வருகிறது. சியாமந்தக மணி தொடர்பான இந்தக் கதை ஜாம்பவானின் வீரத்தை வர்ணிக்கிறது. சூரியனுக்கு சியாமந்தக மணி என்னும் சக்திமிக்க ரத்தினம் ஒன்று கிடைக்கிறது. யார் இதை அணிகிறார்களோ அவரது நாட்டில் மழை பெய்யும் பஞ்சம் வராது.


ஒரு முறை சூரியன் யாதவ குலத்தைச் சார்ந்த சத்ரஜித் என்பவனுக்கு இந்த சியாமந்தக மணியை கொடுத்தான். யாதவ குல கிருஷ்ணன் ரத்தின மணியை துவாரகை அரசன் உக்கிர சேனனுக்கு கொடுக்கும்படி சத்ரஜித்திடம் சொன்னான் அவன் மறுத்து விட்டான்.

சத்ரஜித் தன் தம்பி பிரசேனனிடம் அந்த அபூர்வ மணியைக் கொடுத்தான். அவன் ஒரு முறை காட்டுக்கு வேட்டையாடச் சென்றபோது சிங்கத்தால் கொல்லப்பட்டான். அப்போது அங்கே தற்செயலாக வந்த ஜாம்பவான் அவனது கழுத்தில் உள்ள ரத்தினத்தை எடுத்துச் சென்றான், அதைத் தன் மகள் ஜாம்பவியிடம் கொடுத்தான்.

விலை மதிப்பற்ற அந்த ரத்தினம் தொலைந்த தற்கும் பிரசேனன் இறந்ததற்கும் கிருஷ்ணனே காரணம் என்ற குற்றச்சாட்டு வந்தது தன் பழியைத் துடைக்க சியாமந்தக மணியை தேடிச் சென்றான் கிருஷ்ணன். ஒரு குகையில் உள்ளே சென்றபோது சாம்பவியைக் கண்டான். அவள் கழுத்தில் இரத்தின மணி இருந்தது அதை எடுக்க முயன்றபோது ஜாம்பவான் வந்தான். கிருஷ்ணனுடன் ஜாம்பவான் சண்டையிட்டான். நீண்ட நேரத்திற்குப் பிறகு ஜாம்பவான் தோற்றான். தன்மகள் ஜாம்பவியைக் கிருஷ்ணனுக்குத் திருமணம் செய்து வைத்தான்.

கிருஷ்ணனுக்கு எட்டு மனைவிகள் அவர்கள் ருக்மணி, சத்தியபாமா, ஜாம்பவி, காளிந்தி, மித்ரவிந்தா, நாகநதி, பத்ரா, லக்குமணை ஆகியோர் ஆவர். ஜாம்பவி மூன்றாவது மனைவியாவாள். அவளை இலட்சுமியின் அவதாரமாகக் கூறுவர் இவனை ரோகிணி என்றும் கூறுவர், மகாபாரதத்தில் ஜாம்பவி வருகிறாள்.

ஜாம்பவான் மகன் ஜம்பா என்பவன் துரியோதனின் மகள் இலக்குமனணயை மணந்தான். ஜாம்பவானின் பேரன் ஒருவன் யது குலம்



அழிவதற்குக் காரணம் ஆனான் என்றும் ஒரு கதை உண்டு.

விஜயநகர அரசர் கிருஷ்ணதேவராயர் சாம்பவி கல்யாணம் என்ற ஒரு நூலை எழுதியிருக்கிறார். ஏக ராமானந்தரின் சாம்பவி பரிநயனம் என்ற ஒரு நூலும் உண்டு. இவ்விரு நூல்களும் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றவை இவற்றின் அடிப்படையில் தமிழில் சாம்பவி கல்யாணம் என்ற நாடகம் வந்திருக்கிறது, இது மராட்டியர் காலத்தது, ஆரம்பகாலத்தில் இது சினிமாவாகவும் வந்தது.

ஜாம்பவான் ராமாயணத்தில் ஆரண்ய காண்டத்திலும் சுந்தரகாண்டத்திலும் வருகிறான். சீதையைத் தேடி அங்கதன், ஜாம்பவான், அனுமன், ஆகியோர் வானரப் படைகளுடன் சென்றனர். இலங்கையில் அவள் ராவணனின் சிறையில் இருக்கிறாள் என்பதை சம்பாதி என்னும் கழுகு அரசன் வழி அறிந்தார்கள். இலங்கைக்கு யார் செல்வது என்ற கேள்வி எழுகிறது. (வால்மீகி ராமாயணத்தில் ஆரண்ய காண்டத்தில் சருக்கம் 65, 66 இல் இந்த நிகழ்ச்சி வருகிறது).

வானர வீரர்கள் தங்களின் வலிமையைச் சொல்லி இலங்கைக்குச் செல்ல தங்களால் இயலாது என்பதை நாகரீகமாகச் சொல்லி விடுகின்றனர் அப்போது ஜாம்பவான் அனுமனிடம் பேசுகிறான்.

வானர வீரரே! எல்லாம் அறிந்தவரே! சர்வ சாத்திரத்தில் வல்லவரே! நீர் பலம், தேஜஸ், புத்தி ஸத்வ குணம் ஆகியவற்றில் மேலானவர். ஒரு காலத்தில் நான் திரிவிக்கிரம அவதார= காலத்தில் இந்தப் பூமியை இருபத்தி ஒரு தடவை சுற்றி வந்தேன் இப்போது. முதியவனாகி விட்டேன். வீரியம் இழந்துவிட்டேன். நீ இறப்பு இல்லாதவன். சர்வ குண சம்பன்னன். சீதையைத் தேடிச் செல்வதற்கு உனக்குத் தகுதி உள்ளது என்று கூறுகிறான்.

கம்பன் நான்கு முகங்களையுடைய பிரம்மாவால் பெறப்பட்டவனான ஜாம்பவான் அனுமனிடம் பேசுகிறான். அனுமனே! நான் வாமன அவதாரத்தில் எட்டு திசைகளுக்கும் சென்றேன். அப்போது மேருமலையில் மோதியதால் வலிமை குன்றி கால் ஊனமுற்றேன். அதனால் இப்போது என்னால் கடலைத் தாண்ட முடியாது. இதற்கு நீயே தகுதி உடையவன் என்று சொன்னான் என்கிறார். கம்பன், இதை பத்து பாடல்களில் விவரிக்கிறான்.

யுத்தகாண்டத்தில் ஜாம்பவானின் இடம் முக்கியமானது. இவனது பெருமை இங்கே

மறைமுகமாகக் கூறப்படுகிறது. ஜாம்பவான் இல்லை என்றால் ராமன் ராவணனை வென்றிருக்க முடியாது என்பது மறைமுகமான உண்மை.

யுத்தம் தீவிரமாக நடந்து கொண்டிருக்கிறது கிஷ்கிந்தை அரசன் என்பதால் சுக்ரீவனுக்கு விபீஷணனும், ஜாம்பவானும், கரடி வீரர்கள் பலரும் பாதுகாப்பாக நிற்கிறார்கள். இந்திரஜித் பிரம்மாஸ்திரத்தை விட்டதும் வானர கரடி வீரர்கள் எல்லோரும் மயங்கி விழுகிறார்கள். விபீஷணனும் அனுமானும் மயங்கவில்லை அவர்கள் ஜாம்பவான் தேடிவருகிறார்கள். அப்போது அனுமன் "ஜாம்பவானைக் கண்டுபிடித்தால் எல்லோருடைய மயக்கத்தைத் தீர்த்துவிடலாம் உயிர் பிழைக்க வைத்து விடலாம் " என்று சொல்லுகிறான்.

அவர்கள் இருவரும் ஜாம்பவானைக் கண்டுபிடித்து விட்டனர். விபீஷணன் ஜாம்பவானிடம் "பூஜ்ய ரே பாணங்களால் உமக்கு ஆபத்து இல்லையே" என்று கேட்கிறான். ஜாம்பவான் பானங்கள் என் கண்களை மறைத்துவிட்டன உடலுக்கும் உயிருக்கும் சேதம் இல்லை. உமது குரலை அடையாளம் கண்டு பேசுகிறேன் விபீஷணரே அனுமான் நலமாக இருக்கிறானா என்று கேட்கிறான். உடனே அனுமான் நான் இங்கேயே தான் இருக்கிறேன் என்று சொல்லிவிட்டு ஜாம்பவானை வணங்குகிறான்.

விபீஷணனுக்கு ஜாம்பவானின் பேச்சுப் புரியவில்லை. இராம இலட்சுமணரை நலமா என்று கேட்கவில்லையே. அனுமனை மட்டும் ஏன் கேட்கிறான் என்று நினைக்கிறான். அதைக் கேட்டும் விடுகிறான் ஜாம்பவான். அனுமான் இருந்தால் மட்டுமே எல்லோரும் பிழைக்க முடியும்; பகைவருடன் போர் செய்ய முடியும். ராவணனை வென்று சீதையை மீட்க முடியும் இவை எல்லாமே அனுமனின் கையில் இருக்கிறது என்று சொல்லுகிறான்.

ஜாம்பவான் அனுமனைப் பார்த்து "நீ வீராதி வீரன். வானர வீரர்களைக் காப்பாற்ற மேருமலைக்குச் செல்லுவாய், மலையின் உச்சியில் நான்கு மூலிகைச் செடிகள் உள்ளன. அவை மிருத ஸஞ்ஜீவினி (இறந்தவரை பிழைக்க வைக்கும் மூலிகை)),விகல்யகரணி (காயங்களை ஆற்றும் மருந்து) ஸாவர்ண்ய கரணி (உடம்புக்கு பொலிவைத் தரும் மூலிகை), ஸந்த்தான கரணி (உடைந்த எலும்பை ஒட்டு மருந்து மூலிகை) ஆகிய இவற்றையெல்லாம் சேகரித்துக் கொண்டு வரவேண்டும் என்றான்.

கம்பனிடம் இந்த நிகழ்ச்சி மருத்துமலை படலத்தில் வருகிறது (யுத்தகாண்டம் பிற்பகுதி வை மு.கோ.ப171). ஜாம்பவான் அனுமனிடம் அந்த மருந்தை காண்பதற்கு வழியும் சொல்லுகிறான். அது வந்த வரலாற்றையும் சொல்லுகிறான். பாற்கடலைக் கடைந்த போது கிடைத்த பொருட்களில் இந்த நான்கு மருந்துகளும் உண்டு, இதை இமயமலையில் மறைத்து வைத்தனர் வாமன அவதார காலத்தில் ஜாம்பவான் உலகைச் சுற்றி வந்தபோது இந்த மருந்தைக் கண்டதான்.

இப்படியாகச் சிறப்புகளை உடைய ஜாம்பவான் இன்று தமிழகத் தோல்பாவைக்கூத்தில் நகைச்சுவை பாத்திரமாக பிறர் எள்ளி நகையாடும் பாத்திரமாக இருக்கிறான். சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பு வரை கோபாலராவ் தோல்பாவைக்கூத்து நடத்தியபோது ஜாம்பவான் மரியாதைக்குரிய கதாபாத்திரமாக இருந்த அனுமன், சுக்ரீவன் அங்கதன் என எல்லோரும் அவனிடம் மரியாதையுடன் பேசினார்கள். ஆனால் கலைமாமணி பரமசிவராவ் காலத்தில் ஜாம்பவான் மரியாதையை இழந்துவிட்டான்.


உச்சிக்குடுமி, உளுவத் தலையன் என்னும் இரண்டு நகைச்சுவை பாத்திரங்களும் ஜாம்பவானை "ஓய் சம்பா அரிசி கிழட்டுப் பிணமே கட்டேல போறவனே என அழைப்பார்கள். அங்கதன் விபீஷணன் போன்றவர்கள் தாத்தா என்று கூறுவார்கள். இப்போது பெரும்பாலான தோல்பாவைக்கூத்து நிகழ்ச்சிகளில் ஜாம்பவான் கிண்டலாகவே பேசப்படுகிறான்.

தமிழகத்தில் திருவாரூர் மாவட்டம் திருப்புறைப் பூண்டியில் உள்ள மந்திரபுரீஸ்வரர் தலபுராணம் மூலவரை ஜாம்பவான் வழிபட்டு பேறு அடைந்ததாகக் கூறும் ஆந்திராவில் ஜாம்பகா என்ற ஒரு இனக்குழுவினர் இருக்கின்றனர். இவர்கள் தங்களை ஜாம்பவானின் வம்சாவளியினர் என்று கூறுகின்றனர்.

குஜராத் போர்பந்தர் பகுதியில் உள்ள ஒரு மலையில் காணப்படும் நீண்ட குகையை கிருஷ்ணனும் ஜாம்பவானும் சண்டையிட்ட இடம் என்று கூறுகின்றனர். இந்தக் குகை இப்போது தொல்லியல் துறையினரிடம் உள்ளது.

●

கட்டுரையாளர், ஓய்வுபெற்ற பேராசிரியர். நாட்டார் வழக்காற்றியல் மற்றும் சமூகப் பண்பாட்டு ஆய்வாளர்.



# பால்மரக்காட்டினிலே இடப்பெயர்வு இலக்கியம்

இரா. காமராசு

எழுத்தாளர் அகிலன் (1922-1988) காந்திய நெறியில் நின்று படைப்பிலக்கியங்களைப் படைத்தவர். சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை, மொழிபெயர்ப்பு, சிறுவர் இலக்கியம், சுய முன்னேற்ற நூல், தன்வரலாறு, திரைப்படம் என்று பல்துறைகளிலும் நூல்களைத் தந்தவர். சமூக மாற்றம், மனித நேயம், பெண் விடுதலை சார்ந்து எழுதியவர்.

இவருடைய எழுத்துக்கள் அதிக அளவில் வெகுவாக மக்களைக் கவர்ந்தன. பல்வேறு இதழ்களில் தொடர்களை எழுதினார். கலைமகளும், கல்கியும் இவரின் களங்களாக அமைந்தன. இனிய, எளிய நடையும், உணர்வோட்டமும் காட்சிப்படுத்தும் இயல்பும் இவருக்கென தனிப்பாணியை உருவாக்கித் தந்தன.

இலட்சிய வாதமும், யதார்த்த வாதமும், விமர்சன யதார்த்த வாதமும் கலந்த ஒருவித 'பேன்டசி' முறைமை இவருக்குச் சாத்தியப்பட்டது. மனித உறவுகளை, மனித உணர்வுகளை தான் கைக்கொண்ட காந்திய வழிமுறைகளில் தன் படைப்புகளில் துலக்க முயன்றார். கல்கி, இராஜராஜ சோழன் பற்றி பொன்னியின்










செல்வனைப் படைத்தார். அகிலன், இராசேந்திர சோழன் பற்றி வேங்கையின் மைந்தனைப் படைத்தார். கல்கி இதழில் தொடராக வந்த இந்த நாவல் 1963 ஆம் ஆண்டில் சாகித்திய அகாதெமி விருது பெற்றது. இவரின் 'சித்திரப்பாவை' நாவல், 1975 ஆம் ஆண்டில் தமிழுக்கு முதல் ஞானபீடப் பரிசினைப் பெற்றுத் தந்தது.

1957-58இல் இவர் எழுதிய 'பாவை விளக்கு' நாவல் இவரின் தன் வரலாற்றை ஒட்டியது. இவ்வகையில் இது முன்னோடி. 1976-இல் எழுதிய 'பால்மரக்காட்டினிலே' மலேசியத் தோட்டத் தொழிலாளர் பற்றியது. பின்னர் இராஜம் கிருஷ்ணன் போன்றோர் எழுதிய களப்பணி / ஆவண நாவல்களுக்கு இது ஒரு வகையில் முன்னோடி.

"வாழ்க்கையை அழகாக வாழக் கற்றுக்கொள். முடிந்தால் வாழ்க்கையை அழகுபடுத்து, முடியாவிட்டால் அதை அசிங்கப்படுத்தாமலாவது இரு"

"மக்களுக்கு எது பிடிக்கிறதோ அதை எழுதாமல் மக்களுக்கு எது வேண்டுமோ அதை எழுதுவதுதான் எழுத்து"

"மக்களிடம் நெடுங்காலமாகப் படிந்துள்ள பல்வேறு அறியாமைகளைப் போக்கி, அவர்களை விழிப்படையச் செய்ய வேண்டும். அதற்கு தம்முடைய எழுத்து உதவ வேண்டும்" என்றெல்லாம் தன் எழுத்து வாழ்வில் நியாயம் சொன்னவர் அகிலன். அவர் காலத்தில் வீடுகளில் படிக்க இருந்த பெரும்பகுதி பெண்களே அவரின் வாசகர்கள். பொழுது போக்க வாசித்தவர்களை தன் கருத்து வளத்தால் ஈர்க்க முயன்றவர். வெகு ஜன எழுத்துக்கான பலமும் பலவீனமும் சேர்ந்ததாக அவரது எழுத்துக்கள். எந்தவொரு படைப்பையும் காலச்சூழல், தேவை, சமூகப் பின்புலத்தோடு மதிப்பிடுவதே பொருத்தமானது.

இன்றைய காட்சி, சமூக ஊடகங்கள் நிலையில் அன்றைய அச்சு ஊடகங்கள் தொழிற்பட்டத் தருணத்தில், அகிலனின் எழுத்துகள் வெகு மக்களை இலக்காக்கி வெளிவந்தன. வாசிப்புப் பரவலாக்கம் என்ற நிலையில் அவை தம்மில் முழுமை கண்டன எனலாம்.

**இடப்பெயர்வு இலக்கியம்**

புலம் பெயர்வு, இடப்பெயர்ச்சி இலக்கியங்கள் உலகுகெங்கும் பரவலாகி வருகின்றன. தமிழர்கள் சமூக, பொருளாதார நெருக்கடிகளால் தொடர்ந்து புலம் பெயர்ந்து வருகின்றனர். பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டிலிருந்து ஆங்கில காலனி முறைமையினூடாகப் புலம்பெயர்வு நிகழ்ந்தது. நிலக்கிழமை முறையின் சாதி ஆதிக்கம், அடக்கு முறை, வேளாண்மை நசிவு, பசி, பஞ்சம் போன்ற காரணங்களால் இது நிகழ்ந்தது. நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் நிலை தனி.

இந்த மாதிரி மொரீஷியஸ், ஃபிஜி, ரீயூனியன், டச்சுக்கயானா, தென் ஆப்பிரிக்கா, பர்மா, மலேசியா, இலங்கை போன்ற நாடுகளுக்குச் சென்ற தமிழர்கள் குறித்த இலக்கியப் பதிவுகள் வெளிவந்தன.

ஃபிஜி கரும்புத் தோட்டத்தில் தமிழர்கள் படும் துயரத்தை பாரதியார் பாடினார். இலங்கைத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் நிலையை புதுமைப்பித்தன் 'துன்பக்கேணி'யில் படைத்தார்.

அவ்வகையில் ப. சிங்காரத்தின் கடலுக்கு அப்பால், புயலிலே ஒரு தோணி, ஆர். சண்முகத்தின் சயாம் மரண ரயில், ரங்கசாமியின் லிங்கா நதிக் கரையில், இளம்வழுதியின் லட்சியப் பாதை, குமரனின் செம்மண்ணில் நீல மலர்கள், மு.சிவலிங்கத்தின் பஞ்சம் பிழைக்க வந்த சீமை ஆகியவை புலம் பெயர் வாழ்வின் வலிகளைப் பதிவு செய்தன.

**பால்மரக்காட்டினிலே**

எழுத்தாளர் அகிலனின் 'பால்மரக் காட்டினிலே' மலேசிய ரப்பர் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வின் சிறுபகுதியை அறிமுகப்படுத்தும் முயற்சி.

'பால்மரக் காட்டினிலே' 1976 சனவரி முதல் கலைமகள் இதழில் தொடராக வந்த நாவல். 1975 மே- ஜுன் மாதங்களில் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் அழைப்பின் பேரில் மலேசியா, சிங்கப்பூர் சென்ற அகிலன், மலேசியாவில் தங்கியிருந்த ஒரு மாதத்தில் அங்கிருந்தத் தேயிலைத் தோட்டங்களைப் பார்த்து, தோட்டத் தொழிலாளர்களான தமிழர்களின் சிக்கல்களை உணர்ந்து எழுதிய நாவல் இது.

எஸ்டேட் எனப்படும் இரப்பர் தோட்டங்கள், இரப்பர் மரங்கள்... பால் எடுத்தல், இரப்பர் தொழில், இரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் வாழும் லயங்கள், அவர்களின் குடியிருப்புகள், அதிகாலைத் தொடங்கி அந்தி சாயும் வரை அவர்கள் படும் இன்னல்கள், ஆங்கிலேய முதலாளிகளின் நேரடித் தொடர்பில் இருக்கும் வெள்ளைத் துரைகள், கங்காணிகள் மாதிரியான கிராணிகள், மஸ்டர் களம் - காங்கு, திட்டி எனும் விடுப்பு, கூலி முறைகள், குழந்தைகளுக்கு ஆயாக் கொட்டகைகள், பள்ளிக்கூடங்கள், பாலியல் சீண்டல்களுக்கு உள்ளாகும் பெண்களின் நிலை, பிள்ளைப் பேற்றை மட்டுமே 'துய்ப்பாக'க் கொண்டு நடக்கும் பிரசவங்கள், கருச்சிதைவுகள், ஆதிக்கம் மற்றும் சுரண்டலுக்கு எதிராக இளைய தலைமுறையினரின் விழித்தெழல்... என இச்சிறு நாவல் மலேயாத் தோட்டத் தொழிலாளர் வாழ்வை ஓவியம் போலத் தீட்டி விடுகிறது.

தமிழ்நாட்டிலிருந்து வாழ்வாதாரம் தேடி மலேயா மண்ணுக்கு கனவுகளுடன் சென்ற ஒரு குடும்பம், தோட்டத் தொழிலில் ஈடுபட்டு பல்லாண்டுகள் கழிந்து அடுத்த தலைமுறைகளைக் கண்ட வாழ்வின் சிறு துளியை நாவல் பதிவு செய்கிறது. கூடவே, மலேசிய நாட்டின் விடுதலை, அந்நிய ஆங்கில தோட்ட முதலாளிகள் தங்கள் தோட்டங்களை உள்ளூர் பணக்காரர்களிடம் விற்க முயல்கின்றனர். கூடுதலான தோட்டப் பரப்பு. அதன் அதிக விலை காரணமாக தனி ஒருவரிடம் விற்க முடியாத நிலைமை. எனவே பலரிடம் தோட்டத்தைப் பிரித்து விற்கத் தயாராகின்றனர். இது 'தோட்டத் துண்டாடல்' எனத் தொழிலாளர்களால் அழைக்கப்படுகிறது. இப்படி விற்கப்படும் தோட்டங்களின் தொழிலாளர்கள் 'நோட்டீஸ்' தரப்பட்டு வெளியேற்றப் படுகின்றனர். சக தொழிலாளச் சொந்தங்களோடு பிற தோட்டங்களில் தங்க முடியாத நிலையும் உருவாகிறது. இந்நிலையில் ஒரு தலைமுறை வாழ்ந்து பிள்ளை, குட்டிகளைப் பெற்று வாழ்ந்தவர்கள் 'லயங்கள்' எனும் குடியிருப்புகளை விட்டும் தோட்டத் தொழிலிலிருந்தும் வெளியேற்றப்படுகின்றனர். மீண்டும் தாய் நாட்டிற்குத் திரும்புவதா? புதிய தோட்டங்கள் அமைக்கும் இடங்களுக்குச் செல்வதா? இங்கேயே பாரசாரிகளாக, நடைபாதை வாசிகளாகக் கிடப்பதா? சரி. ஆண்கள் கூட எப்படியோ 'காலம்' தள்ளலாம். பெண்கள், வயதுக்கு வந்த இளம் பிள்ளைகள் நிலை... மீண்டும் பூஜ்ஜியத்திலிருந்து... பெற்றோர்கள் அரை நூறாண்டுக்கு முன் வந்த அதே கால வாழ்வுக்குத் திரும்புவதா? எனும் அடிப்படை அதிர்ச்சி தான் நாவலின் மையம் எனலாம்.




தமிழ்நாட்டின் புதுக்கோட்டைப் பகுதியிலிருந்து வீரப்பன், வேலம்மாள் ஆகியோர் வேலம்மாளின் தம்பி பழனியுடன் மலேசியா வந்து சேர்கிறார்கள். தோட்ட வேலை, வசதி வாய்ப்பாய் வாழலாம், என வந்தோர்க்கு ஏமாற்றமே மிஞ்சியது. காடழிந்து சமவெளியாக்கி இரப்பர் தோட்டங்கள் உருவாக்குகின்றனர். முருகன், முத்து, பாலன், நடேசன், செல்லம்மாள், கமலம், ராஜா எனப் பிள்ளைகளைப் பெற்று வளர்க்கின்றனர். முருகன் படித்து ஆசிரியராகி கோலாலம்பூரில் பணி செய்து, அங்குள்ள வசதி வாய்ப்பான பெண்ணை மணந்து, பெற்றோர் உற்றாரை மறந்து விடுகிறான். நடேசன் படித்து உள்ளூர் தோட்ட மக்களுக்கானப் பள்ளியில் ஆசிரியப் பணியாற்றுகிறான். அண்ணன் முருகன் தன்னைப் போலவே 'வசதியாய்' வாழ

அழைத்தும் அதை மறுத்து தோட்டத்து வாழ்விலேயே தங்கிவிடுகிறான். இந்நிலையில், பாலனின் மாமா பழனியின் குடும்பம் அருகில் உள்ள தோட்டத்தில் தொழிலாளர்களாக உள்ளனர். அத்தோட்டத்தில் 'துண்டாடல்' 'நோட்டீஸ்' தரப்படுகிறது. பழனிக்கு காமாட்சி, கண்ணம்மா என்று இரண்டு மகள்கள். சிறுபிராயத்திலேயே காமாட்சிக்கு முருகன் என்றும் கண்ணம்மாவுக்கு பாலன் என்றும் எழுதப்படாத 'முடிவு' எட்டப்படுகிறது. முருகன் பணிக்குச் சென்ற இடத்தில் தன்மூலம் மறைத்து, காதலித்து ராதாவை கைப்பிடிக்கிறான். கூடவே ஊரையும் உறவையும் ஒதுக்கி விடுகிறான்.

இந்நிலையில் 'தோட்டத் துண்டாடலில்' பழனி குடும்பம் இடம் பெயர வேண்டிய நெருக்கடி. பாலன் முன் முயற்சி செய்து கண்ணம்மாவை தானும், காமாட்சியை தன் மற்றொரு உடன்பிறந்தான் முத்துவும் திருமணம் செய்து கொள்ள உறுதியளிக்கிறார்கள். பழனியின் தோட்டத்தில்தான் நோட்டீஸ் தரப்பட்டுள்ளது. வீரப்பன் தோட்டத்தில் தற்போதைக்கு இந்நிலை இல்லை. எனவே பாலனுக்கும் முத்துவுக்கும் திருமணம் செய்து விட்டால் காமாட்சி, கண்ணம்மா இருவரும் பாதுகாக்கப்படுவர் என்ற எண்ணத்தில் ஏற்பாடு செய்கின்றனர். இந்நிலையில் யாரும் இது போல திருமணம் செய்யவோ, பிற தோட்ட ஆட்களுக்கு அடைக்கலம் தரவோ கூடாது என்று அறிவிப்பு வருகிறது. செய்வதறியாது திகைக்கின்றனர். பாலன் எப்படியாவது மாமன் மகள்களைக் காத்திட பிற நகரம் செல்ல எண்ணுகிறான். அவ்வேளை பாலனை அழைக்கும் கண்ணம்மா மங்கலத் தோற்றத்தில், மஞ்சள் துண்டைத் தாலியாகத் தந்து கழுத்தில் கட்டச் சொல்லி கணவன் மனைவி வாழ்வை பாலனோடு பகிர்ந்து கொள்கிறாள். தன்னால் தன் குடும்பத்துக்கும், மாமன் குடும்பத்துக்கும் தொல்லை நேரக்கூடாது எனத் திட்டமிட்டு இதனைச் செய்த கண்ணம்மா தூக்கில் தொங்கிவிடுகிறாள்.

இதற்கிடையே 'துண்டாடல்' சிக்கலைச் சமாளிக்க தொழிலாளிகள் ஒன்று சேர்ந்து சங்கமாகி பங்குப்பணம் தந்தால், அரசாங்கமும் உதவிப்பங்குப் பணம் தந்து தோட்டத்தை தொழிலாளிகளே நிர்வகிக்க வழி சொல்கிறார்கள். பாலனும், பாதிக்கப்பட்டத் தோட்டத்து கணேசன் உள்ளிட்ட இளைஞர்களும் தீவிரமாக இதில் செயல்படுகிறார்கள். தலைக்கு நூறு வெள்ளி வீதம் ஆயிரம் பேரை இலக்கு வைத்து அறுநூறு பேரைச் சேர்க்கிறார்கள். இந்நிலையில் இதை விரும்பாத முதலாளிகள் இதைச் சீர்குலைக்க முயன்று தோட்டத்து ஆட்களையே கருவியாக்குகிறார்கள். பாலன், கணேசன் போன்றோரைக் குற்றம் சொல்லி பலரைத் தூண்டிவிட்டு பணத்தைத் திரும்பக் கேட்கிறார்கள். வேறு வழியின்றி செலவளித்த தொகையினை தான் கொடுத்த நிதி முழுவதற்கும் எடுத்துக் கொள்ளச் சொல்லி, பாலன் தொகையை திரும்பக் கொடுத்து விடுகிறான்.

பழனி குடும்பமும் இன்னும் சிலரும் 'சாபா' மாகாணத்தில் புதிதாக உருவாகும் தோட்டத்துக்கு மறுபடியும் தொழிலாளர்களாக இடப்பெயர்ச்சி அடைய முடிவு செய்கிறார்கள். 'விக்டரி' தோட்டத்தில் கெடுபிடிகள் அதிகமாகின்றன. பாலன் பள்ளி, ஊர் நடவடிக்கைகளுக்காக வேலை நீக்கம் செய்யப்படுகிறான். கணேசன் விரும்பிய 'செல்லம்மாள்' தோட்டத்து 'டாக்டர்' 'டிரெஸ்ஸர் மாதவன்'' எனும் காமக்கொடூரனால் பாலியல் வல்லுறவுக்கு வலியுறுத்தப்பட, அதனைக் கண்ட பாலனின் தம்பி முத்து, மாதவனை துவம்சம் செய்கிறான். பொய் வழக்குப் போட்டு செல்லம்மாள், முத்து ஆகியோரை போலீஸ் அழைத்துச் செல்கிறது. இளைஞர்கள், தொழிலாளிகள் பாலன் தலைமையில் எதிர்ப்புப் போராட்டத்தில் அகிம்சை முறையில் ஈடுபடுகிறார்கள். இதனைக் கண்டு ஆத்திரமுறும் தோட்ட வெள்ளைமுதலாளி, மக்கள் ஒற்றுமை, அவர்கள் பக்க நியாயம் உணர்ந்து மாதவனை பணிநீக்கி, காவல்துறையிடம் ஒப்படைத்ததுடன், பொய் வழக்குகளை விலக்கி சலுகைகளும் தர ஒப்புக் கொள்கிறார். அதே வேளை, பாலனின் வேலைப் பறிப்பை மாற்ற மறுத்து விடுகிறார். பாலன் தன் மாமன் பழனி குடும்பத்தை வழியனுப்பி விட்டு, தான் தோட்டத் தொழிலாளர்களுக்காகப் போராடத் தொழிற்சங்கப் பணிக்கு நகரம் செல்வதோடு கதை முடிகிறது.

இந்நாவலில் ஒருவித இலட்சியவாதமும், நடப்பியல் வாதமும் இணையோட்டமாகச் செல்கிறது. நாவல் வழி இரப்பர்த் தோட்டத் தொழிலாளிகளின் வாழ்வின் சிறுபகுதி பொதுச் சமூகத்துக்கு வெளிச்சமிட்டுக் காட்டப்பட்டது ஒன்றே இதன் சாதனை எனலாம்.

நாவல் தொடர்கதையாக வந்ததால் ஒவ்வொரு பகுதியும் ஒரு தலைப்புடன் இருபத்து நான்கு இயல்களாக அமைந்துள்ளது. கதை மாந்தர்கள், அவர்களின் இயல்பு, கதைப் போக்கு ஆகியன அடிப்படையில் அகிலன் தலைப்புகளை இட்டுள்ளார்.

**தோட்ட வாழ்க்கை**

நாவல் முழுதும் தோட்டத் தொழிலாளர் வாழ்முறைகள் குறித்தப் பதிவுகள் விரவிக்கிடக்கின்றன. இரப்பர் பால் எடுத்தல், பாலமாக்குதல், அரைத்தல் போன்ற தொழில் கூறுகள் விளக்கப்படுகின்றன. அவரவர் "மரங்களை நாடிச் சென்று, கீறப்பட்ட பகுதிகளின் பட்டைகளைச் சீவிக் கிண்ணங்களில் பால்வடியச் செய்ய வேண்டும். ஒவ்வொரு மரமாக இப்படி முதலில் சீவி விட்டுக் கொண்டே வர வேண்டும். இதற்குள் காலை பத்து பத்தரை மணியாகிவிடும். பிறகு அங்கேயே மரக்காட்டில் காலை ஆகாரம் நடக்கும். சாப்பிட்டவுடன் மீண்டும் பாலைச் சேகரிக்க வேண்டும். கிண்ணத்துப் பால் வாளிக்கு வந்த பின்னர் பெரிய வாளிக்கு மாற்றப்படும். அங்கிருந்து அதைக் கொண்டு போய் நிறுத்துக் கணக்குக் கொடுப்பார்கள். அளவுக்குத் தக்கபடி நாள்தோறும் கூலி பதிவாகும். தினக்கூலிதான். மாதச் சம்பளம் இல்லை". *(ப.15)*

தோட்டத் தொழிலாளர்களின் 'லயங்கள்' எனப்படும் வீடுகளின் அமைப்பு நாவலில்,

"மரப் பலகைகளில் இணைத்துக் கட்டப்பட்டு, மேலே தகரக் கூரை வேய்ந்த ஒருவகைப் பரண் வீடுகள். கீழே மரக்கம்பங்கள் நட்டு, வீட்டுக்கு வீடு தடுப்பு சுவர்களைப் போன்ற பலகை அடைப்புக்கள். மேலே வரிசை வரிசையான அறைகள். அறைகளுக்கு முன்னே உள்ள நீண்ட வராந்தா, நாலு குடும்பங்களுக்குப் பொதுவானது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் மேலே ஓர் அறை; அதற்குக் கீழே உள்ள தரைப்பகுதி. குடும்பத்தில் இரண்டு பேராக இருந்தாலும் சரி, பத்துப் பேராக இருந்தாலும் சரி, அதுதான் வீடு. *(ப.10)*

தோட்டத் துண்டாடல் அறிவிப்பு நோட்டீஸ் தந்ததும் அந்த மக்கள் பட்டத் துன்பத்தில் அவர்களின் கடந்த காலமும் நிகழ்காலமும் நெஞ்சில் நிழலாகும் படியாக நாவலாசிரியர் பலவற்றைப் பதிவு செய்கிறார்.

"வெள்ளைத் தோட்ட முதலாளிக்கு ஆள் தேவைப்பட்ட காலத்திலே, நம்மவங்களை நாட்டை விட்டு நாட்டுக்கு ஒப்பந்தக் கூலியாகக் கொண்டாந்தான். அரை வயித்துக் கஞ்சிக்கு அல்லும் பகலுமா உழைக்கச் சொன்னான். உறிஞ்ச வேண்டியதையெல்லாம் உறிஞ்சியாச்சு. சக்கையைத் துப்பி எறிஞ்சிட்டு, தோட்டத்தை வித்த பணத்தை மூட்டைக் கட்டிக்கிட்டு, அவன் கப்பலேறப் போறான். நாம இப்ப எங்க போறது? எப்படிப் பிழைக்கிறது?"*(ப.26)*. சரியான விமர்சனம் இது.




அதே போல அந்தத் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் நிலையை,

"சிலர் ஆறாம் வகுப்பைக் கூட எட்டவில்லை. அந்தத் தோட்டத்து மண்ணிலேயே கருவாகி, உருவாகி, வித்தாகி, பயிராகி இன்று சிறு செடியாய் வேரூன்றி வளரத்துடிப்பவர்கள். தோட்டமாகிய அந்த மரக்காட்டை விட்டால் வேறு வெளி உலகத் தொடர்பே சிறிதும் இல்லாதவர்கள். மேற்படிப்புக்கும் வழியில்லை; வேறு வேலைக்கும் பயிற்சியில்லை. சரியாக அவர்களுக்கு வழி காட்டுவோரும் இல்லை. ஆணிவேர் நறுக்கப்பட்ட இளங்கன்றுகளாக அவர்கள் அங்கே தத்தளித்து தடுமாறிக் கொண்டிருக் கிறார்கள்" *(ப. 26)* எனப் பதிவு செய்கிறார்.

மலேசிய நாட்டின் உணவு, பழக்கவழக்கங்கள் அங்கொன்றும், இன்கொன்றுமாக பதிவாகி உள்ளன 'ரம்புத்தான்' எனும் பழம் பற்றி, "செக்கச் சிவந்த நிறத்தில் கோழி முட்டையை ஒத்த வடிவத்தில் நீண்ட காம்புகளுடன் விளங்கிய அந்தப் பழம் பார்ப்பதற்கும் கண்ணைப் பறித்தது; சுவைப்பதற்கும் இனிமையாக இருந்தது. தோலைக் கீறி அகற்றிவிட்டு, உள்ளே பனம் நுங்கின் சுளை போல் இருந்த பழத்தை எடுத்துச் சாப்பிட்டான்" *(ப. 36)* எனச் சுட்டுவார்.

முருகன் தோட்டத்திலிருந்து படித்து, வெளியேறி, ஆசிரியர் வேலைக்குப் போய் கோலாலம்பூரில் வசதி வாய்ப்புகள் நிறைந்த பெண் ராதாவை விரும்பித் திருமணம் செய்து கொள்கிறான். அவர்களிடம் தான் 'தொழிலாளி' குடும்பம் என்பதை மறைத்து, தன்

தந்தை 'கிராணி' என்கிறான். மேலும், பாலனையும் இத்தகு வாழ்வுக்கு அழைக்கிறான்.

"இதோ பார் பாலா, நான் உனக்கு உதவி செய்யணும்னா நீயும் எனக்கு ஓர் உதவி செய்துக்கணும். எஸ்டேட் வாழ்க்கையை அடியோடு நீ வெறுக்கக் கத்துக்கணும். பிறவியிலேருந்து அது கொடுத்திருக்கிற தாழ்மை உணர்ச்சியை வேரோடு கிள்ளிக் குப்பைத் தொட்டியிலே எறிஞ்சிடணும். அதோட பாசம், பந்தம், ஒட்டு, உறவு எல்லாத்தையும் கத்தரிச்சுக்கிட்டு, நீ அதிலேருந்து தப்பிச்சுக்கணும்; ஆமா, தப்பிச்சுக்கணும்".*(ப. 78)*

ஆனால், பாலன் இவற்றுக்கு ஆட்படவில்லை. தன் வேலையே போன பின்னும் தன் மக்களுக்காக நிற்கிறான். மாறாக, முருகனின் 'பொய்' அம்பலப்பட்டு முதலிரவே ஏமாற்றத்தில் முடிகிறது. இந்த வகை மாதிரிப் பாத்திரப் படைப்புகள் வழி 'மேல் நிலையாக்க' உணர்வுகளின் அடித் தளத்தை நாவலாசிரியர் தொட்டு விவாதிக்கிறார்.

**விழிப்புணர்வு**

ஊரில் மாந்தோப்பையும், தென்னந்தோப்பையும் மனதில் வரித்து தோட்ட வேலைக்கு வந்தவர்கள் மலை முகடுகளில், வனத்தில், வனவாசிகளைப் போல 'டெண்ட்' வீடுகளில் வாழ நேர்ந்தது அவலம் தான். ஆங்காங்கே இளைஞர்கள் வழியாக மாற்றம், முன்னேற்றம் குறித்த விழிப்புணர்வு தென்படுகிறது.

"ரப்பர் மரம் வெட்றதைத் தவிர வேறே எந்த வேலையுமே செய்யத் தெரியாத ஒரு கூட்டம் இருக்கலாமாங்கறது தான் என் கேள்வி. வேறே எந்த வேலையுமே பழகாமல், வேறே எந்த வேலைக்குமே லாயக்கில்லாமல் இருக்கிறதுனாலேதானே இன்னும் நாலு நாளைக்குப் பிறகு நூத்துக்கணக்கான குடும்பம் அவதிப்படப் போகுது? காலப் போக்கைத் தெரிஞ்சுகிட்டு அதற்குத் தகுந்தாப்பிலே நாம்ப இங்கே வாழ வேண்டாமா?" *(ப. 112)* தொழிலாளிகள் பிள்ளைப் பெற்றுக் கொள்வது, கடன் வாங்குவது, வட்டியை அடைக்கக் காலம் பூராவும் உழைப்பது, சீட்டுப் போட்டு ஏமாறுவது, 'சம்சு' எனும் சாராயத்தண்ணிக் குடிப்பது என்பதாகக் 'காலம் கழித்தார்கள்' அடுத்தத் தலைமுறையாவது படிக்க வேண்டும் எனப் பள்ளிக்கூடமும், டியூசனும் பாலன் போன்றவர்களால் முன் எடுக்கப்பட்டன. அதே போல தோட்டத்துக்கும் முதலாளிகளுக்கும் வந்த 'மின்சாரம்' லயங்களுக்கும் வரக் கோரிக்கை வைக்கப்பட்டது. பாலியல் அத்து மீறல்களுக்கும் முடிவு காணப் போராட்டங்கள் வெடித்தன.

இந்நாவல் எழுதப்பட்ட பொழுது மலேசியாவில் தமிழ் இலக்கியம் என்று ஒன்று உருவாகியிருக்கவில்லை. தமிழ்நாட்டு இலக்கியங்களே வலம் வந்தன. படித்தவர்கள் மிகக் குறைவு. எழுதுபவர்கள் இல்லை எனும் நிலைதான்.

இந்நாவலைப் படித்து, பார்த்து எழுதத் தொடங்கியவர்கள் பலர். இது தமிழ் நாட்டுத் தமிழர்கள் மலேசியத் தமிழர்களை அறிந்து கொள்ள எழுதியது என்பார் அகிலன். ஆனால், மலேசியா வாழ் தமிழர்களே தங்கள் நாட்டின் தமிழ்க் குடிகளை அறிய இந்நாவல் பெரிதும் உதவியது என்பர்.

"நான் எழுதும் இந்த வாழ்க்கையில் நேரடியான அநுபவம் பெறாதவன்; தோட்டப்புறங்களில் வாழாதவன் ஆனாலும் தமிழ்நாட்டு எழுத்தாளன் ஒருவன் மேற்கொள்ளும் முதல் முயற்சி இது. இதுவரை இங்குள்ள எழுத்தாளர் யாரும் நமக்கு ரப்பர்த் தோட்டங்களில் வாழும் மலேசியத் தமிழர்களை அறிமுகம் செய்து வைக்கவில்லை. அந்த வகையில் இந்த நாவல் ஒரு முன்னோடியாக இருந்தால் போதும். எதிர் காலத்தில் மலேசியத் தமிழ் எழுத்தாளர்களிடமிருந்து வெளிவரப் போகும் தலைசிறந்த - தோட்டப்புற வாழ்க்கை கொண்ட நாவல்களுக்கு காலத்தால் சருகால் உதிரும் இந்த நாவல் சிறிதளவு உரமாகப் பயன்படுமானால் அதையே நான் பெற்றப் பெரும் பேறாகக் கருதுவேன்." என முன்னுரையில் அகிலன் குறிப்பிடுவார். அரை நூற்றாண்டை நெருங்கியும் இது சருகாகாமல் இருப்பதே வெற்றி.

'ரப்பர் மரத்திற்கு ரணங்கள் புதிதல்ல' மனிதர்களுக்கும் தான். நம்பிக்கை, மாற்றம், வளர்ச்சி, முன்னேற்றம் என்பது மனித குலத்தின் கனவு மட்டுமல்ல இருப்பும் தான்.

**பயன்பட்ட நூல்கள்**



1. அகிலன், எழுத்தும் வாழ்க்கையும், பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 1978 (முதற்பதிப்பு).
2. அகிலன், பால்மரக்காட்டினிலே, தாகம், சென்னை, 2021(இரண்டாம் பதிப்பு).
3. சு. வேங்கடராமன், இந்திய இலக்கியச் சிற்பிகள் - அகிலன், சாகித்திய அகாதெமி, சென்னை, 2018 (இரண்டாம் பதிப்பு)


●


கட்டுரையாளர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல்துறைத் தலைவர், தஞ்சாவூர்

கட்டுரை





# அம்பேத்கர் குமரப்பா கருத்தியலின் நடைமுறைச் சாத்தியம்

க. பழனித்துரை

டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர், ஜே.சி.குமரப்பா இருவரும் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பயின்றவர்கள். பேராசிரியர் செலிக்மேனிடம் பயின்றவர்கள். இவர்கள் இருவரையும் ஒப்பீடு செய்ய இயலாது. ஆனால், இருவரும் இந்திய நாடு உருவாக்கத்தில் மிக முக்கியப் பங்கை ஆற்றியவர்கள். இருவருக்கும் கனவுகள் இருந்தன, கருத்தியல் இருந்தது. அவைகளை நிறைவேற்றுவதற்காக பல்வேறு நிலைகளில் களமாடியவர்கள். அவர்களின் மறைவுக்குப்பின் அவர்களின் முன்னெடுப்புக்கள் தொடர்ந்தனவா, அவைகளின் தாக்கங்கள் என்னென்ன? என்பதுதான் அடிப்படைக் கேள்விகள்.

இந்த இருபெரும் கருத்தியலாளர்கள் பற்றி அவர்களுடைய கருத்தியல்கள் பற்றி அறிவுத்தளத்தில் நிறைய விவாதித்துவிட்டோம். இனிமேலும் விவாதித்துக் கொண்டே இருப்பது, நேரத்தை வீணடிப்பதாகும். களம் காத்திருக்கிறது நமக்காக எனவே கருத்தியலை,

களச் செயல்பாடாக மாற்ற நாம் தயாராக வேண்டும். அதற்கான வாய்ப்புக்கள் நாடு சுதந்திரம் அடைந்தபோது கிடையாது. ஆனால் இன்று அளவுகடந்த வாய்ப்புக்கள் மக்கள் முன் நிற்கின்றன. அவைகளைப் பயன்படுத்த மக்களைத் தயார் செய்வதுதான் இன்றைய சூழலில் படித்த நடுத்தர வ்ர்க்கத்தின் மிக முக்கியமான கடமை. அதைச் செய்ய நாம் தயாராக வேண்டும்.

இந்திய நாடு சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 75 ஆண்டுகளும் (அவசரகால நிலையிலிருந்த இரண்டு ஆண்டுகளைத்தவிர) நாம் மக்களாட்சியில்தான் இருந்து வருகின்றோம். சுதந்திர நாட்டில் மக்களாட்சியில் இருக்கும் நாம் அனைவரும் சுதந்திரக்காற்றை சுவாசிக்கின்றோமா? சமத்துவத்தை அனுபவிக்கின்றோமே? ஒடுக்கப்பட்டவர்களுக்கு சமூக நீதி கிடைத்துவிட்டதா? அனைத்துத் தரப்பு மக்களும் மானுட வாழ்க்கை எப்படி வாழ வேண்டுமோ அதற்குத் தேவையான அடிப்படை வசதிகளைப் பெற்று மானுட வாழ்க்கையை மதிக்கத்தக்க மரியாதையுடைய வாழ்வாக வாழ்கின்றோமா? நம் தேசத்தின் தலைவர்கள் சுதந்திரப் போராட்டத்தின்போது சுதந்திரம் கிடைத்தால் நம் வாழ்க்கை எப்படியெல்லாம் மாறப்போகிறது என கனவுச் சித்திரத்தை வரைந்து மக்களிடம் வாக்குறுதிகளாகக் கொடுத்தார்கள், அவைகளெல்லாம் நடைமுறைக்கு சுதந்திர நாட்டில் ஆட்சியாளர்கள் கொண்டுவந்தார்களா? நம் தேசத்தை கட்டமைக்க கருத்துக்கொடைகளை வழங்கிய நம் மகான்கள் நவீன இந்தியாவை உருவாக்க கனவு கண்டார்கள், அந்தக் கனவு மெய்ப்பட நம் தலைவர்கள் ஓர் அரசமைப்புச் சாசனத்தை தயாரித்து நம்மிடம் அளித்தார்கள். அதுதான் நம் குடிமக்களை, அரசாங்கத்தை வழிநடத்தும் வழிகாட்டுப் பட்டயம்.

அன்று இந்தியாவின் விடுதலைக்கும், இந்திய நாட்டின் உருவாக்கத்திற்கும், புதிய சமூகத்தை கட்டமைத்து உருவாக்குவதற்கு சிந்தனைக் கொடைகளைத் தந்து நமக்கு நம் தலைவர்களால் வழிகாட்ட முடிந்தது. தங்கள் தியாகத்தின் விளைவாக ஒரு நாட்டை உருவாக்கி இந்த நாட்டின் கடைக்கோடி மனிதனும் பயன் அடையுமாறு ஒரு மக்களாட்சிக் கட்டமைப்பை உருவாக்கித் தந்தார்கள். நம்மிடம் தந்த மக்களாட்சியைப் பயன்படுத்தி அரசியல் சாசனத்தை முறையாக மக்கள் பங்கேற்போடு நடைமுறைப்படுத்தியிருந்தால், மிகப்பெரிய சமூக பொருளாதார மாற்றத்தை இந்திய சமூகத்தில் உருவாக்கி இருக்க முடியும்.

இந்த 75 ஆண்டு காலத்தில் மக்களாட்சி உருவாக்க வேண்டிய விளைவுகளை சமுதாயத்தில் உருவாக்கியதா என்பதுதான் இன்றைய பிரதானக் கேள்வி. ஆம் உருவாக்கியிருக்கிறது, யாருக்கு என்றால் இந்தியாவில் வாழும் 140 கோடி மக்களில் 80 கோடி மக்களைத் தவிர்த்து மற்றவர்களுக்கு மாற்றங்களைத் தந்துள்ளது. இந்த 80 கோடி மக்கள் யார்? இவர்கள் அனைவரும் இந்திய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் உணவுப் பாதுகாப்பை பெற்று வாழ்பவர்கள். ஆடு மாடு மேய்ப்பவர்கள், காடுகளை பாதுகாக்கும் ஆதிவாசிகள், விவசாயக் கூலிகள், சிறு விவசாயிகள், கைத்தொழில் செய்து பிழைப்போர், கடற்கரையைப் பாதுகாக்கும் மீனவர்கள், தெருவோரம் கடைகள் வைத்து பிழைப்பு நடத்துவோர், துப்புரவுத் தொழில் செய்வோர், சிறு தொழில் மற்றும் வணிகம் செய்வோரிடம் பணி செய்வோர், இந்தியாவில் கட்டுமானப் பணிகளான அடுக்குமாடி கட்டிடம் கட்டுதல், சாலை அமைத்தல், விமான நிலையம் அமைத்தல், வணிக வளாகங்கள் கட்டுதல், பணிகளில் புலம்பெயர்ந்து உடல் உழைப்பில் ஈடுபட்டிருப்போர், வீட்டுப் பணியில் ஈடுபடும் பெண்கள் அனைவரும் அடங்குவர்.

மேற்கூறிய சமூகங்களின் பொருளாதார வாழ்வு மேம்பட்டதா, அவர்கள் வாழ்வுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் கிடைத்தனவா? அவர்களுடைய சுய மரியாதை பாதுகாக்கப்பட்டதா? அவர்களுடைய வாழ்க்கை மதிக்கத்தக்கதாக இருக்கின்றனவா? அவர்களுக்கு இந்த மக்களாட்சி தர வேண்டிய பயன்களைத் தந்ததா? என்று வினவி ஆராய்ந்து பார்க்க வேண்டும். இவைகளை எல்லாம் தரவேண்டியது நம் அரசாங்கம்தான். அந்த அரசாங்கம் அந்தப் பயன்களைத் தந்ததா? என்பதுதான் கேள்வி. அந்தக் கேள்விக்கு பதில் தேடி முனைந்தால் தெளிவாக நமக்கு பதில் கிடைக்கிறது. அரசாங்கம் செயல்பட்டிருக்கிறது. அதை மறுக்க இயலாது. யார் வாழ்வு வளம் பெற்றிருக்கிறதோ அவர்களுக்குப் பணி செய்திருக்கிறது. 140 கோடி மக்களில் 60 கோடி மக்களுக்கு வளமை சேர்க்க உதவி செய்திருக்கிறது அரசாங்கம். மீதமுள்ள 80 கோடி மக்கள் அரசின் பயனாளிகள். இந்தச் சூழலில்தான் யாருக்குப் பணி செய்தது நம் அரசு? என்ற கேள்வியை முன் வைக்கின்றோம், 60 கோடி மக்கள் அரசாங்கத்தை தங்களுக்குப் பயன்படுத்துகின்றனர். 80 கோடி மக்களுக்கு அரசை எப்படிப் பயன்படுத்துவது? என்று புரியவில்லை. எனவேதான் இன்றும் அவர்கள் பயனாளியாக இருந்து வருகின்றனர்.

நம் தேசத்தைக் கட்டுமானம் செய்த தியாகத் தலைவர்கள் வாழ்ந்த காலத்தில் நாம் வாழும் காலத்தில் நமக்குக் கிடைத்திருப்பதுபோல் அறிவியல் தொழில்நுட்ப வசதிகள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் கண்டதெல்லாம் வறுமை, ஏழ்மை, அறியாமை, அடிமைத்தனம், மூடத்தனம், சுரண்டல் இவைகள்தான். உதாரணமாக இந்திய அரசமைப்புச் சாசனத்தை உருவாக்குகின்றபோது உலகில் உள்ள 60 அரசமைப்புச் சாசனங்களைப் படித்து இரவு பகலாக அவைகளிலிருந்து குறிப்புக்களை எடுத்து அதை வைத்துக்கொண்டு இந்தியாவுக்கு

ஏற்ற ஓர் அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கித் தந்தார் பாபாசாகிப் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர். இதுதான் நம் நாட்டு மக்களுக்குக் கிடைத்த முதல் விடுதலைக்கான ஆயுதம். இந்த ஆயுதத்தைப் பயன்படுத்தித்தான் நம் நாட்டில் வாழும் அனைத்துத் தரப்பு மக்களும் குடிமக்களாக மாற வேண்டும். நம் வாழ்க்கைக்கு, மேம்பாட்டுக்கு, சுதந்திரத்திற்கு, அமைதிக்கு, மகிழ்ச்சி வழிகாட்டும் ஓர் ஒப்பற்ற ஆயுதம் அல்லது கருவி. நம் தலைவர்கள் கண்ட கனவான நவீன இந்தியாவை உருவாக்கவல்ல பலம் பொருந்திய ஆயுதம் நம் அரசியல் சாசனம். ஆனால், அதைப் பயன்படுத்தத் தேவையான ஒரு பார்வையும் திறமையும் மக்களிடம் வளர்க்கப்படல் வேண்டும். இந்த ஆயுதத்தை வெற்றுக்காகிதத்தில் எழுதி வைக்கவில்லை, மக்கள் உபயோகித்து அதிகாரப்படுத்தி தங்களை விடுவித்துக் கொண்டு வாழ வழிமுறை காட்டும் கருவியாக்கித் தந்தார்.

இவரின் உழைப்பைப் பற்றிக் கூறுகையில் அரசமைப்புச் சாசன வரைவுக்குழு உறுப்பினர் ஒருவர் ஒரு கருத்தைப் பதிவு செய்தார். "வரைவுக்குழு என்று ஒன்று உருவாக்கப்பட்டிருந்தாலும், அதில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் அந்தப் பணியினை டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்களிடம்தான் ஒப்படைத்திருந்தனர். அந்தக் குழுவில் இருந்த ஒருசிலரால் அந்தக் குழுவின் கூட்டங்களுக்குக்கூட வர இயலவில்லை. சிலர் கூட்டங்களுக்கு வந்தாலும் அந்தப் பணியை அண்ணல் அம்பேத்கரிடம்தான் ஒட்டுமொத்தமாக சுமத்தியிருந்தனர். ஆனால் அந்தப் பளுவைச் சுமந்து இந்திய நாட்டில் வாழும் அனைத்துத் தரப்பு மக்களும் சுதந்திர நாட்டில் உரிமைகளுடன் மரியாதையுடன் வாழ அரசமைப்புச் சட்டத்தில் வழிகண்ட பெருமை அவரையே சாரும்" எனப் பதிவிட்டார்.

இந்திய அரசமைப்புச் சாசனம் இந்திய மக்களுக்குக் கிடைத்த ஒரு மிகப்பெரிய ஆயுதம் சமூக மாற்றங்களைக் கொண்டுவர. நாடு சுதந்திரம் அடைந்தவுடன் சாதாரண மக்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய வாய்ப்பு அரசமைப்புச் சாசனம்தான். கல்வியறிவு குறைந்த நிலையில் இந்த அரசியல் சாசனத்தை இந்தியாவில் நடைமுறைப்படுத்த வைப்பது என்பதுதான் மிகப்பெரிய சவாலான பணி. அதை எப்படிச் செய்ய வேண்டும்? அதை யார் செய்ய வேண்டும்? என்பதுதான் முக்கியமான கேள்வி. நம் நாடு சுதந்திரம் அடைந்து 47 ஆண்டுகளுக்குப் பிறகு சுதந்திரக் காற்றை சுவாசித்தவர்கள் தென் ஆப்ரிக்க கருப்பின மக்கள். அந்த நாட்டின் அதிபராக இருந்த நெல்சன் மண்டேலா ஒரு கருத்தைப் பதிவு செய்தார். உலகில் விடுதலை அடையும் எல்லா இனங்களும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளக் கூறிய அறிவுரைதான் அது.

"ஒரு நாடு சுதந்திரம் பெறுவதற்கு மிகப்பெரிய விலையை மக்கள் கொடுத்தாக வேண்டும். அது தவிர்க்க இயலாது. அதை பெரும்பாலும் சுதந்திரத்திற்காகப் போராடும் நாட்டில் மக்கள் உணர்வு கொண்டு செய்து விடுவார்கள், ஆனால் அதைவிட மிக முக்கியமான பணி தியாகம் செய்து அடைந்த சுதந்திரத்தைப் பேணிக்காப்பது. அதற்கு சுதந்திரப் போராட்ட காலத்தில் போராடியதைவிட ஒரு மடங்கு அதிகமாகப் போராட வேண்டியிருக்கும். காரணம் இந்தப் போராட்டம் என்பது சுதந்திரம் அடைந்த நாட்டில் உள்ள சமூகங்களுக்குள் நடைபெறும் போராட்டம் என்பதால். அந்தப் போராட்டம் நடைபெறவில்லை என்றால் சுதந்திரம் அடைந்த நாட்டில் ஒருசில சமூகங்கள் அடிமை வாழ்வை வாழவேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டு விடுவார்கள். எனவே சுதந்திரம் அடைந்தவுடன் பொதுமக்களுக்கு தாங்கள் சுதந்திரம் அடைந்த நாட்டில் வாழ்வதற்கான சிந்தனைப்போக்கு என்ன என்பதை கற்றுத் தரவேண்டும். ஆதிக்கத்தில் அடிமைகளாய் வாழ்ந்தவர்கள் அடிமை மனோபாவம், அடிமைச் சிந்தனையுடன் காலகாலமாக வாழ்ந்து பழக்கப்பட்டவர்களை சுதந்திர நாட்டில் வாழ்வதற்கான புதிய சிந்தனையைக் கற்றுக் கொடுக்க வேண்டும். அதற்கு முதல்படி, அரசியல் சாசனத்தை சாதாரண மக்களுக்கு விளங்கும்படி எடுத்துக்கூறி அதுதான் அவர்களைப் பாதுகாக்கும் ஆயுதம் என்பதனையும் அந்த ஆயுதத்தை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்ற முறைமைகளையும் புரிய வைக்க வேண்டும். எனவே இந்தப் பணிதான் முதலில் நடக்க வேண்டிய பணி" என்று வலியுறுத்தி தென்னாப்பிரிக்காவில் செயல்பட வைத்தார். அந்தப் பணி என்பது அவ்வளவு சுலபமான பணி அல்ல. வறுமையிலும், அறியாமையிலும், பஞ்சத்திலும், பிணியிலும் சிக்குண்ட மக்களிடம் இந்தப் பணியைச் செய்வது மிகப்பெரிய சவால் நிறைந்த பணி. ஏழை பணக்காரர் பேதமின்றி சுதந்திரப் போராட்டத்தில் எப்படி மக்கள் ஈடுபட்டார்களோ, அதே நிலையில், அதே உணர்வுடன் நாட்டை உருவாக்கி, அனைவருக்குமான மேம்பாட்டைக் கொண்டுவர மக்களாட்சியை கலாச்சாரமாக வளர்த்தெடுக்க ஒரு மக்கள் போராட்டம் நடத்தப்பட்டாலன்றி, சாதாரண மக்களால் சுதந்திரக்காற்றை சுவாசிக்க இயலாது.

இந்தியா சுதந்திரம் அடைகின்றவரை பொதுமக்களைத் தொடர்ந்து போராட்ட சிந்தனையில் கொண்டுவந்து செயல்பட வைத்தனர் நம் தலைவர்கள். இந்தியா சுதந்திரம் அடைந்ததும் பொதுமக்களை மேம்பாட்டுப் பணிகளுக்குத் தயார் செய்வதை மறந்து, அரசைப் பெருமளவில் கட்டமைக்க செயல்பட்டு, மக்களை அரசாங்கம் தரும் நலன்களைப் பெறும் பயனாளிகளாகவே வைத்துக்கொள்ள முனைந்து, மக்களை சுதந்திர

நாட்டில் தங்களால் உருவான அரசுக்கு பயந்து வாழ பழக்கப்படுத்திவிட்டனர். இதன் விளைவு சுதந்திரமாக வாழ பழக்கப்படுத்தாமல், சார்ந்து வாழும் ஒரு மனோநிலைக்கு மக்களைக் கொண்டுவந்து விட்டனர். இதனால் மக்கள் பெருமளவு சுயமரியாதை இழந்தவர்களாகவும், தன்முனைப்பு அற்றவர்களாகவும் மாறி அரசிடமிருந்து வெகு தூரத்திற்கு விலகி நின்று செயல்படும் மக்களாக தங்களை உருவாக்கிக் கொண்டு விட்டனர். அரசும், அதனால் பெரும் பயன்களை அடையும் வர்க்கமும் மக்களை அதிகாரப்படுத்துவதற்குப் பதிலாக அதிகாரமிழந்த பயனாளிகளாக வைத்துக் கொள்வதில் ஆர்வம் காட்டின. வறுமையிலும், பஞ்சத்திலும், பிணியிலும் உழன்ற மக்கள் அரசை நம்புவதைத்தவிர வழியற்று நின்றனர்.

இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்து பல நாடுகள் விடுதலையடைய ஆரம்பித்தன. விடுதலை அடைந்த நாடுகள் அனைத்தும் மக்களாட்சியைக் கடைப்பிடித்து அரசாங்கத்தை அமைக்கப் போகிறோம் என பிரகடனம் செய்து மக்களாட்சியை நடைமுறைப்படுத்திய நாடுகளில் சாதாரண மக்கள் எந்த நன்மையையும் பெற இயலாது சுதந்திர நாட்டில் அடிமைகளாய் வாழ்வதைக் கண்ட நெல்சன் மண்டேலா மக்களாட்சிக்கான மக்கள் தயாரிப்புப் பற்றி அந்தக் கருத்தை பதிவு செய்தார். சுதந்திரம் என்பதை எப்படிப் போராடிப் பெற வேண்டுமோ அப்படித்தான் சமத்துவத்தையும் நாம் போராடிப் பெற வேண்டும். சுதந்திரத்திற்கு போராடி சுதந்திரத்தை அடைந்துவிட்டோம் என அமர்ந்து விட்டால், சமத்துவம் நம் மடியில் தவழாது. அதைப் போராடித்தான் பெற வேண்டும். இதைத்தான் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் இந்திய அரசமைப்புச் சாசனம் நமக்கு அரசியல் சமத்துவத்தை மட்டும்தான் வழங்கியுள்ளது. சமூக சமத்துவம் என்பது சுதந்திர நாட்டில் மக்களாட்சியின் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டும். அதைப்பெற மக்கள் குறிப்பாக தாழ்த்தப்பட்ட பட்டியலின மக்கள் போராட வேண்டும் என்பதை தெளிவு படுத்திவிட்டுச் சென்றார். இது எதன் மூலம் நடைபெறும் என்றால், மக்களாட்சி என்பதை தேர்தல் அதன் மூலம் ஆட்சியைப் பிடிப்பதற்கான வழிமுறை என்று எண்ணாமல் மக்களாட்சி என்பது ஒரு கலாச்சாரம், இதை நாம் செயல்படும் அனைத்து இடங்களிலும் சமத்துவத்தை கலாச்சாரமாகக் கொண்டுவந்து செயல்பட வைக்க வேண்டும். அதற்கு அரசியல் சாசனத்தைப் பயன்படுத்த வேண்டும். அதற்கான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நம் அரசியல், ஆட்சி, ஆளுகை நிகழ்வுகள் அனைத்தும் அதற்கு நேர் எதிர் திசையில் பயணித்துவிட்டன. நம் அரசியல், சமூக, கலாச்சார மத அமைப்புக்கள் அனைத்தும் மக்களாட்சிப் பண்புகளை கலாச்சார விழுமியங்களாக மாற்றி செயல்பட வைப்பதற்குப் பதில் சமூகத்தில் இருந்த எதேச்சாதிகார பிரபுத்துவ மனோபாவத்தை உள்வாங்கிக் கொண்டுவிட்டன. இதன் விளைவுதான் நம் மக்களாட்சி என்பதை நிறுவனங்களில் சடங்குகளாக்கி வைத்துவிட்டு, அதன் செயல்பாடுகளில் பிரபுத்துவத் தன்மையைப் புகுத்தி விட்டோம். இந்த நிலையினை நம் நாட்டு மக்களாட்சி பற்றி ஆய்வு செய்த அத்தனை ஆய்வு அமைப்புக்களும், நிறுவனங்களும் தங்களின் அறிக்கைகள் மூலம் தெரிவித்து விட்டன.

இந்த நிலையை அப்பட்டமாக வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தவர் இந்திய அரசமைப்புச் சாசனத்தை உருவாக்கும்போது, இந்திய அரசுக்கு ஆலோசகராக இருந்த கிரன்வில் ஆஸ்டின். இந்தியாவின் 50வது சுதந்திர தினம் கொண்டாடும் தருணம் வந்தபோது அரசமைப்புச் சாசனத்தை சீராய்வு செய்வோம் என ஒன்றிய அரசு பிரகடனப்படுத்தியபோது கிரன்வில் ஆஸ்டின் ஒரு கருத்தை இந்துப் பத்திரிகையில் ஒரு கட்டுரையாக எழுதி முன் வைத்தார். இந்திய அரசியல் சாசனத்தை ஆய்வு செய்யாதீர்கள், அந்தப் பணி தேவையற்றது. நாம் உருவாக்கிய அரசியல் சாசனத்தில் உள்ள முக்கியமான பகுதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டனவா என்பதை மட்டும் ஆய்வு செய்து பாருங்கள். அதுவும் குறிப்பாக இந்திய நாட்டில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உருவாக்கப்பட்ட சிறப்புப் பகுதிகள் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளனவா என்பதை மட்டும் ஆய்வு செய்யுங்கள் என வலியுறுத்தினார். இதற்கான காரணங்களையும் முன்வைத்தார். இந்த அரசியல்சாசனத்தில் அடித்தட்டு மக்களின் மேம்பாட்டுக்காக உருவாக்கப்பட்ட பல ஷரத்துக்களைப் பயன்படுத்தவே இல்லை நமது அரசும் சமூகமும் என்பதை எடுத்துக்காட்டினார்.

இந்த நிலை வந்துவிடக்கூடாது எனச் சிந்தித்த டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான பிரதிநிதித்துவத்தை பெறுவதற்காகத்தான் தன் வாழ்நாள் முழுவதும் போராடினார். அந்த மறுக்கப்பட்ட பிரதிநிதித்துவம், 1992 ஆம் ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட ஓர் அரசாங்கத்தின் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உறுதி செய்யப்பட்டது. அந்த அரசாங்கம்தான் புதிய உள்ளாட்சி அரசாங்கம். இந்த அரசாங்கம் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் பகுதி IX மற்றும் IXஅ வில் சேர்க்கப்பட்டு விட்டது. இதன் விளைவு என்பது மத்திய மாநில அரசுகள்போல் ஓர் அரசாங்கமாக உள்ளாட்சி உருவாக்கப்பட்டுவிட்டது.

இந்திய அரசாங்கத்தில் எந்த உயர் பதவியிலும் ஒரு தாழ்த்தப்பட்டவர் இருந்து செயல்பட்டு விடலாம். அது குடியரசுத் தலைவர் பதவியாக இருக்கலாம், ஆளுநர்

பதவியாக இருக்கலாம், மத்திய மாநில அமைச்சராக இருக்கலாம், சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினராக இருக்கலாம். எந்த இடத்திலும் அந்தப் பதவிகளின் செயல்பாடுகளுக்கு பெரும் தடைகள் வருவதில்லை. ஆனால், சமூகத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட மக்கள் அரசாங்கமான உள்ளாட்சியில் மிகப்பெரிய சவால்களைச் சந்தித்து வருகின்றனர் தாழ்த்தப்பட்ட இனத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கும் மக்கள் பிரதிநிதிகள். காரணம், இவர்கள்தான் அடித்தளத்தில் ஏற்றத்தாழ்வு மிக்க சமூகத்தில் செயல்பாட்டுக்களத்தில் தலைவர்களாக நின்று அதிகாரத்தை எடுத்து செயல்பட வேண்டியவர்கள். அம்பேத்கர் கிராமங்களைப் பற்றி கூறிய கருத்து இன்றும் எவ்வளவு துல்லியமானது என்பதை நிரூபிக்கும் வகையில்தான் களம் இருக்கிறது என்பதைத்தான் இன்றைய சூழல் காட்டுகின்றது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது என்பது பெரிய வாய்ப்பு. இந்த வாய்ப்பு என்பது அந்த சமூகத்திற்கு மிகப்பெரிய மாற்றங்களைச் செய்யவல்ல வாய்ப்பு. காரணம், இந்த உள்ளாட்சி அமைப்புக்களுக்கு கொடுக்கப்பட்ட முக்கியப்பணியே கடையேனுக்கும் கடைத்தேற்றம் செய்தல்தான். இதுவரை மத்திய மாநில அரசுகளின் திட்டங்களால் ஏற்றம் பெறாத விளிம்புநிலை மக்களின் வாழ்க்கைக்கான பொருளாதார மேம்பாடும், சமூக நீதியையும் கொண்டுவருவதற்கான, புதிய வாய்ப்பு. அந்தப் பணியும் கூட அந்த மக்களின் பங்கேற்போடு நடைபெற வேண்டும் என்பதை கட்டாயக் கடமையாக வகுக்கப்பட்டுள்ளது. இன்றுவரை கேரளத்தைத்தவிர வேறு எந்த மாநிலத்திலும் அது செயல்படுத்தப்படவில்லை. காரணம் கேரளத்தைத் தவிர மற்ற பெரிய மாநிலங்களிலுள்ள கிராமங்கள் என்பது ஆதிக்க சக்திகளின் பிடியில் இருக்கிறது என்பதால்தான். இன்றைய உள்ளாட்சிகள் எதற்காக அரசாங்கமாக உருவாக்கப்பட்டதோ அவைகள் நடைபெறவில்லை என்றால், அது அரசியல்சாசனத்தை மீறும் செயல்தானே. இதைப் பற்றி ஏன் யாரும் விவாதிக்க முன் வருவதில்லை. இது அரசமைப்புச் சாசனத்தைப் அவமதிப்பதாகும். அதைப் பற்றிய எந்தப் பார்வையும் நம் அரசியல் கட்சிகளுக்குக் கிடையாது. பட்டியலின மக்களுக்காகச் செயல்படும் கட்சிகளும் அமைப்புகளும்கூட இதற்கான விவாதத்தை முன்னெடுக்கவில்லை என்பதுதான் நாம் பார்க்கின்ற ஒரு சோக நிகழ்வு.

தமிழகத்தில் இன்று 3411 கிராமப் பஞ்சாயத்துக்களில் பட்டியலின மக்களின் பிரதிநிதிகள் தலைவர்களாக இருக்கின்றார்கள். அதேபோல் கிராமப் பஞ்சாயத்துக்களில் 27,751 வார்டு உறுப்பினர்களாகவும், ஒன்றியப் பஞ்சாயத்தில் 104 ஒன்றியக்குழுத் தலைவர்களாகவும், 1597 ஒன்றியக்குழு உறுப்பினர்களாகவும், 8 மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவர்களாகவும், 170 மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினர்களாகவும் பட்டியலினத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பிரதிநிதிகளாக அமைப்புக்களுக்கு ஆளுகை செய்ய வந்துவிட்டனர். இதைத்தான் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் பிரதிநிதித்துவம் எனக் கேட்டு மன்றாடினார். அது இன்று உள்ளாட்சியில் நடந்துள்ளது. இந்த எண்ணிக்கை என்பது சாதாரண எண்ணிக்கை அல்ல. மாற்றங்கள் செய்யவல்ல எண்ணிக்கை. இந்த எண்ணிக்கை மாற்றங்களைக் கொண்டுவரும். எப்பொழுதென்றால் அவர்களுக்குத் தரப்பட்டுள்ள அதிகாரங்கள் பற்றிய புரிதலும், அவைகளை கைக்கொள்ளத் தேவையான ஆற்றல்களும் வளர்க்கப்படுகிறதோ அப்பொழுதெல்லாம் நாம் சமூகத்தில் மாற்றங்களைக் காணமுடியும். ஆனால் இதற்கான புரிதல் நமக்கு வந்துவிட்டதா என்பதுதான் நம் கேள்வி. இந்த மாபெரும் வாய்ப்பு ஓசையில்லாமல் போராட்டம் இல்லாமல் நமக்குக் கிடைத்துள்ளது. இந்தப் புதிய வாய்ப்பைப் பயன்படுத்தும் ஆற்றலை நாம் வளர்த்துக் கொண்டு செயல்பட்டோமா என்பதுதான் நாம் நமக்குள்ளே கேட்கும் கேள்வி.

இந்த உள்ளாட்சி அமைப்பு அரசாங்கமாக உருவாகி 30 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் நம் உள்ளாட்சியை சாலை போட வந்தது, சாக்கடை போக்க வந்தது, கொசு மருந்து அடிக்க வந்தது, குடிதண்ணீர் கொடுக்க வந்தது, தெருவிளக்கு பராமரிக்க வந்தது, குப்பை கூட்ட வந்தது என்றுதான் மக்களிடம் கூறி வருகின்றோம். இந்த உள்ளாட்சி என்பது அடிப்படை மாற்றங்களைக் கொண்டுவர வந்தது என்பது யாரிடமும் நாம் எடுத்துக்கூறவில்லை. அது மட்டுமே அல்ல இந்த உள்ளாட்சி என்பது மக்களாட்சியை ஆழப்படுத்துவதற்கு வந்தது என்பதை நாம் யாரிடமும் தெரிவிக்கவில்லை. அப்படி மக்களாட்சியை ஆழப்படுத்துவது என்றால் என்ன? அதை எப்படிச் செய்வது என்பதைப் பற்றிய புரிதலை நாம் யாரிடமும் கூறவில்லை. இது ஒரு பங்கேற்பு மக்களாட்சி, மக்களை அதிகாரப்படுத்த வந்தது என்பதையும் நாம் யாரிடமும் தெரிவிக்கவில்லை. உள்ளாட்சியில் குடிமக்கள் பங்கேற்பதன் மூலம் ஒரு புது விவாத மக்களாட்சியை உருவாக்கலாம் என்பதையும் யாரிடமும் தெரிவிக்கவில்லை. இவ்வளவு சக்தி கொண்ட உள்ளாட்சியை சாதாரணமாக்கி அதிகாரிகள் கையில் கொடுத்துவிட்டு, அவர்கள் தரும் நிதிக்கு பணி செய்யும் முகவர்களாக உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஆகிவிட்டனர். இதில் உள்ள வாய்ப்புக்களை நாம் பயன்படுத்தத் தவறுகின்றோம் என்ற உண்மையே பலருக்குத் தெரியவில்லை.

இதனைத் தொடர்ந்து அடுத்த மிகப்பெரிய வாய்ப்பு மேம்பாட்டுக்கான உரிமைகள் சட்டத்தின் மூலம் மக்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அரசமைப்புச் சாசனம் உருவான காலத்தில் அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறையில் ஷரத்து 37லிருந்து 51 வரை கொடுக்கப்பட்டிருந்த பல மேம்பாட்டுக்கான பணிகளை இன்று உரிமைகளாக்கித் தந்துவிட்டது மத்திய அரசு. இந்த உரிமைகளை மத்திய அரசு சாதாரணமாகச் செய்து தரவில்லை. ஐ.நா.போன்ற உலகளாவிய நிறுவனங்களின் அழுத்தத்தினாலும், ஏழைகளுடன் உரிமைசார்ந்து பணி செய்யும் தொண்டு நிறுவனங்கள் கொடுத்த அழுத்தத்தினாலும் இந்த முன்னெடுப்புக்களை மத்திய அரசு செய்தது. அவைகள் அத்தனையும் பீரங்கி போன்ற ஆயுதங்கள். வன உரிமைச் சட்டம் 2006, தகவல் உரிமைச் சட்டம் 2005, ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டம் 2005, உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013, கல்வியுரிமைச் சட்டம் 2009, வீதிகளில் வணிகம் செய்வோர் வாழ்வாதார பாதுகாப்புச் சட்டம் 2014, மனிதக் கழிவுகளை கையாளும் முறை ஒழிப்பு மற்றும் தொழிலாளர் மறு சீரமைப்புச் சட்டம் 2013, ஆதிவாசி மக்களுக்காக பஞ்சாயத்து விரிவாக்கச் சட்டம் 1996 (PESA ACT) பட்டியலின மக்கள் பாதுகாப்புச் சட்டம் 1989, மானுட உரிமை பாதுகாப்புச் சட்டம் 1993, பாலின சமத்துவச் சட்டம் 2020, வீட்டுப் பணிசெய்வோர் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுச் சட்டம் 2010 என கட்டுக்கட்டாக சட்டங்களை உருவாக்கித் தந்துள்ளது அரசாங்கம். இதில் பல சட்டங்களுக்கு பெரும் நிதி ஒதுக்கீடு தந்து அதற்கான திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. உலகத்தில் வேறு எந்த நாட்டிலும் ஏழைகளுக்கான பாதுகாப்பை இவ்வளவு சட்டங்கள் மூலம் தந்தது கிடையாது. அது மட்டுமல்ல இவ்வளவு பெருநிதியில் வறுமை ஒழிப்புக்கு திட்டம் போட்டு செயல்பட்ட நாடும் இல்லை. இதுதான் பல ஆய்வு நிறுவனங்களை இந்தியாவின் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தது. இதில் ஆதிவாசி பஞ்சாயத்து விரிவாக்கச் சட்டம் 1996 மட்டும் செயல்படுத்தப்பட்டிருந்தால் ஒட்டுமொத்த ஆதிவாசி மக்கள் முழுச் சுதந்திரம் அடைந்திருப்பார்கள். அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்ததும் மத்திய அரசு, அதை நடைமுறைப்படுத்த வேண்டியதும் மத்திய அரசின் பிரதிநிதியான ஆளுனர்தான். இந்தச் சட்டத்தில் ஓர் அங்குலம்கூட நகரவில்லை என்பதுதான் நாம் பார்க்கும் மிகப்பெரும் சோகம்.

ஆனால், இவைகளை நடைமுறைப்படுத்த மாநில அரசுகள் எடுத்த நடவடிக்கைகள் என்ன? அதில் எதாவது அரசியல் விவாதம் நடத்தப்பட்டதா என்று வினவிப் பார்த்தால் நாம் அரசியல் அறியாமையின் உச்சத்தில் இருக்கின்றோம் என்பது நமக்குத் தெரிந்துவிடும். இந்தச் சட்டங்களும் திட்டங்களும் கொண்டுவரப்பட்ட பிறகு உலகெங்கும் மிகப்பெரிய எதிர்பார்ப்பு இந்தியாவின் மீது இருந்தது. அதாவது இந்தச் சட்டங்கள் மூலம், திட்டங்கள் மூலம் மிகப்பெரிய சமூக பொருளாதார மாற்றங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வரப்போகிறது என்ற எதிர்பார்ப்பு உருவானது. இந்தப் புதிய உள்ளாட்சி அரசாங்கமாக உருவாக்கப்பட்டு, அதில் மக்கள் தொகைக்கு ஏற்ப விகிதாச்சார அடிப்படையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுத்து அத்துடன் மேம்பாடு என்பதை உரிமையாக சட்டத்தின் மூலம் தந்து, கட்டுக்கட்டான உரிமைகளை மக்களுக்குத் தந்தது மத்திய அரசு. அந்த உரிமைகளையெல்லாம் தொகுத்து "ஒடுக்கப்பட்டோரின் ஆயுதம்" (வெப்பன்ஸ் ஆப் தி அப்ரஸ்டு) என்ற ஒரு கையேட்டை டெல்லியில் உள்ள ஒரு குடிமைச் சமூக அமைப்பு ஒரு கையேடாக வெளியிட்டு, விளிம்புநிலை மக்களை அதிகாரப்படுத்த உதவின. இந்தக் கையேடு தயாரித்ததன் நோக்கமே விளிம்புநிலை மக்களின் உரிமைகளை வென்றெடுக்க தயார் செய்வதற்குத்தான். அதற்கான பயிற்சிகளை விளிம்புநிலை மக்களுடன் பணி செய்யும் நிறுவனங்கள் அந்த மக்களுக்கு நடத்த வேண்டும் என்பதற்காகத்தான். இந்த மக்களிடம் இருக்கும் பயனாளிச் சிந்தனையைப் போக்கி, உரிமைகளை வென்றெடுக்கும் மனோபாவத்திற்கு மாற்ற இந்தப் பயிற்சிகள் உதவிடும் என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்டது இந்தக் கையேடு. அது மட்டுமல்ல, உரிமை சார்ந்து செயல்படும் நிறுவனங்களுக்கு அதற்கான நிதியினையும் நல்க நிதி நிறுவனங்கள் தயாராகிய நிலையில், அந்த நிறுவனங்களின் செயல்பாடுகளை தடுத்திட சந்தை அரசின் மூலம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதன் விளைவு உரிமை சார்ந்து செயல்படும் பெரும்பாலான நிறுவனங்களின் வெளிநாட்டு நிதிபெறும் உரிமம் ரத்து செய்யப்பட்டு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. அதன் விளைவு அந்தக் கையேடு புத்தகமாக மாறி அலமாரிகளை அலங்கரித்தது. கடைசியில் அந்தப் புத்தகம் நூலகங்களுக்குச் சென்றுவிட்டன. அந்தப் புத்தகத்தை களத்தில் பார்க்க முடியவில்லை. இருந்தபோதிலும் பல பன்னாட்டு நிதி நிறுவனங்கள் உரிமைகள் சார்ந்து செயல்படும் அமைப்புக்களுக்கும், மக்களாட்சி விரிவாக்கச் செயல்பாட்டிற்கும், அதிகாரப் பரவலாக்கத்திற்கும் செயல்படக்கூடிய நிறுவனங்களுக்கு நிதியளிப்புக்கு பெரிய அளவில் முன்னெடுப்புக்களைச் செய்தன. இந்தச் செயல்பாடுகளில் பெரிய அளவில் தாக்கம் உருவாகவில்லை. காரணம் அரசாங்கம் கொடுத்த நெருக்கடிகளுக்கு பல நிறுவனங்கள் ஆளான சூழலில் ஒருசில நிறுவனங்கள் மட்டுமே செயல்பட முடிந்தது, எனவே இந்தச் செயல்பாடுகளால் பெரும் தாக்கத்தை நம்மால் பார்க்க முடியவில்லை. தகவல் பெறும் உரிமை பற்றி மட்டும் ஒருசில நிறுவனங்கள் வெளிநாட்டு உதவியின்றி பயிற்சிகளை நடத்தி வருகின்றன. அரசியலும், ஆளுகையும் சந்தைக்குள் தோய்ந்து இருந்ததைக் கண்ட நிதி நிறுவனங்கள் இந்தியாவை விட்டே வெளியேறிவிட்டன.

காந்திகிராமப் பல்கலைக்கழகத்தில் நடந்த ஊரக உள்ளாட்சித் தலைவர்களுக்கான பயிற்சியில் மட்டுமே சமூக நீதிக்கான பஞ்சாயத்து செயல்பாடு பற்றி உள்ளாட்சித் தலைவர்களுக்கு பிரத்தியேகப் பயிற்சியளிக்கப்பட்டது. அதேபோல் அதற்கான பிரத்தியேகக் கையேடும் தயாரிக்கப்பட்டு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அது மட்டுமல்ல, பட்டியலின மக்களுக்கு எவ்வளவு திட்டங்களை அரசுத் துறைகள் வைத்திருக்கின்றன, அவைகளை எப்படிப் பெறுவது என்பதனை அவர்களுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டது. பட்டியலின மக்கள் பிரதிநிதிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அவர்களை ஒன்றிணைத்து ஒரு கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு செயல்பட வைக்கப்பட்டது. இவ்வளவு வாய்ப்புக்களும் இவர்களுக்குப் பயன்பட்டதா எனப் பார்க்க வேண்டும் என எண்ணி ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. மதுரையில் செயல்படும் ஆதாரம் (எவிடன்ஸ்) என்ற நிறுவனம் அந்த ஆய்வினை மேற்கொண்டது. அந்த ஆய்வு அறிக்கை விரிவாக்கப்பட்டு புத்தகமாக வெளியிடப்பட்டது. அந்த ஆய்வில் 33 வகையான புறக்கணிப்பு முறைகளை சமூகம் தலித்துக்களுக்கு எதிராகக் கடைப்பிடிக்கிறது என்பதை படம்பிடித்து காட்டப்பட்டுள்ளது. அதிலும் 13 முறைகளில் தீவிரமாக தலித்துக்களை மேல்தட்டு சாதிய வர்க்க மக்கள் புறக்கணித்துச் செயல்படுகின்றனர். தலித் இன மக்கள் பிரதிநிதிகளால் சமூக நீதி பற்றி எந்த முன்னெடுப்பையும் செய்ய இயலவில்லை பஞ்சாயத்துகளில் என்பதையும் பட்டியலிட்டுள்ளது. தலித் அல்லாத தலைவர்களாலும்கூட தலித் பிரச்சினைகள் முன்னெடுக்கப்படுவதில்லை, முன்னெடுக்க முடியவும் இல்லை. பெரும்பாலான கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு சமூக நீதி பற்றிய பார்வையற்று செயல்படுவதுதான் விந்தையாக உள்ளது. சமூக நீதிக்கு இயக்கம் கண்டு, அந்த இயக்கத்திலிருந்து உருவான கட்சிகள் அரை நூற்றாண்டு காலம் ஆட்சி செய்த பிறகு தமிழகத்தில் இந்தச் சூழல் என்றால் மற்ற இடங்கள் எப்படி இருக்கும் என்பதை நம்மால் யூகிக்கக்கூட முடியவில்லை.

அடுத்து ஜே.சி.குமரப்பாவின் தற்சார்பு கிராமங்களை உருவாக்குவதற்கு இன்று என்ன வாய்ப்பு உள்ளது என்று பார்த்தால், அனைத்து வாய்ப்புக்களும் நம் முன் நிற்கிறது. மத்திய மாநில அரசுகள் திட்டமிடுவதை நிறுத்திவிட்டன. ஆனால் கிராமத்திற்கு திட்டமிடுதலை ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்திற்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தையும் மக்கள் பங்கேற்போடு செய்திட வேண்டும் என பணிக்கப்பட்டுள்ளது. அந்த கிராமத் திட்டமிடுதலை எப்படிச் செய்ய வேண்டும் என்பதற்கு ஒரு வழிகாட்டிக் கையேட்டை மத்திய அரசு தயாரித்துத் தந்துவிட்டது. கிராம மக்கள் எப்படிப்பட்ட கிராமங்களை உருவாக்க வேண்டும் என்று எண்ணுகின்றார்களோ, அவர்களின் கனவுக்கு வடிவம் கொடுக்கத்தான் அந்த மக்கள் பங்கேற்புத் திட்டம். முதலில் அதற்கான விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த வேண்டும். இன்று அப்படிப்பட்ட கிராமங்களை உருவாக்குவது மிக எளிது. அதற்கு பணம் தேவை இல்லை, புரிதல்தான் தலைவருக்கும் மக்களுக்கும் தேவை. இதைப் பற்றிய விவாதம் எந்த இடத்திலும் இல்லை. ஒரு கிராமப் பஞ்சாயத்திற்கு தோராயமாக வருகின்ற ஐந்து கோடி ரூபாயில் அதற்குத் தேவையான மறுகட்டமைப்பை உருவாக்கி விடலாம் மிக எளிதில். அதற்கான புரிதல் நம் கிராமப் பஞ்சாயத்துக்களுடன் பணி செய்யும் தொண்டு நிறுவனங்களும் இல்லை, அரசுக்கும் இல்லை. அதற்காக அரசியலைக் கட்டமைக்க நம்மிடம் அரசியல் கட்சிகளும் இல்லை. அது மட்டுமல்ல, தரகர்களை, ஒப்பந்தக்காரர்களை தலைவர்களாக நம் அரசியல் கட்சிகள் எங்கும் உருவாக்கி மக்கள் பணத்தில் லாபம் பார்க்க கற்றுக் கொடுத்துவிட்டனர். பசுமைக் கிராமத்தை உருவாக்கவோ, தற்சார்புக் கிராமத்தை உருவாக்கவோ, தூய்மைக் கிராமத்தை உருவாக்கவோ, தீண்டாமை இல்லா சமதர்மக் கிராமத்தை உண்டாக்கவோ பார்வையற்றவர்களாக நம் பஞ்சாயத்துத் தலைவர்கள் இருக்கின்றார்கள். உயிரிக் கிராமங்களை உருவாக்குவதற்கு பசுமைக் கிராமங்களை உருவாக்குவதற்கு, சமதர்மக் கிராமங்களை உருவாக்குவதற்கு நிறைய கையேடுகள் இருக்கின்றன. அதைப் படிப்பதற்குக் கூட ஆட்கள் இல்லை. இவைகள் பற்றி ஜல்லிக்கட்டுப் போராட்டத்தில் நம் இளைஞர்கள் விவாதித்தார்கள். அதன் பிறகு செயல் என்ன? ஒருசில இளைஞர்கள் களத்தில் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தில் நான் பணியாற்றியபோது, மறைந்த காந்தியவாதி கே.எம்.நடராஜன் அவர்களின் முன்னெடுப்பில் காந்திய தொண்டு நிறுவனங்களை இணைத்து காந்தியக்கனவை கிராமப் பஞ்சாயத்துக்களில் நிறைவேற்ற முடியுமா என விவாதித்து ஒரு முன்னெடுப்பைச் செய்தோம். அதற்குத் தேவையான அத்தனை கையேடுகளையும் தயாரித்து அத்தனை நிறுவனங்களுக்கும் அளித்தோம். அந்த நிகழ்வினைக்கூட காந்திகிராம அறக்கட்டளை தான் செய்தது. காந்திகிராம அறக்கட்டளையைத் தவிர வேறு எந்த நிறுவனமும் அந்த முயற்சியைத் தொடரவில்லை என்பது அடுத்த சோகக் கதை. ஆனால் இன்றும் அதற்கான வாய்ப்புக்கள் இல்லாமலில்லை. நாம் முயலவில்லை. அதற்கு முதலில் களப்பணியாற்ற தயாராக வேண்டும். அந்தத் தயாரிப்பு என்பது முதலில் கருத்தியல் சார்ந்தது. அடுத்து உத்திகள் சார்ந்தது. பார்வையும்,

யுக்தியும், முனைப்பும் நமக்கிருந்தால் இனிமேல் விவாதம் தேவை இல்லை.

எங்கெல்லாம் நல்ல திறன்மிக்க தலைவர்கள் பஞ் சாயத்துக்களில் உருவாக்கப்பட்டனரோ அங்கெல்லாம் அந்தத் தலைவர்கள் அபார சாதனைகளை நிகழ்த்தியது மட்டுமல்ல, சமூக ஒற்றுமையையும் நிலைநாட்டியுள்ளனர். அந்தக் கிராமங்களில் பட்டியலின மக்கள்மேல் இருந்த புறக்கணிப்பு குறைய ஆரம்பித்துவிட்டது. அது மட்டுமல்ல, அரசாங்கத்தில் பட்டியல் இன மக்களுக்காக உருவாக்கப்பட்ட திட்டங்களை முறையாகச் செயல்படுத்தி பல அடிப்படையான வசதிகளை அவர்கள் வாழும் பகுதிகளில் உருவாக்கித் தந்துவிட்டனர். பொது வினியோகக் கடையை உருவாக்குவது, தெருவிளக்கு அவர்கள் வாழும் பகுதிக்குக் கொண்டு வருவது, சாலை அமைப்பது, பாலர் பள்ளி உருவாக்குவது, கழிப்பிடம் கட்டித் தருவது, வீடுகட்டித் தருவது, வாழ்வாதாரத்திற்கான வசதிகளை உருவாக்கிப் பாதுகாப்பது, தொழில்திறன் பயிற்சியளிப்பது போன்ற எண்ணற்ற பணிகளைச் செய்து தந்துள்ளனர். இவர்களைப் போன்று மற்றவர்களும் திறம்பட செயல்பட வேண்டுமென்றால் அவர்களுக்கு முறையான பயிற்சியினைத் தரவேண்டும். அந்தப் பயிற்சியை அரசு பயிற்சி நிறுவனங்களால் தர இயலாது. எனவே முறையான பயிற்சியை தலித் மேம்பாட்டுக்காகப் பணி செய்யும் தொண்டு நிறுவனங்கள் இந்தப் பணியினை செய்திட முடியும். அதேபோல் பல கிராமப் பஞ்சாயத்துக்கள் இயற்கை விவசாயத்தை ஊக்குவித்து பசுமைக் கிராமங்களையும், சூழலியல் கிராமங்களையும் உருவாக்கி வருகின்றனர். இந்த சாதனையாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. கிராமத்திற்குத் தேவையான காய்கறிகளை கிராமத்திலேயே பயிர் செய்து அனைவருக்கும் இலவசமாகக் கொடுத்துவிடலாம், அதற்குத் தேவை ஒரு புரிதல் மட்டுமே எனக்கூறி ஒருவர் அந்தத் திட்டத்தை புத்தகமாகவே எழுதி பதிப்பித்து விட்டார். மேற்கூறிய கருத்துக்கள் அனைத்தும் பொதுத்தளத்திற்கு விவாதப் பொருளாக மாறிவர வேண்டும். இதை யார் செய்வது என்பதுதான் கேள்வி. இதில் நம் ஊடகங்களுக்கு கல்வி நிலையங்களுக்கு அரசியல் கட்சிகளுக்கு மிகப் பெரிய பொறுப்பு இருக்கிறது. இதற்கான ஒரு விவாதத்தை நாம் முன்னெடுக்க வேண்டும். அதுதான் இன்றைய தேவை.

●

கட்டுரையாளர், காந்திகிராமிய பல்கலைக்கழக ராஜீவ் காந்தி பஞ்சாயத்துராஜ் ஆராய்ச்சி இருக்கைத் தலைவர் (ஓய்வு)

## உங்கள் நூலகம் வாழ்த்துகிறது




தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை வழங்கும் 2021-ஆம் ஆண்டிற்கான சிறந்த மொழி பெயர்ப்பாளருக்கான விருது, குழந்தை எழுத்தாளர் சுகுமாரனுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்விருதினை 21.12.2022ஆம் தேதியில் தலைமைச்செயலகத்தில் நடைப்பெற்ற நிகழ்ச்சியில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். சுகுமாரனின் சிறார் இலக்கிய மொழிபெயர்ப்பு நூல்களை என்.சி.பி.எச்-ன், நெஸ்லிங் நிறுவனம் வெளியிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



கட்டுரை

# செயிர்தீர் செம்மொழி

முனைவர் இரா. வெங்கடேசன்

**இந்தியச் சூழலில் செம்மொழி**

*2004*, அக்டோபர் *12*ஆம் நாள் நடுவண் அரசு, தமிழின் 'செம்மொழி'த் தகுதி குறித்த அறிவிப்பை வெளியிட்ட பின்னர் இந்தியச் சூழலில் 'செம்மொழி' *(Classical)* குறித்த உரையாடல்கள் கவனம்பெறத் தொடங்கியுள்ளன. தமிழ் ஆய்வுத் தளத்திலும் செம்மொழிச் சொல்லாடல் காத்திரமாக நிகழ்த்தப்படுகின்றது.

பல நூற்றாண்டுகள் கடந்த தொன்மை, தனித்து இயங்கும் ஆற்றல், மிக நீண்ட இலக்கிய - இலக்கண வளமை போன்றன ஒரு மொழிக்குரிய செம்மொழித் தகுதிப்பாடுகளாக வரையறுக்கப்பட்டுள்ளன. உலக மொழிகளுள் இந்தத் தகுதிப்பாட்டைச் சில மொழிகளே கொண்டுள்ளன. கிரேக்கம், இலத்தின், அரபு, சீனம், ஹீப்ரு, பாரசீகம், தமிழ், சமஸ்கிருதம் முதலான மொழிகள் இந்தத் தகுதிகளைப் பெற்றுச் செம்மொழிகளாக விளங்குகின்றன. கன்னடம், தெலுங்கு, மலையாளம், ஒடியா ஆகிய மொழிகளையும் செம்மொழிகளாக நமது நடுவண் அரசு அறிவித்துள்ளது. உலகச் செம்மொழிகள் வரிசையில் இந்தியத் துணைக் கண்ட மொழிகளின் எண்ணிக்கை மிகுதியாக இருப்பது மிகவும் கவனத்துக்குரிய ஒன்றாகும்.

நடுவண் அரசு, தமிழுக்கான செம்மொழித் தகுதிக்குரிய அரசாணையை வெளியிட்டபோது (12.10.2004) இந்திய மொழியியல் அறிஞர்களின் பரிந்துரையின்படி செவ்வியல் மொழியென அறிவிக்கப்படுவதற்கு, ஒரு மொழியைக் கருத்தில் கொள்வதற்கு வேண்டிய கீழ்வரும் வரையறைகளை வகுத்திருந்தது.

‘ஆயிரம் ஆண்டுக்கும் மேலான மிகப் பழமையுடைய நூல்கள்/பதிவு பெற்ற வரலாறு, மொழியைப் பயன்படுத்தும் பல தலைமுறையினர் அரிய பண்பாட்டுப் பாரம்பரியம் உள்ளதாகக் கருதும் இலக்கியம்/நூல்கள், அம்மொழிக்கே உரியதாகவும் மற்ற மொழிக் குடும்பத்தினரிடமிருந்து கடன் பெறாததுமான இலக்கியப் பாரம்பரியம், செவ்வியல் மொழி என்பதும் அதன் இலக்கியமும் அம்மொழியின் நவீன இலக்கியத்திலிருந்து வேறுபட்டிருக்குமாதலால், ஒரு செவ்வியல் மொழிக்கும் அதன் நவீன வடிவத்திற்கும் அல்லது அதிலிருந்து பிறந்த மொழிகட்கும் இடையே ஒரு தொடர்பின்மை இருக்கக்கூடும்.’

“தமிழ்மொழி மேற்கண்ட தகுதிகளை நிறைவேற்றுவதால் தமிழ் இனிமேல் செவ்வியல் மொழி என வழங்கப்படும்” என்று நடுவண் அரசு செம்மொழி அரசாணையில் குறிப்பிட்டிருந்தது. நான்காவதாக உள்ள வரையறை ‘திருத்தம்’ என்ற அறிவிப்பின் மூலமாகச் செம்மொழித் தகுதியாகப் பிறகு சேர்த்துக்கொள்ளப்பட்டது.

**செம்மொழித் தமிழுக்குத் தனியொரு நிறுவனம்**

தமிழ்ச் செம்மொழி அறிவிப்பிற்குப் பின்னர் 2005ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தமிழ்மொழி மேம்பாட்டுக்கான மையத் திட்டம் (Central Plan Scheme for Classical Tamil) நடுவண் அரசால் அமைக்கப்பெற்றது. மைசூரில் உள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்திடம் (CIIL) அத்திட்டம் ஒப்படைக்கப்பட்டு, 2006ஆம் ஆண்டு செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் (Centre of Excellence for Classical Tamil) ஏற்படுத்தப்பட்டது. இந்தியச் சூழலில் முதன்முதலாகச் செம்மொழிக்கென்று தனியொரு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது தமிழ் மொழிக்கே ஆகும்.

தமிழ்மொழி செம்மொழியாக அறிவிக்கப்பட்ட பின்னர் மைசூரிலுள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தில் அமைக்கப்பெற்ற செம்மொழி நிறுவனம் 2006 மார்ச்சு முதல் 2008 மே 18 வரை செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் என்னும் பெயரில் செயல்பட்டது.

திட்டத்தின் பணிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்துச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் ஒன்றினைச் சென்னையில் நிறுவுவதென 2007 ஆகஸ்டு 13 அன்று, புது தில்லியில் நடைபெற்ற நிதிக்குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டு, வேண்டிய நிதியும் செம்மொழித் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. இக்கூட்ட முடிவால் செம்மொழித் தமிழுக்குத் தன்னாட்சி நிலையுடன்கூடிய ஒரு நிறுவனம் ஏற்படுவதற்கு வாய்ப்பேற்பட்டது.

இதன் பின்னர், 2007 ஆகஸ்டு 18 அன்று அப்போதைய தமிழ்நாடு முதல்வராக விளங்கிய கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் தலைமையில் மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையின் அப்போதைய அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் அவர்கள் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தைச் சென்னையில் தொடங்கி வைத்தார்.

2007, நவம்பர் 5ஆம் நாள் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்குச் சென்னை, சோழிங்கநல்லூர் வட்டம், பெரும்பாக்கம் பஞ்சாயத்திற்கு உட்பட்ட இடத்தில் 16.586 ஏக்கர் நிலம் தமிழ்நாடு அரசால் ஒதுக்கிடு செய்யப்பட்டது.

2008, மே, 19ஆம் நாள் மைசூரிலுள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் ஓர் அங்கமாக செயல்பட்டு வந்த செம்மொழி நிறுவனம், சென்னைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுச் “செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்” என்ற பெயரில் அமைந்தது. 2008, சூன், 30அன்று சென்னையில், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் அலுவலகத்தை அன்றைய தமிழ்நாட்டு முதல்வராக விளங்கிய கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் திறந்துவைத்தார்.

2009, ஜனவரி 21 அன்று தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம் (1975) 27 பிரிவு 10இன் கீழ் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் பதிவு செய்யப்பட்டது.



தமிழ்நாடு அரசு வழங்கிய இடத்தில் மத்திய அரசின் ரூ. 24,65,47,000/- நிதி ஒதுக்கீட்டில் நான்கு அடுக்குகள் கொண்ட கட்டடப்பணி 2017, மார்ச்சு மாதம் முதல் நடைபெற்று வந்தது. தற்போது பணிகள் அனைத்தும் நிறைவடைந்து திறப்பு விழாவினை எதிர்நோக்கி உள்ளது.

**வரலாற்று நிலையில் செம்மொழி**

மொழியியல் அறிஞர்கள், உலக வழக்கிலிருக்கும் மொழிகளின் சிறப்புகள், தனித்தன்மைகள், அதன் தொன்மைகள் குறித்துப் பன்னோக்கு ஆய்வு முடிவுகளின் வழியாக அறிந்து, அறுதியிட்டு வைத்துள்ளனர். உலக மொழியியல் அறிஞர்கள், தமிழ் மொழியின் சிறப்புகளைப் பல நிலையில், பல காலம் ஆராய்ந்து தெளிந்திருக்கிறார்கள். இதனால், தமிழைச் செம்மொழியாக நடுவண் அரசு அறிவிப்பதற்குரிய பங்களிப்பில் உலகளாவிய மொழியியல் அறிஞர்களின் பங்களிப்பு குறிப்பிடத் தக்கதாய் இருந்தது.

இந்தியச் சூழலில் செம்மொழி என்பதற்குரிய வரையறைகள் குறித்து விவாதம் இன்னும் நீண்டுகொண்டேதான் இருக்கிறது. இதற்கு விதிவிலக்காகத் தமிழ்நாடு இருந்திருப்பதாக வரலாற்று நிகழ்வுகளின் வழியாகத் தெரிந்துகொள்ள முடிகிறது. தமிழ்ச் சூழலில் நெடுங்காலத்திற்கு முன்னரே செம்மொழி குறித்த மிகத் தெளிவான பார்வையொன்று ஏற்பட்டுவிட்டதாகத் தோன்றுகிறது. இந்தத் தெளிவிற்கு அடிப்படையாக விளங்கியது, தமிழின் தொன்மையும், அந்தத் தொன்மைக்கு எதிராக வந்த சோதனைகளும் அடிப்படையாக இருந்தன. சோதனை என்பது பிறமொழிகளின் தாக்கம், குறிப்பாக வடமொழித் தாக்கம் என்பதாக இருந்தது.

1903இல் பரிதிமாற் கலைஞர் 'தமிழ்மொழியின் வரலாறு' என்ற நூலில் 'செம்மொழி' என்பதற்குரிய வாதத்தை முன்வைத்துத் "தென்னாட்டின்கட் சிறந்தொளிராநின்ற அமிழ்தினுமினிய தமிழ்மொழி எவ்வாற்றானாராய்ந்த வழியும், உயர்தனிச் செம்மொழியேயாம் என்பது நிச்சயம். இவ்வளவுயர்வுஞ் சிறப்பும் வாய்ந்த அருமைத் தமிழ்மொழியை உண்ணாட்டுப் புன்மொழிகளோடொருங் கெண்ணுதல் தவிர்த்து, வடநாட்டுயர்தனிச் செம்மொழி சமஸ்கிருதமெனக் கொண்டாற் போலத் தென்னாட்டுயர் தனிச் செம்மொழி தமிழெனக் கொண்டு புகுதலே ஏற்புடைத்தாம்" என்று பேசியதையும் தமிழ் மொழிக்கு வந்த சோதனைக்கு எதிராக வந்த குரலாகவே புரிந்துகொள்ள முடிகிறது.

வடமொழிக்கு இணையாக, அல்லது அதனினும் மேலாகத் தமிழ் மொழியைக் கொண்டு நிலைநிறுத்தும் முயற்சியாகத் தமிழ்ச் 'செம்மொழி' என்ற வாதத்தை பரிதிமாற் கலைஞர் முன்வைத்தார். வேறு பல அறிஞர்களும் அப்போது இதே கருத்தை முன்வைத்து எழுதினார்கள்; பல தமிழ் அமைப்புகளும் எழுதின. பத்தொன்பதாம் நூற்றாண்டுக் கல்விப் புலச் சூழலில் நிலவிய மொழிப்பாடச் சூழல் செம்மொழிச் சொல்லாடலை நிகழ்த்துவதற்கான கூடுதல் வாய்ப்பை வழங்கின.

காலனிய அரசு தமிழை ஒரு வட்டார மொழியாகக் (Vernacular Language) கருதிக் கல்விப் புலச் சூழலில் அதற்கான இடத்தை வகுத்திருந்தது. அந்த வகுப்புமுறையால் தமிழ் ஆசிரியர்களுக்கு, வடமொழி உள்ளிட்ட ஏனைய மொழி ஆசிரியர்களுக்கு இணையான ஊதியம் வழங்காத நிலையும் இருந்தது. ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் பெரும் ஏற்றத்தாழ்வுகள் இருந்தன. உயர்கல்விப் புலச் சூழலில் தமிழ் மொழிப் புறக்கணிப்பும், ஆசிரியர்களுக்கிடையே நிலவிய ஊதிய ஏற்றத் தாழ்வும் தமிழ் ஆசிரியர்களை வெகுவாகப் பாதித்தது. இதனால் தமிழ் மொழி வடமொழியோடு ஒப்புவைத்து அல்லது மேம்பட வைத்து மதிக்கத்தக்க மொழி என்ற முழக்கம் தமிழாசிரியர்களாலும், தமிழறிஞர்களாலும் முன்வைக்கப்பட்டன.

உயர்கல்வி அளவில் கருவி மொழியாகத் தமிழ் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில், ஏனைய கீழைத்தேய மொழிகளான சமஸ்கிருதம், அரேபியம், பாரசீகம் போன்ற மொழிகள் பல்கலைக்கழகத்தில் கருவிமொழிகளாக இருந்தன. காலனிய அரசின் திட்டமிட்ட புறக்கணிப்பால் பல தமிழ் அறிஞர்கள் பிறமொழிகளோடு தமிழை ஒப்புநோக்கி ஆராய்ந்து அதன் சிறப்புகளை வெளிப்படுத்தத் தொடங்கினர். பரிதிமாற் கலைஞர் எழுதிய 'தமிழ் மொழியின் வரலாறு' எனும் நூல் இந்தப் பின்புலத்தில்தான் எழுதப்பட்டது. இந்த நூலில் தமிழ்ச் 'செம்மொழி' என்ற வாதத்தை அவர் மிக விரிவாக முன்வைத்ததற்கும் அதுவே காரணமாக இருந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புலமைத் தளத்தில் செயல்பட்ட பல தமிழ் அறிஞர்கள் செம்மொழி என்ற கருத்தை வலியுறுத்தி அவரவர்களுக்குக் கிடைத்த வாய்ப்புகளின் வழியே வெளிப்படுத்தினர். பல்வேறு தமிழ் அமைப்புகளும், தமிழ்க் கல்வி நிறுவனங்களும் மாநாடுகள் நடத்தித் தீர்மானங்கள் வழியே காலனிய அரசின் கல்விப்புல நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தன.

6, 7, 5. 1918இல் நடைபெற்ற 'மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபை' கூட்டத்தில் சமஸ்கிருதம் மொழிப் பாடத்தைப் போன்று பல்கலைக்கழகப்

பாடத் திட்டத்தில் தமிழ் மொழிப் பாடமும் இடம்பெற வேண்டும் என வலியுறுத்தி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 24, 25. 5. 1919இல் 'கரந்தைத் தமிழ்ச் சங்கமும்' இவ்வாறு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

அந்தத் தீர்மானம் 'தமிழ்மொழியானது தொன்மையும், சீர்மையும், செம்மையும் வாய்ந்து விளங்குகின்ற ஓர் உயர்தனிச் செம்மொழியென உறுதிபடப் பலதிறத்தாராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதால், சென்னைப் பல்கலைக்கழகத்தார் தாம் இதுகாறும் கொண்டிருந்த கொள்கையை மாற்றித் தமிழ்மொழி, ஓர் உயர்தனிச் செம்மொழியே என்பதை ஒப்புக்கொண்டு, இத்தென்னாட்டுப் பல்கலைக்கழகத்தில் அதற்கு முறைப்படி முதலிடமும், உரிமைகளும் கொடுக்க வேண்டும்' என வலியுறுத்தியது.

பல்வேறு அறிஞர்களின், அமைப்புகளின் கோரிக்கைகளைக் காலனிய அரசு தொடர்ந்து கண்டுகொள்ளாமல் இருந்தது. இந்தப் போக்கைக் கண்டித்து 21.08.1920இல் நடைபெற்ற கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஒன்பதாம் ஆண்டு விழாவில் "எவ்வளனும் இனிது வாய்ந்துள்ள தமிழ்மொழியை உயர்தனிச் செம்மொழி வரிசையில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று பலமுறையும், சென்னைப் பல்கலைக்கழகத்தாரை வற்புறுத்தியும், அவர்கள் இன்னும் அவ்வாறு செய்யாமலும், கட்டாயப் பாடமாக ஏற்படுத்தாமலும் இருப்பது பிழையென்று அறிவிப்பதோடு, இனியாவது அவர்கள் தமிழை உயர்தனிச் செம்மொழியாகக் கொள்வதுடன், கட்டாய முறையாகவும், கூடியவரை கல்லூரிகளில் கலை பயில் கருவிமொழியாகவும் கொண்டு, தங்கள் முதல் கடமையைச் செலுத்தும்படி அவர்களை இப்பெருங்கூட்டத்தார் கேட்டுக்கொள்கிறார்கள்" என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

1922இல் நடைபெற்ற பதினோராவது ஆண்டுவிழா, 1923இல் நடைபெற்ற பன்னிரண்டாவது ஆண்டுவிழா, 1938இல் நடைபெற்ற வெள்ளி விழா எனத் தொடர்ந்து தமிழ்ச் செம்மொழி குறித்த தீர்மானத்தைக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் நிறைவேற்றிக் காலனிய அரசுக்கு அனுப்பி வந்திருக்கிறது. இந்த வரலாற்று நிகழ்வுகளின் தொடர்ச்சியாகவே தமிழிற்கான 'செம்மொழி'த் தகுதி குறித்த சமகால குரல்களை நாம் உள்வாங்கிக்கொள்ள முடிகிறது.

**பண்டைத் தமிழகத்தில் செம்மொழிச் சொல்லாடல்**

தற்காலத்துச் செம்மொழி நிறுவன வளர்ச்சிக்கும், இடைக்காலத்துச் செம்மொழி கோரிக்கைகள் குறித்த நிகழ்வுகளுக்கும் பலநூறு ஆண்டுகளுக்கும் மூத்த முற்காலத் தமிழகத்தில் செம்மொழி என்ற சொல்லாடல் நிகழ்த்தப்பட்டிருக்கிறது என்பது பெரும் சிறப்புக்குரிய ஒன்றாகும். சங்கப் புலவர் ஒருவர் தாம் இயற்றிய பாட்டொன்றில் 'செம்மொழி' என்ற சொல்லைப் புலமைத்துவத்துடன் கையாண்டிருக்கிறார்.

மாமூலனார் எனும் சங்கப் புலவர் தலைவனின் பிரிவுத் துன்பத்தை ஆற்ற இயலாத பெண்ணொருத்திப் பெரிதும் துன்புற்றுத் தோழியிடம் வருந்திக் கூறுவதாகப் பாடிய பாட்டு அகநானூற்றில் அமையப்பெற்றுள்ளது (349). அப் பாடலின் இடையில் நன்னன் என்ற மன்னரின் சிறப்பு கூறவந்த இடத்தில்,

> **அரம்போழ் அவ்வளை செறிந்த முன்கை**
> **வரைந்துதாம் பிணித்த தொல்கவின் தொலைய**
> **எவனாய்ந் தனர்கொல் தோழி ஞெமன்ன்**
> **தெரிகோல் அன்ன செயிர்தீர் செம்மொழி**
> **உலைந்த ஒக்கல் பாடுநர் செலினே**
> **உரன்மலி உள்ளமொடு முனைபாழ் ஆக**
> **அருங்குறும் பெறிந்த பெருங்கல வெறுக்கை**
> **சூழாது சுரக்கும் நன்னன்**.................

என்றோர் குறிப்பைப் புலவர் சுட்டுகின்றார்.

'பொருளின் அளவை அறியும் கருவியாகிய துலாக்கோலை ஒத்த குற்றமற்ற செம்மொழியினை - மெய்ம்மொழியினை உடையவன் நன்னன்' என்று இதற்கு உரைப்பொருள் கொள்ளப்பட்டுள்ளது. இதன்வழிச் 'செம்மொழி' என்றால் 'மெய்ம்மொழி' என்பது சங்கப் புலவரின் கூற்றென்பதை அறியமுடிகிறது. 'செம்மொழி மாதவர்' (20:32) என்று சிலப்பதிகாரத்தில் வருவதும் இங்கே எண்ணுதற்குரியது.

தமிழ்மொழி செம்மொழி என்பதற்கு அதன் பழமையும், தொன்மையும் முதன்மைச் சான்றுகளாக விளங்குவதைப் போன்று 'செம்மொழி' என்ற சொல்லும் பழமையுடையதாக, தொன்மையுடையதாக இருப்பது தனிச் சிறப்புக்குரிய ஒன்றாகும்.

வரலாற்றுக் காலத்திற்கும் மூத்த தமிழினத்திற்குமுரிய மொழியின் செவ்வியல் தகுதி என்பது தமிழ் மொழியின் தொன்மையோடும், தமிழர்களின் பெருமையோடும் மட்டும் நிற்பதன்று, அது இந்தியப் பண்பாட்டில், இந்திய மொழி வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள பெரும் சிறப்புக்குரிய வரலாற்றுத் தகுதியாகவும் கருதத்தக்கது.

●

கட்டுரையாளர், இளநிலை ஆராய்ச்சி அலுவலர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

📝 நூல் அறிமுகம்

# பேரரசி: நாவலைப் போல வரலாறு!

எம். பாண்டியராஜன்

வரலாறு நெடுகிலும் ஒவ்வொரு நாட்டிலும் எண்ணற்ற ராணிகள். எத்தனையோ ராணிகளைப் பற்றிப் படித்திருந்தாலும் கேள்விப்பட்டிருந்தாலும் உலகம் முழுவதுமே ராணி என்றதுமே நினைவுக்கு வருவது இரண்டு பெயர்கள்தான், பிரிட்டிஷ் அரசிகள்: ஒருவர் எப்போதோ மறைந்த விக்டோரியா மகாராணி. இன்னொருவர் நம்முடைய காலத்திலும் வாழ்ந்து அண்மையில் மறைந்த எலிசபெத் ராணி.

ராணி மகாராணியாக வாழ்ந்து மறைந்த இணையற்ற பெண்மணியான எலிசபெத்தின் கதைதான் இந்தப் பேரரசி.

வரலாறுகள் இருக்கின்றன, நாவல்கள் இருக்கின்றன, வரலாற்று நாவல்களும் இருக்கின்றன. ஆனால், இந்த நூலிலோ ஒரு வரலாறே நாவலாக உருப்பெற்றுள்ளது. பிரிட்டிஷ் ராணி இரண்டாம் எலிசபெத் மறைந்த சில மாதங்களிலேயே அவருடைய முழுமையான வரலாற்றை விறுவிறுப்பாகத் தந்திருக்கிறார் நூலாசிரியரான மோகன ரூபன்.

நூறாண்டுகளுக்குச் சில ஆண்டுகள் மட்டுமே குறைவான வாழ்க்கையை வாழ்ந்து, மறைந்தவர் ராணி எலிசபெத். ராணி எலிசபெத்தின் வாழ்க்கை வரலாறு என்பது தனியொரு பெண்மணியின் வரலாறு மட்டுமல்ல, நூறாண்டுகால பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் வரலாறு, நூறாண்டு கால பிரிட்டன் வரலாறு மட்டுமல்ல, நூறாண்டுகால உலக வரலாறும்கூட.




பேரரசி - மோகன ரூபன்,
பக்கம் - 456, விலை - ரூ. 500,
அபிநயா பிரசுரம்(கண்மணி கிரியேட்டிவ்வேவ்ஸ்)
5, முத்துக்கிருஷ்ணன் தெரு,
பாண்டி பஜார், தியாகராய நகர்,
சென்னை - 600 017, செல்: 97910 71218

குட்டி இளவரசி எலிசபெத் பிறப்பிலிருந்து தொடங்குகிறது இந்த நூல். சிறு பெண்ணாக இருந்தபோது கார்கி நாயொன்றைப் பரிசளிக்கிறார் தந்தை ஆல்பர்ட். தன் வாழ்நாள் முழுவதும் இதே வகை நாய்களை பிரியமாக வளர்த்துவருகிறார் ராணி.

அரியணை வாரிசாக எலிசபெத் எவ்வாறு மாறுகிறார் என்பதைப் பற்றிய கதையே சுவாரசியமாகச் செல்கிறது. இந்தக் கதைக்குள்தான் காதலுக்காக முடிதுறந்த மன்னன் (எட்டாம் எட்வர்ட்) கதையும் வருகிறது. இளவரசி எலிசபெத்தின் காதலும்கூட சுவாரசியமானதுதான். பிலிப் கோமகனுடன் அவர் காதலை வளர்ப்பதும் கரம் பிடிப்பதில் காட்டும் உறுதியும்கூட அவரைப் பற்றிய சித்திரத்தை வலுப்படுத்துகிறது.

இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் பிரிட்டிஷ் அரச குடும்பத்தினரின் செயல்பாடுகள் யாவும் மெச்சத்தக்கதாக இருக்கின்றன என்றால், இளவரசியின் செயல்பாடுகளோ எதிர்காலத்தில் அவர் எத்தகைய பேரரசியாகத் திகழவிருக்கிறார் என்பதை முன்னறிவிக்கின்றன.

இந்தப் போர்க் காலத்தில் பிரிட்டிஷ் அரச குடும்பத்தில் துணிந்து படைப் பிரிவில் இணைந்து பணியாற்றிய முதல் பெண் இவர்தான். ஆம்புலன்ஸ் ஓட்டுநராக, மெக்கானிக்காக இந்தக் காலத்தில் அவர் பெற்ற பயிற்சி காரணமாக, எதிர்காலத்தில் அவருடைய டிரைவிங்கைப் பார்த்து அயல்நாட்டுத் தலைவர்களே அசந்துபோகிறார்கள்.

மிகவும் இளைய வயதிலேயே அரசியாக அவர் பொறுப்பேற்க நேர்ந்ததும், பொறுப்பேற்ற சூழல் அவரை எவ்வாறு வளர்த்தெடுத்தது என்பதும் அவரைச் சுற்றி நடைபெற்ற அத்தனை நிகழ்வுகளும் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வரலாற்றில் கிடைக்கிற ஒவ்வொரு வாய்ப்பிலும் ராணி எலிசபெத்தின் ஆளுமை மட்டுமல்ல, அபரிமிதமான அவருடைய நகைச்சுவை உணர்வும்கூட வெளிப்படுகிறது.

வீட்டுக்கு வீடு வாசல்படிபோல, சூரியனே மறையாத சாம்ராஜ்யமாக இருந்த அரசியின் அரண்மனையிலும் எத்தனையோ. குடும்பத்துக்குள் அத்தனை காதல்கள், விருப்பங்கள், வெறுப்புகள். அவற்றைச் சுற்றி நடைபெறும் மோதல்கள். எல்லாவற்றையும் மிகச் சிறப்பாகவும் பொறுமையாகவும் கையாள்கிறார் ராணி எலிசபெத்.

மறைந்த இளவரசி டயானா விஷயத்தில் இன்னமும் பலருக்கு ராணி எலிசபெத் மீது கோபம் இருந்தாலும், மருமகள் டயானா விஷயத்தில் மாமியாராகவும் அரசியாகவும் அவர் எந்த அளவுக்குப் பெருந்தன்மையுடனும் நிதானமாகவும் நடந்துகொண்டிருக்கிறார் என்பதை நூலில் மிகச் சிறப்பாக விவரித்துள்ளார் ஆசிரியர். டயானாவின் தரப்பு நியாயங்களும் நூலில் பேசப்படுகின்றன.

டயானா மரணத்தின்போது, எத்தகைய சூழ்நிலையில் ஊடகங்கள் தங்களைக் காத்துக் கொள்வதற்காக ராணியின் மீதும் அரச குடும்பத்தின் மீதும் மக்கள் கோபத்தைத் திருப்பிவிட்டன என்பதைப் பற்றித் தெளிவாகப் பதிவு செய்துள்ளார் மோகன ரூபன்.

எத்தகைய பெருந்திரளாக இருந்தாலும் எத்தகைய சூழலாக இருந்தாலும் தான் தனித்துத் தெரிய வேண்டும் என்பது போன்ற ராணியின் தனிச் சிறப்பு மிக்க குணங்கள், ஆடை, அணிகலன் பழக்கவழக்கங்கள், ஒவ்வொரு பிரதமருடனும், அவரைவிட மூத்தவரில் இருந்து இளம்வயதினர் வரை, அவருடைய உறவு, வின்ஸ்டன் சர்ச்சிலுடனான நல்லிணக்கம், ராணியாகவே இருந்தாலும் ஏழை எளிய மக்களுடன் அவர் கொண்டிருந்த நல்லுறவு என ஒவ்வொன்றும் மேமேலும் விரித்தெழுதக் கூடிய அளவிலான தனித்தனிக் கதைகள்.

நூல் என்னவோ ராணி எலிசபெத் பற்றியதுதான் என்றாலும் அவரைச் சுற்றியிருந்த அனைத்து உறவுகள் பற்றியுமான விஷயங்களும் நூலில் இடம் பெறுகின்றன. மருமகளாகத் தன் மாமியாரிடம் அவர் நடந்துகொண்ட விதம் வியப்பூட்டுகிறது. நூலில் சின்னச் சின்ன விஷயங்கள்கூட மிகச் சிறப்பாக, எடுத்துக்காட்டாக, எலிசபெத்தின் திருமண ஏற்பாடுகள், முடிசூட்டு விழா விவரிக்கப்படுகின்றன.

பதவியேற்புக்கு முன்னரும் பின்னரும் உலகம் முழுக்கச் சுற்றி வருகிறார் ராணி எலிசபெத். ஒவ்வொரு பயணத்தின்போது அந்தந்த நாட்டை, அரசியலைப் பற்றிய தகவல்களுடன் அந்தந்த நாட்டுத் தலைவர்களுடன் அவருக்கிருந்த உறவும் அணுகுமுறையும்கூட சிறப்பாக விவரிக்கப்படுகிறது.

ராணி எலிசபெத்தின் முழுமையான வரலாற்றை நல்ல தமிழில் விறுவிறுப்பாகத் தந்திருக்கும் மோகன ரூபன், ஏற்கெனவே பிணந்தின்னிக் கழுகு, திமிங்கில வேட்டை (மோபிடிக்) போன்ற நூல்களை எழுதியவர்.

எலிசபெத் மகாராணியின் எதிர்பாராத மறைவைத் தொடர்ந்து, மிகக் குறுகிய கால இடைவெளியில், அவரின் வரலாற்றை ஒரு பெரு நூலாகக் கொண்டுவந்துள்ளனர். சற்றே சறுக்கினாலும் சலிப்பூட்டிவிடக் கூடிய வரலாற்று விஷயத்தைத் தமிழுக்குச் சிறப்புச் சேர்க்கும் விதமாக ஒரு நாவலைப் போல விறுவிறுப்பாகத் தந்திருக்கிறார்கள்.

சென்னைப் புத்தகக் காட்சியின் வரவுகளில் குறிப்பிடும்படியான ஒரு நூல் பேரரசி.

●

கட்டுரையாளர், எழுத்தாளர்

நூல் அறிமுகம்



# வாசிப்பின் மூலம் இந்தளூரில் ஒரு ஜென்மம் வாழ்ந்து பாருங்கள்...

கே.பாலச்சந்திரன்

தஞ்சை மாவட்டம் இடையிருப்பு கிராமத்தில் வசிக்கும் நாவலாசிரியர் திரு.சி.எம்.முத்து அவர்கள் பத்து நாவல்களும், 300 சிறுகதைகளும் எழுதி தமிழ் இலக்கியத்திற்குச் சிறப்பான பங்களிப்பு செய்துள்ளார். காவிரிப் படுகையின் வாழ்ந்து கொண்டிருந்த ஏராளமான மிராசுதார்களைப் பற்றி சிறு பிராயத்திலிருந்தே ஏராளமாக அறிந்து வைத்திருந்த நாவலாசிரியர் இதுவரை எழுதப்படாது இருந்த அவர்களின் வாழ்க்கை முறையை சொல்லியே தீரவேண்டும் என்ற தீராத முனைப்புடன்தான் இந்த நாவலைப் படைத்துள்ளார். நீர்வளமும், நிலவளமுமிக்க தஞ்சை மாவட்டத்தின் பாபநாசம் அருகில் உள்ள இந்தளூர் என்ற சிறிய கிராமத்தில் வாழ்ந்த சேது காளிங்கராயர் மற்றும் அவரது குடும்பத்தை மையமாக வைத்து ‘‘மிராசு’’ எனும் 800 பக்க பெரும் நாவலை மிகவும் அழகாக வட்டாரப்பேச்சு மொழியில் எழுதியுள்ளார். தமிழகத்தின் நெற்களஞ்சியம் எனப் பெயர்பெற்ற ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தின் உயிர்நாடியான விவசாயம் மற்றும் அதனுடன் இணைந்த

பண்பாட்டு அம்சங்களின் பொதுவான தன்மைகளை இந்தளூர் கிராமத்தின் நடைமுறைகள் மூலம் விளக்கியுள்ளார். இந்த நாவல் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தின் தனித்துவமிக்கப் பண்பாட்டின் வரலாற்று நாவல் என்றால் மிகையாகாது. இதனை படிக்கும் தஞ்சை மாவட்டத்தை பூர்வீகமாகக் கொண்ட ஒவ்வொரு வாசகனும் தனது மனதில் கிராமத்தின் நினைவுகள் நிழலாடுவதை மறுக்க முடியாது. அவரே கூறுவது போல் ஜமீன், சுபேதார், மிட்டா மிராசு எல்லாமும் ஒழிந்துவிட்ட இக்காலக்கட்டத்தில் இந்நாவல் வெளிவந்திருப்பது பெரிய ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது.

விவசாயம், கலச்சார விழாக்கள், கோவில்கள், திருவிழாக்கள், கூத்து கொண்டாட்டங்கள், குடும்பங்களின் வாழ்க்கை மற்றும் உறவுகள் அதிலிருந்து தோன்றும் சிக்கல்கள், மனவலிகள், வாழ்வு, சாவு மற்றும் புற உலகின் அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் அதன் தாக்கங்கள் பற்றி எழுதியுள்ளார். வயிற்றுப் பசியைப் போல் காமம் ஒரு பசி அதுவும் ஓர் உணர்வு என்பதை நமது கலாச்சாரம் ஏற்பதில்லை. உலகமும் மனிதர்களும் எல்லா நேரங்களிலும் ஒரே நிலையில் இருந்துவிடவில்லை. சபலங்களும் சஞ்சலங்களும் நிறைந்தவர்களாகத்தானே மனிதர்கள் இருக்கிறார்கள், என்று உணர்வுகளை அழகாகத் கூறியிருக்கிறார்.

இயற்கையை எழுதுவது போல் பெண்களின் கட்டமைவையும் உடல் வளமையையும் ஆண்களின் வனப்பையும் எழுதுவதில் தவறில்லை என்ற கருத்தும் உள்ளது. இயற்கையின் வெளியோடும் செடிகளோடும் கொடிகளோடும் மரங்களோடும் பறவைகளோடும் விலங்குகளோடும் இணைந்தே வாழ்க்கை என்ற உணர்வோடு இந்த நாவல் அமைந்துள்ளது.

சாம்பல் வெளி, வெண்மை படியாத புலர், காலைப்பொழுதின் குயில் ஓசை, சேவல்கள் கூவல், காகங்கள் கரையும் இயற்கை எழிலோடு ஒவ்வொரு வீடுகளில் முன்பும் பெண்கள் தோன்றி சாணம் தெளித்து கோலமிடுதலையும் விவரித்து நாவல் தொடங்குகிறது. ஆம்பிளைகளில் முக்கால் வாசிக்கும் அதிகமானோர் தங்களது காலை கடன்களை முடித்துக் கொள்வதற்கு சாலையின் ஓரங்கள்தான் ஒரேவழி.

பொங்கலை முன்னிட்டு வீடுகளை சுத்தம் செய்வதும், மண்சுவர்களைப் பூசுவதும், தரைகளை மொழுகுவதும், சுவர்களுக்கு வர்ணங்கள் பூசுவதும் கிராமங்களின் தனி மகத்துவம். பொங்கல் அன்று காலை பொழுதும் எப்போதும் போல் புலர்ந்தது. சுற்றியுள்ள பதினெட்டு கிராமங்களுக்கும் 'பெரிய மெராசு' என்று அறியப்படும் சேது காளிங்கராயர் காலையிலேயே குளித்து முடித்து புத்தாடைகள் அணிந்து கொண்டு விபூதி, சந்தனம், குங்குமம் மணக்க ஆலோடியில் வந்து உட்கார்ந்து விட்டார். விரல் மொத்தத்தில் வயிற்றுப் பகுதி வரை புரளும் தங்கச்செயின் கைகளில் தங்கக்காப்பு, நத்தை அளவிற்கு விரல்களில் மோதிரங்கள். அவருக்கு அருகில் மரப்பலகையில் கவுளி கவுளியாக வெற்றிலையும், பாக்கும் இருந்தது. பேலாவில் சந்தனமும் ஒரு மரக்கால் நிறைய சில்லறைக் காசுகளும் வைத்திருந்தார். பொங்கல் வந்துவிட்டால் வேலை செய்கிற ஆட்கள் பணங்காசு கேட்டுக்கொண்டு வரிசைகட்டி நிற்பார்கள். யாருக்குமில்லையென்று சொல்ல முடியாது. தன்னை அண்டி வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிற ஆட்களுக்கு நிறைவாய்தான் செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்.

பள்ளத்தெருவில் இருந்து வந்த ஆட்களுக்கு கார்வாரி சந்தனத்தைக் கொடுத்துவிட்டு ஒருவருக்கு இரண்டு கழி கரும்பு, ஒரு சீப்பு வாழைப்பழம், ஒரு தேங்காய், ஒருபடி பச்சரிசி, அச்சுவெல்லம் என்று கொடுத்ததும் காளிங்கராயர் வெற்றிலை பாக்கில் எட்டணாவை வைத்துக் கொடுக்கிறார். தீபாவளியானால் ஆளுக்கொரு வேஷ்டியும் துண்டும் கிடைக்கும் உள்ளூர் ஆட்கள் தவிர்த்து அக்கம் பக்கத்து ஊர்களிலிருந்தும் தெரிந்த ஆட்கள் சிலர் வந்துபோனார்கள் அவர்களுக்கும் விநியோகம் நடந்தது. அதிகாலையிலேயே தச்சர், கொல்லர், வண்ணார், அம்பட்டர், குயவர், தேசிகர் போன்றோர்கள் வந்து பொங்கல் படி வாங்கிக்கொண்டு சென்று விட்டார்கள்.


கதையில் வரும் இந்தளூர் கிராமம் வளர்ச்சிப் பெறாத மற்ற கிராமங்களின் பொதுவான தன்மைகளுடன் ஒத்திருந்தது. அறுபது அறுப்பத்தைந்து குடியானவர் வீடுகளையும் கொண்டது. அதில் பெருமிராசு குடும்பம் சேது காளிங்கராயர் குடும்பம். மூதாதையர் விட்டுச் சென்ற 20 வேலி நிலத்தோடு 30 வேலி நிலத்தை தன் சம்பாத்தியமென்று வாங்கி, 50 வேலி நிலம் (1 வேலி: 6.17 ஏக்கர்) மற்றும் தோப்பு தொரவு, ஐஸ்வர்யங்கள் கொண்ட குடும்பம். நஞ்சை மட்டுமின்றி தோப்பு தொரவுகள் வண்டி வசதி என ஏராளமான ஆஸ்திகள் சேர்த்து வைத்துள்ளார். ஈட்டலும் வகுத்தலும் காத்தலும் என்ற வள்ளுவனின் வாக்குக்கு இணங்க வாழ்க்கை நடத்துபவர். தான் போய் வயலைப் பார்க்க வேண்டும் வாய்க்காலைப் பார்க்க வேண்டும் என்ற காரியம் இல்லை. ஆஸ்திபாஸ்திகளை கவனிக்க கார்வாரி கணக்குப்பிள்ளை மற்றும் போதுமான வேலை ஆட்கள் இருக்கிறார்கள். ரெண்டு முதல் ஐந்து

வேலி நிலங்கள் கொண்ட நடுத்தர விவசாயிகளும், அதற்கும் குறைவான நிலங்களையுடைய சிறுநில விவசாயிகளும், சொந்த நிலம் ஏதுமில்லாத குத்தகை விவசாய குடும்பமும், ஆடு மாடுகளை வைத்து பிழைக்கும் குடும்பங்களும் கொண்டது குடியானவர் குடும்பங்களின் வகைப்பாடு. பெரும்பான்மையாக ஒரு சாதியும் மற்றும் இதர சாதிகளும் உண்டு. வண்ணார், அம்பட்டர், தச்சர், கொல்லர் சாதிய வேலைகளும் கொண்டது. மற்றொரு புறம் நிலம், நீச்சு, குத்தகை என்று எதுவும் இல்லாதவர்கள். கைகளை ஊன்றி தான் பிழைக்கவேண்டிய சுமார் அறுபத்தைந்து தாழ்த்தப்பட்டோர் குடும்பங்களையும் கொண்டிருந்தது. வறுமையும் பசியும், பட்டினியும், நோயும் மரணமும் அவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்தது.

மின்சாரம், பள்ளிக்கூடம், ஆரம்ப சுகாதார நிலையம், தார்சாலைகள், போக்குவரத்து வசதி என எந்த அருவமும் இல்லாத இருண்ட கிராமம். சுதந்திரம் பெற்றப் பிறகு காங்கிரஸ் ஆட்சியிடமிருந்து ஏராளமான எதிர்பார்ப்புகளையும் விழைவுகளையும் கொண்டிருந்தது. சிதிலமடைந்த அம்மன் கோவில், கோவில் பூசாரி, நோய் தீர்க்க மருத்துவச்சி மற்றும் ஆண்டவன் மட்டும்தான் வழி. கிராமத்தின் பண்பான நிலவுடைமையில் ஏற்றத்தாழ்வுகளையும், சாதீய தீண்டாமையும் கொண்ட கிராமம்.

பெரிய மெராசு காளிங்கராயர் வெளியே நடந்து போனாலும் வண்டியில் போனாலும் அவரை எதிரில் பார்த்தவர்கள் எல்லாம் போட்டிருக்கும் கால் செருப்பை கழற்றிக் கொள்வதும், மேல் துண்டை சுருட்டி மடித்து கமுகட்டியில் வைத்துக்கொள்வதும், கைகட்டி வாய் பொத்தி கூனி குறுகி நிற்பதும் விவசாயக்கூலிகள் மட்டுமில்லை தன் சாதிக்காரர்களும் தன் ஜாதிக்கும் அடுத்தபடியாக இருக்கிற ஜாதிக்காரர்களும் இன்னும் வண்ணார் அம்பட்டர் கொல்லர் தட்டார் அனைவரும் அத்தனை குடிபடைகளும் அப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆயினும் காலத்தின் மாற்றத்தை மெராசு உணர்ந்தேயுள்ளார். தாத்தா காலத்தில் மற்றும் அப்பா காலத்தில் நடந்ததெல்லாம் என் காலத்தில் நடக்கிறதா என்ற சிந்தனையும் எழாமலில்லை. பின்னாடி நம்ம பிள்ளைங்க அம்புட்டு சொத்தையும் காவந்து பண்ணுமான்னு என நெனைச்சி நெல நீச்சு வாங்குறதை கட்டுப்படுத்திகிட்டார். இன்னும் போகப்போக மாற்றங்கள் தோன்றி தன் வாழ்க்கையை சீரழித்துப் போட்டு விடுமோ என்ற அச்சமும் தோன்றுகிறது. இந்த நினைப்பு அவருக்குள் வந்து போனதுமே ஒரு சிறு நடுக்கமும் வரத்தான் செய்கிறது.




பெரும் மாளிகை போன்ற வீட்டில் சேது காளிங்கராயர் தனது மனைவி ராஜாமணி மற்றும் மகன்கள் அசோகன், வெங்கிடேசு மற்றும் மகள் கிருஷ்ணவேணி ஆகியோருடன் வசித்து வருகிறார். சதாநேரமும் வீட்டு வேலைக்காரி மற்றும் ஆட்கள் என நிறைந்த வீடு. ருசியான உணவு வகைகளுக்குப் பஞ்சமில்லை. பிடித்தமான கோழிக்கறி விரால் மீன் வகையறாக்கள் என விருந்து படைக்கும் சமையல் வழக்கமானது.

பெண்களுக்கு வழக்கமாகிப் போன சமையலறைதான் ராஜாமணியின் வாசஸ்தலம். வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடக்கும் பிள்ளைகள். அவர்களைச் சொல்லி பலன் இல்லை. இந்த ஊருக்குள்ள பள்ளிக்கூடம் இல்லாதது பெரிய குறை. அதனால் தான் பிள்ளைகள் படிக்க வைக்க முடியவில்லை. இது காளிங்கராயரின் அடிமனதின் ஆழமான குறை. ஏழேழு தலைமுறைகளுக்கான சொத்து பத்து தன் வசமிருக்கிறபோது இதெல்லாம் அனாவசியம் என்றுதான் அப்போது நினைத்திருந்தார். தலைமுறை தலைமுறையாய் யாரும் படிக்கவில்லை என்பதை நாவலாசிரியர் குறிப்பிடுகிறார். பள்ளிக்கூடம் இல்லை என்பது அவருக்கு மட்டுமல்ல, ஊருக்குள்ளும் அனைவரின் தீராத மனக்குறை.

சித்திரை பிறந்துவிட்டாலே விவசாய வேலைகள் ஆரம்பித்துவிடும். வயலுக்கு எரு அடிப்பதில் தொடங்கி 'நல்லேர் கட்டுவது' 'விதை முகூர்த்தம்', தண்ணீர் பாய்ச்சுதல், நாற்றங்கால், ஏர்உழவு, நடவு, களை பறிப்பு, அடைமழை, அறுவடை, போரடி, பட்டரை, வைக்கல்போர், விதைநெல் கோட்டை, கூலி என அனைத்து விவசாய நிகழ்வுகளையும் விரிவாக விளக்கியுள்ளார்.

நீர் நிறைந்த ஏரியின் கரைகளும் வெள்ளை கொக்குகளும், வக்கா மடையான்களும் நாரை, செம்போத்து, காணாங்கோழி, வாத்து போன்ற ஏராளமான பறவைகளின் சரணாலயம் போல் இருக்கும். இரையைத் தேடி கிருஷ்ணப் பருந்துகளும் வட்டமடித்துக் கொண்டிருக்கும். கண்ணுக்கெட்டிய வரைக்கும் நெல் வயல்கள் பச்சைப்பசேல் என்று பசுமையாய்த் தெரியும். வயல்களில் குரவை, ஆரால், கெளுத்தி, கெண்டைப்பொடி, உளுவை, விலாங்குமீன், சிலேபி மீன்கள் விளையாடிக் கொண்டிருக்கும். அறுத்துப் போட்ட அரிகளில் காக்காய், குருவி, நார்த்தாம்பிள்ளை, தவிட்டுக் குருவி, அரிக்காடை, உள்ளான், சூத்தாட்டிக்குருவி என்று விதவிதமாய் வந்து நெல்லை ஆனந்தமாய் தின்று கொண்டிருந்தது. அவைகளை விரட்டியடிக்க யாருக்கும் மனசு போகாது. இயற்கையின் எழில் உயிரினங்களின் வாழ்வில் உள்ளது.

இட்லி கூடை விற்கும் சூரியகாந்தம் மற்றும் டீ கடைகாரருக்கு அறுவடைக் காலம் வந்துவிட்டால் குஷிதான். மற்ற நாட்களில் இவர்களுக்கு வியாபாரம் கிடையாது. தச்சர், கொல்லர், நாவிதர், வண்ணார், வெட்டியான் உட்பட காணிக்கு ஒரு கோட்டு வீதம் கதிர் கொடுத்தனுப்ப வேண்டும். பூம் பூம் மாட்டுக்காரர் ஒரு மரக்கால் நெல் வாங்கிச் சென்றார். சாட்டையால் தன்னை அடித்துக் கொள்கிறவன் வருவான், உடுக்கை அடிப்பவன், குடுகுடுப்பைக்காரன், கை ஜோசியம், கிளி ஜோசியம், கம்பங்கட்டிக்காரன், நரிக்குறத்தி, நரிக்குறவர்கள், வக்கா, மடையான் , கொக்கு , குயில், மணிப்புறா இன்னும் என்னென்ன பறவைகளோ கவுண்டியால் அடித்துக் கொண்டு விற்பவன், வளையல், பொம்மை, ஐஸ் விற்பவன், பம்பாய் மிட்டாய்க்காரன், பேரிச்சம் பழம் , தோல் பொம்மை நாடகம் போடுகிறவன், இரவு பகலாய் சைக்கிள் ஓட்டுபவன், காஷ்மீர் போர்வை ஏலம் போடுபவன் வருவார்கள், பங்குனி கடைசி வரைக்கும் வருவார்கள். இவர்கள் அனைவரின் வயிற்றுப்பிழைப்பும் விவசாயத்தை நம்பித்தான் இருக்கிறது

ஒரு 'மா' நிலத்திற்கு (3:5மா: 1 ஏக்கர்) 15 கலம் (1 கலம்: 48 படி) மூக்கு மேல் விரல் வைக்கிர வெள்ளாமை. இதுக்கெல்லாம் காரணம் எரு, ஆட்டுக்கெட மாட்டுக்கெட அதுதான் காரணம்னாலும் வத்தாம கெடைக்கிற தண்ணியும் முறையா பேஞ்சி முடியிற மழையும் தான் என்பதை நாவலாசிரியர் பதிவிடுகிறார். அறுவடைக் காலத்தில் யாரும் அசந்து மசந்து உட்காரக்கூட நேரங்கிடைக்காது. இந்த நேரத்தில் நாலு காசை சம்பாரித்து வைத்துக் கொண்டால்தான் வருடத்தில் கால் பங்கு காலத்தையாவது ஓட்ட முடியும் என்பதுதான். கிட்டங்கியில் நெல்லை விற்பது, குத்தகை நெல் கொண்டு போவது, விதை நெல் காய வைப்பது, காயவைத்த நெல்லை கோட்டை கட்டுவது, இப்படித்தான் விதை நெல்லை பராமரித்துக் கொள்வார்கள். இன்றைய காலத்தில் விதை நெல் வாங்கிதான் விதைக்க வேண்டும்.

இந்தளூரில் பொது இடம் ஏதுமில்லை. வெயில் நேரத்தில் வருகிற வழிப்போக்கர்கள் சத்திரம் சாவடிகளில் தங்கி தான் இளைப்பாறிச் செல்வதற்கு ராஜகிரி அப்துல்கலாம் ராவுத்தர் கட்டிய சாவடிதான் பொதுஇடம். ராவுத்தருக்கு இந்தளூரில் பத்துவேலிக்கும் அதிகமான நிலபுலன் இருந்தது. வயது முதிர்ந்ததும் நிலபுலங்களை குத்தகைக்குக் கொடுத்துவிட்டு நேரடி விவசாயத்திற்கு முழுக்கு போட்டுவிட்டார். ராஜகிரியில் தனது அந்திம காலத்தை கழித்துக் கொண்டிருந்தவர் ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன் இறந்து போனார். இஸ்லாமியர்கள் இந்த மண்ணின் மைந்தர்கள் என்பதை எடுத்துரைக்கிறார்.

தலைமுறை தலைமுறையாக படிப்பு வாசனை அறியாத கிராமத்தில் பிள்ளைகளின் எதிர்காலம் கல்வியில் தான் இருக்கிறது என்று ஒவ்வொருவரும் உணர ஆரம்பித்து விட்டனர். அதனை நிறைவேற்றிட காங்கிரஸ்கட்சியின் முக்கியஸ்தர்களை காளிங்கராயர் மூலம் சந்திக்கலாம் என்று முடிவு செய்து அவரை அணுகினார்கள். இருக்கிற ஆஸ்திக்கும் பாஸ்திக்கும் தன் சொந்தப் பிள்ளைகளை படிக்க வைக்காதவர் ஊர் பிள்ளைகள் படிப்பதற்கு விரும்புவாரா என்ற சந்தேகமும் கூடவே இருந்தது. அவர்கள் அனைவரையும் கண்ட காளிங்கராயர் வரவேற்றாலும் ஆலோடியில் உள்ள நாற்காலிகளில் உட்காராமல் பார்த்துக் கொண்டார். பெரிய மெராசை சந்தித்துப் பேசியதில் அவர் நடத்திய விதம் குறித்து மிகுந்த கசப்புணர்வுடன் வீட்டிற்கு செல்லாமல் சாவடிக்குத் தான் சென்றார்கள். சுயமரியதை உணர்வு எழுந்தது. அக்ராரத்துல நாராயணசாமி சோழகர் இருக்காருல்லியா? அவுரு நல்லா படிச்ச மனுசன். வாத்தியாராவும் இருந்தாரு. அவுருக்கிட்டப் பேசி


அவுரோட திண்ணையிலேயே ஒரு பள்ளிக் கொடத்த ஏற்பாடு பண்ணச் சொல்லி நம்ப ஊரு புள்ளைங்களுக்கு பாடத்த சொல்லிக்குடுக்கச் சொல்வோமே என்று முடிவு செய்து, சோழகரை சந்தித்தனர். சோழகரிடம் வந்து காரியத்தைச் சொன்னார்கள். அவருக்கும் ஏற்புடையதாய் இருந்தது. வாத்தியார் வீட்டு திண்ணையில் காலை முதல் மதியம் வரை வகுப்பு முடிவானது. வாத்தியாருக்கு சம்பளமாக ஒரு புள்ளைக்கு ஒரு வருசத்துக்கு ஒரு மூட்டை நெல்லு கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டது. "கடைசி காலத்தில் கடவுள் கண்ணைத் திறந்து இருப்பார் போல" என்று வாத்தியார் நினைத்துக் கொண்டார்.

ஊருக்குள் இருபது முப்பது சைக்கிள்களில் சிகப்புக் கொடி கட்டி கூலியை உயர்த்திக்கொடு, உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கு என்று கம்யூனிஸ்ட் கட்சியினர் எழுப்பிய கோஷங்கள் ஊரையே கலங்கடித்தது. குத்தகை விவசாயிக்கு உழுபவனுக்கே நிலத்தை சொந்தமாக்கு என்ற கோஷம் பிடித்துப்போனது. பெரிய மெராசு காளிங்கராயருக்கு அதிர்ச்சி அளித்தது. எதிரும் புதிருமான இருவரின் மனநிலையைக் குறிப்பிடுகிறார்.

ஊர்விசயங்கள் மற்றும் அரசியல் பேசுவதற்கும் சுவாமிநாத மல்லிக்கொண்டார் டீ கடை தான் மையமானது. சுறுசுறுப்பாகி காலை ஐந்து ஐந்தரை மணிக்கெல்லாம் டீயடிக்கத் தயாராகிவிடுவார். ஐந்து மணிக்கெல்லாம் டீ குடிக்க ஆட்கள் வந்து காத்துக் கொண்டிருப்பார்கள். குடியானவர்கள் வசதியாய் உட்கார்ந்து டீ குடிப்பதற்காக ஐந்தாறு பலகைகளும் வைத்திருந்தார். சேரி ஆட்கள் கடைக்குள் வரமுடியாத கடுங்கட்டுப்பாடு. அவர்கள் தாழ்வாரத்தில் நின்றபடி குரல் கொடுத்தால் மல்லிக்கொண்டார் ஓட்டை வழியாய் டீயை கொடுப்பார். அவர்கள் டீயைக் குடித்துவிட்டு கிளாசைக் கழுவி காசோடு திரும்பவும் ஓட்டையில் வைத்தால் மல்லிக்கொண்டார் எடுத்துக் கொள்வார். சேரி ஆட்களுக்கு தனிக் குவளைதான். இக்கொடுமையை எதிர்த்துக் கேட்க அவர்களுக்கு எப்போதுதான் திராணி வரப்போகிறதோ தெரியவில்லை.

விவசாய கூலிகளான தாழ்த்தப்பட்ட மக்களின் ஏழ்மையையும், வேலையின்மையும், பசி பட்டினியையும், தீண்டாமையும் நாவலாசிரியர் விளக்குகிறார்.

ஔச்சி போட்டுபுட்டுதான ஓட்டாண்டியா குந்திருக்கம் எங்கள எந்த மொதலாளி கண்ணு தொறந்து பாக்கப் போவுது? கண்ணு தொறந்து பாக்குற சாமிய வெய்யில்லயும் மழையிலயும்



போட்டுட்டு ஒரு வௌக்குக் கொளுத்தி வைக்ககூட நாதியத்துக் கெடக்கம். வேலையிருந்தால் அவர்களை நசுக்கிப் பிழிகிறார். ஓரணாவை கூட்டிக் கொடுக்க மனசு வரவில்லையே. மிராசு என்று பேர் இருக்கிறது. சுற்றுப்பட்ட வட்டாரத்தில் பெரிய மிராசு என்று பெத்த பேர் இருக்கிறது என்று நாவலாசிரியர் அழுத்தமாகப் பதிவிடுகிறார்.

தாழ்த்தப்பட்ட மக்களின் சுயமரியாதையை விட்டுக்கொடுக்காமல் பசியைப் போக்கிட வழியை கண்டு பிடிக்கும் தேவையை விவரிக்கிறார் நாவலாசிரியர். " யாசிச்சா சோறு கெடைக்கும். பசியாறிக்கலாம். நம்பல்லாம் அப்படிப்பட்ட ஈன செம்மாடா? அதுக்கு செத்து போயிரலாம். செத்துப் போறதுக்கா சாமி உசுர கொடுத்தாரு... நாலு பேரு கூடி பேசினாதானடா நல்லது பொறக்கும். வயல்ல இருக்க நண்டையும் நத்தையையும் அவிச்சி தின்னுபுட்டா பசியடங்கிப் போயிடுமாடா? நாலு பருக்கையை வயித்துக்குள்ள போட்டாத்தான பசியடங்கும்."

ஊருக்குள்ள காத்திய மாத்தையிலிருந்து வேல வெட்டி எதுவும் இல்லாம எந்த வருமானமும் இல்லாம எல்லாரும் பசிபட்டினியா கெடந்து செத்துக்கிட்டிருக்கங்கய்யா பெரிய மனுசன்ங்க நாங்க பசி பட்டினிய தாங்கிகிட்டாக் கூட புள்ளக்குட்டியோ என்னங்கய்யா பண்ணும்? இந்த நெலம இன்னும் ரெண்டு நாளைக்கி நீடிச்சாக்கூட பள்ளத்தெருவுல பாதி செத்துப் போயிருவம்ங்கய்யா. பள்ளத்தெருவுல அறுபது குடி இருக்கமுங்கய்யா

இந்த அறுபது குடிக்கும் குடிக்கு ஒரு மூட்ட நெல்லுன்னு வீதம் பண்ணி அறுவது மூட்ட நெல்ல குடுத்துவுட்டிங்கன்னா காத்தியமாத்தையும் மார்ளியையும் ஓட்டிப்புடுவம்ங்கய்யா

காளிங்கராயர் மனதில் அவர்களுடைய பேச்சும் இருப்பும் ஈரத்தைக் கொண்டுவந்து சேர்த்துக் கொண்டிருந்தது. இந்த அறுபது மூட்டை நெல்லும் அவர் வீட்டு காணியில் ஒரு மூலையில் விளையக்கூடிய நெல்தான். தன்னை அண்டி வாழ்கிற குடிபடைகள் நன்றாக இருந்தால்தானே மிராசு நான் நன்றாக வாழ முடியும் என்ற சிந்தனைகள் அவருக்குள் ஓடிக்கொண்டிருந்தது. ஊருக்குள்ள பசியால செத்தான்னு சேதி வந்தா நாமெல்லாம் இந்த உசுர வச்சிகிட்டு இருக்கலாமா? எலே தருமா செவத்த வச்சித்தான் சித்திரத்த எளுதணும்னு சொல்லுவாங்க. ஒங்களக் கொண்டுதான நாங்களும் சாவடிய பண்ணி காலத்த தள்ளணும். இந்த நெல்ல ஆரும் திருப்பித்தரவாணாம். இந்த ஒதவி இந்த வருசத்துக்கு மட்டுமல்லடா தருமா எங்காலம் முடியிற வரைக்கும் நடந்துக்கிட்டே இருக்கும்.

வாழ்க்கை அனைவருக்கும் ஒன்றாக இல்லை. காளிங்கராயர் வீட்டில் சகல வசதிகளும் விதவிதமான உணவுவகைகளுக்கு பஞ்சமில்லாத போது பள்ளத்தெருவில் கடும் பசியும் பட்டினியும் குடியானவர் வாழ்க்கை செழிப்பாக இல்லை. அதனை விளக்கும் விதமாக "அடுக்கடுக்கா நான்கு பெண்களை பெத்து வச்சுருக்கன். ரெண்டு பொண்ணுங்க வயசுக்கு வந்து வூட்டுல குந்திருக்குது. ரெண்டு பொண்ணுங்க சின்னப்புள்ளைங்களா இருக்கு. ஏ வூட்டுக்கார பொம்பள கொஞ்சம் கட்டுசட்டா இருக்கும். நல்லது கெட்டது பண்ணி சாப்புடணும்னு ஆசவய்க்காது. மாத்தைக்கி ஒரு தடவையோ ரெண்டு தடவையோ தான் கவிச்சி. ஒரு நாளக்கி கொளம்பு வச்சா மய்த்தா நாளு மொட்ட ரசம்தான். நாங்களும் வயல்ல எறங்கி வேல பாக்குறதால கொஞ்சத்துக்கு கொஞ்சம் தன்னக்கட்டிக்கும். பொண்ணுங்களுக்கு இதுநாள் வரைக்கும் வூட்டுக்குள்ள ஒரு குந்துமணி நக வாங்கி வைக்கல. அதுங்களா ஒருத்தன் கையில புடுச்சி கொடுக்குற வரைக்கும் எனக்கு நித்திய கண்டம் பூர்ண ஆயுசுதான். எது எப்படியிருந்தாலும் மனத்தெம்ப மட்டும் வுட்றமாட்டேன்."

காமராசர் முதலமைச்சராகப் பதவியேற்றபின் மக்களின் எதிர்பார்ப்பு மிகவும் தீவிரமாக இருந்தது. அவருக்கு முன்னாடி குமாரசாமிராஜா, ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியார் ராசாசி ஆச்சியில ஒருபெரேசனமும் இல்ல. ராசாசி குலக்கல்வித்திட்டம் கொண்டு வந்தாரு. காமராசர் தஞ்சாவூரில் நடந்த பொதுக்கூட்டத்தில் கப்பி ரஸ்தாக்களை தார் சாலையாக மாற்றுவதும் மின்சாரம் இல்லாத கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதும் ஐநூறு மக்கள் தொகை கொண்ட பஞ்சாயத்திற்கு ஒரு பள்ளிக்கூடம் கட்டித் தருவோம் என்ற பேச்சு செயலுக்கு வந்தது.

பள்ளிக்கூடம் இரண்டு வாத்தியார்களைக் கொண்டிருந்தது. ஐந்தாம் வகுப்புவரை பாடம் நடத்த வேண்டும். இந்தஊரில் காளிங்கராயர் வீட்டைத் தவிர்த்து மற்ற எல்லா வீடுகளிலும் பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவிட்டார்கள். சேரியிலிருந்தும் நிறைய பிள்ளைகள் வருகின்றனர். மதிய உணவு பள்ளிக்கூடத்தில் தருகின்றனர். பாலும் கொடுக்கிறார்கள். காளிங்கராயருக்கு தன் வீட்டு பிள்ளைகள் படிக்கிற வயதை தாண்டியதால் அனுப்ப முடியவில்லை. ஏதோ கையெழுத்துப் போடவும் கணக்குப் போடவும் தெரிந்து கொண்டாலாவது அவர்களின் வாழ்க்கைக்கு உதவியாக இருக்கும் எங்கிற மனத்தாங்கல் இல்லாமல் இல்லை.

காளிங்கராயர் குடும்பத்தில் எந்தத் கஷ்டமும் குறைபாடும் இல்லாமல் இருந்தது. கணவருக்கு விதவிதமான வாய்க்கு ருசியான உணவை தயாரித்துப் போடுவதில் ராஜாமணி மகிழ்ச்சி கொண்டிருந்தார். வீட்டிற்கு வரும் மாமன் மச்சினன் தங்கை உறவுகளுக்கு விமரிசையாக ஆடு கோழி விரால் மீன் என விருந்து படைப்பதும் மச்சினனுடன் கள் சாராயம் என மது அருந்தி களிப்பதும் என மகிழ்ச்சியாக காலம் கழிந்து கொண்டிருந்தது. இருவீடுகளிலும் வயது வந்த பெண்களும் வயது வந்த பையன்களும் வளர்ந்துவிட்ட பிறகு குடும்ப சூழ்நிலை மாறத் தொடங்கியது. அகமணமுறைதான் அன்றைய வழக்கு. தன் பெண்ணைக் கட்டிக்கொள்ளவேண்டும் என்று தங்கையும் தன் பெண்ணைக் கட்டிக் கொள்ளவேண்டும் என்றும் மனைவியின் சகோதரனும் மாறி மாறி வற்புறுத்தியது குடும்பத்தில் சில மனக்குறைகளைக் கொண்டு வந்தது. பெரிய மகன் சொந்தத்தில் வேண்டாம் என்றவன் பின்னர் தானாக முன்வந்து அத்தை மகளை கட்டிக் கொள்ள சம்மதித்தது ஒரு வழியாக பிரச்னை முடிந்தது. பெண்ணுக்கான பரிசம் தொடங்கி கல்யாணம் வெகுவிமரிசையாக நடந்தது. திருமண வைபவம் பற்றி சிலாகித்து எழுதியுள்ளார்.

தேவைகள் அதிகரித்துக் கொண்டேயிருப்பதால் விவசாயத்தில் இயந்திரங்களும், அயல்நாட்டு உரங்களும், பூச்சி மருந்துகளும் நுழைந்தன. விவசாய உறவுகளில் மாற்றம் ஏற்பட்டது. " பசுமைப் புரட்சி" என்ற மந்திரச் சொல் மக்கள் மனங்களில் வியாபித்துக்

கொள்ள ஆரம்பித்துவிட்டன. மாவுக்கு பத்து மேனி விளைச்சல் என்றவர்கள் தற்போது இருபது மேனி என்று சொல்ல கற்றுக் கொண்டுவிட்டார்கள். நெல் மூட்டை விலையும் பத்திலிருந்து முந்நூறு ரூபாய் வரை உயர்ந்தது. சீமை உரங்களின் வருகையால் குப்பை உரம், ஆடுமாட்டு உரம் போடுவது வெகுவாய்க் குறைந்து போனது. கால்நடைகளும் அருகிப் போனது.

இப்போது கிராமங்களில் கூட கொஞ்சம் கூடுதல் எண்ணிக்கையில் பேருந்துகள் ஓட ஆரம்பித்திருக்கின்றன. சிறு நகரங்களிலும் குட்டி நகரங்களிலும் அதிக எண்ணிக்கையில் வியாபார ஸ்தலங்களும் பெருக ஆரம்பித்திருக்கின்றன. நீராவியில் ஓடிக்கொண்டிருந்த ரயில் எஞ்சின்கள் டீசல் போட்டு ஓடிக்கொண்டிருக்கின்றன. நாணயங்கள் மதிப்பு காலணா, அரையணா என்பது பைசாக்கள், ரூபாய் என மாறியது. அது போலவே வீசை, சேர், படி எல்லாம் மாறி லிட்டர், கிலோ, மில்லி கணக்கு முறைக்கு வந்துவிட்டது.

திருமணம் முடிந்த கையோடு பெட்டிச்சாவியை மகனிடம் ஒப்படைத்துவிட்டு காளிங்கராயர் ஒதுங்கிக் கொண்டார். அதுமுதல் அவரது வாழ்வில் இறக்கங்களை சந்திக்கலானார். மகனின் போக்கு சரியாகயில்லை ஆள் குடிபடையிடம் அவனது போக்கு சரியாயில்லை, காலங்காலமாக வேலை பார்த்துவந்த கணக்கப்பிள்ளை, கார்வாரி மற்றும் கூலியாட்கள் அனைவரையும் வெளியேற்றி விட்டான். சேது காளிங்கராயர் அக்கடா என்று சாய்வு நாற்காலியில் தலை சாய்த்து வெகு காலங்களாகிவிட்டது. அவரது மனைவி ராஜாமணியால்கூட முன்பைப் போல் சுறு சுறுப்பாக இருக்க முடியலை. மற்ற பிள்ளைகளுக்கும் கல்யாணத்தை நடத்திப் பார்த்துவிட்டார்கள். இரண்டு மூன்று ஆண்டுகளாக பேரப்பிள்ளைகளின் சப்தத்தைக் கேட்டு வந்த வீடு இப்போது கேட்பது அரிதாகிவிட்டது. மகன் அசோகன் பழைய காலத்து வீடு என்று நிலத்தை அடமானம் வைத்து வங்கியில் கடன் பெற்று பக்கத்தில் பெரிய பங்களா ஒன்று கட்டிக்கொண்டு அதில் குடியேறிப் போய்விட்டான். அவரது இளையமகன் வெங்கடேசனும் தோட்டத்தில் வீடு கட்டிக்கொண்டு குடி போய்விட்டார். சமையக்காரி, வேலைக்காரி போயிட்டா ஆளு தேளு அம்புட்டு பேரும் போய்ட்டன். இம்புட்டு பெரிய வூட்டுக்குள்ள நீங்களும் நானும்தான் முட்டி மோதிக்கிட்டு கெடக்கம். ஏதோ வெந்தத தின்னுபுட்டு விதி வந்து சாவோம்னு நம்பக்காலமும் ஓடிக்கிட்டிருக்கு. காசுருந்து என்னா பண்றது தள்ளாத வயசு காலத்துல ஒடுங்கிப் போயி குந்திருன்னு வச்சுப்புட்டானே பகவான். ஒடம்புல ரத்த ஓட்டம் இருக்குற வரைக்கும்தான ஆட்டபாட்டமெல்லாம். அது கொறஞ்சதும் எல்லாமேல்ல கொறஞ்சி போயிருது. பெரிய பிள்ளையை நினைத்தாலே அவருக்கு குறு குறுவென்று குடைந்து கொண்டிருக்கிறது. போதாதற்கு மகளும் வாழா வெட்டியாக சின்ன மகனிடம் தஞ்சம் அடைந்துவிட்டாள். கடவுளே எத்தனையோ முறை வந்த சாவு அப்போதே போய் தொலைந்திருக்கக் கூடாதா? எதற்காக விட்டு வைத்திருக்கிறது? இந்தக் கண்றாவியெல்லாம் கண் குளிரப் பார்த்துவிட்டு போய்ச்சேரு என்பதற்காகவா? ஓட்டிலிருந்து ஒழுகிய நீர் தலையில் சொட்டுகிறது. ஓரிரு இடங்களில் காரை பெயர்ந்து தரையில் பொத்து பொத்தென்று விழுகிறது. அடிக்கிற மழையில் மாடியே சரிந்து விழுந்தாலும் என்னமோ தெரியவில்லை. இருவருக்குமே நடுக்கம் கொடுத்துவிட்டது. தாத்தா காலத்தில் கட்டிய வீடு எத்தனை காலத்துக்கு தான் தாக்குப் பிடிக்கும்? தந்தை தாயின் அவலநிலையைக் கண்டு மகளும் மகளின் அவலத்தையும் பெரிய மகனின் சீரளிஞ்சி சிக்குப்பட்டு நிற்குற நிலைகண்டு தந்தை தாயின் துயரமும் எழுத்தில் விவரிக்க முடியாதது. நிர்கதியான நிலையில் பெற்ற மகள் அண்ணன் தயவில் நீண்ட காலம் வாழ முடியாது என்பதை உணர்ந்த பெற்றோர்கள் மகள் கிருஷ்ணவேணிக்கு தாங்கள் வாழ்ந்த வீட்டையும், வீட்டின் மராமத்துக்கும் குழந்தைகளின் ஜீவனத்துக்காக பணம் ஒரு லட்சத்தையும் தங்களின் ஜீவனத்திற்காக குடும்ப சொத்தில் ஒதுக்கி வத்திருந்த நான்கு ஏக்கரா நஞ்சை நிலத்தை சாகுபடி செய்து குடும்பத்தையும் குழந்தைகளையும் படிப்பு செலவுகளையும் பார்த்து வர எழுதிவைத்தார்கள்.

1971 சட்டமன்ற தேர்தலில் திமுக பெற்ற வெற்றியை மெராசுவினால் ஜீரணித்துக் கொள்ளமுடியவில்லை. ஒன்பது ஆண்டு காலம் முதல்வர் பதவியை ஏற்றுக் கொண்ட காமராசருக்கு இப்படி இழிவு வரலாமா என்று கலங்கி துடித்தார். உளுதவனுக்கு நாலு பங்கும் நெலத்தோட உரிமைக்காரனுக்கு ஆறு பங்குமான்னு இருந்த எளுதாத சட்டத்தை மாற்றி உளுதவனுக்கு ஆறு பங்கும் நெலத்தோட உரிமைக்காரனுக்கு நாலு பங்கு என சட்டம் போட்டாரே. காமராஜர் மட்டும் அந்த சட்டத்தக் கொண்டு வரலைன்னா லட்சோப லட்ச விவசாயிங்க வெவசாயிங்க வெள்ள வேட்டி கட்டிக் கிட்டு வெளில தலகாட்டி வந்துருக்க முடியுமா? கம்யூனிஸ்ட் காரங்க உழுதவனுக்கே நெலம் சொந்தம் என்ற கூப்பாடு போடவில்லை என்றால் இந்தச் சட்டமே நடமுறைக்கு வந்திருக்குமா? இதப் புரிஞ்சிகூட எப்புடிய்யா வெவசாயிங்க மாத்தி ஓட்டப் போட்டுருப்பாங்க?

பத்துப் பதினைந்து வருசத்துக்கு முன்னாடி நம்ப ஊருக்குள்ளே திமுககாரன்னு ஒரே ஒருத்தன் தான் இருந்தான். மித்த அம்புட்டு பேரும் காங்கிரஸ் கச்சில இருந்தாங்களே இப்ப அப்படியா இருக்கு ஊருக்குள்ள இருக்குறவுங்கள்ள முக்கால்வாசி பேர் திமுகவிலும் காவாசிப் பேர் காங்கிரஸ்லயும் இருக்காங்க. அடி வாரிசு பூரா திமுகாவுல இருக்குறாங்க. எப்படி இந்த மாத்தம் வந்துச்சி? திராவிடக் கட்சிகளின் ஆட்சியினால் கிராமங்கள் தன் நிறைவு பெற்றுக்கொண்டு இருப்பதை அவ்வளவு சுலபத்தில் மறுத்துவிட முடியாது. கிராமங்கள் தீப்பிடிக்காத வீடுகளாக நிரம்பிக்கொண்டிருப்பதை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும். இருபது முப்பது வருடங்களுக்கு முன்னால் கிராமங்களில் மச்சுவீடுகளும் மாடி வீடுகளும் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில்தான் இங்கொன்றும் அங்கொன்றுமாய் இருந்தது. எங்கு பார்த்தாலும் குடிசைவீடுகளும், கூரைவீடுகளும் தான் இருக்கும். ஆனால் இன்றோ குடிசைவீடுகளும், கூரைவீடுகளும் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில்தான் இருக்கின்றன. அவ்வளவு வீடுகளும் ஓடுபோட்ட வீடுகளாய் உருமாறிப் போய்விட்டன.

ரியல் எஸ்டேட் அதிபர்கள் காளிங்கராயர் மகன் வீட்டையும் விட்டு வைக்கவில்லை. நிலங்களை விலை பேச வந்துவிட்டனர். வீடு கட்ட வங்கியில் வாங்கிய பத்து லட்சம் ரூபாய் கடனுக்கு ஆறு ஏழு வருசங்களாக வட்டியும் கட்டவில்லை. பத்து லட்சம் எத்தனை லட்சமாக பெருகிக் கிடக்கிறதோ தெரியவில்லை. விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைப்பதும், தண்ணீரும் அரிதாகிப்போனது. இந்த நிலையில் அம்பது அறுபது வேலி நிலங்களை சாவடி பண்ணுவதும் கடினமாகவுள்ளது. போதாதற்கு கடன் தொல்லை வேற. கொஞ்ச நிலத்தை வெல பேசி விற்றுவிட்டு கடன்களை எல்லாம் ஒழுங்கு பண்ணிவிட்டு நிம்மதியா மூச்சு விட்டு உட்காரலாம் என்ற முடிவெடுத்துவிட்டார்.

தேவைகள் அதிகரிக்க அதிகரிக்க நகரப் பேருந்துகளின் எல்லைகள் விரிவாக்கப்பட்டு எண்ணிக்கையும் அதிகமானது. இந்த இருபது முப்பது வருச காலத்திற்குள்ளாக எத்தனை எத்தனை வியத்தகு மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. எத்தனை எத்தனை அசுரத்தனமான வளர்ச்சிகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. மனிதர்களின் பெருக்கத்தோடு தேவைகளும் அதிகரித்துக் கொண்டிருக்கிறதே. இந்தஊரிலும் எத்தனையோ மாற்றங்கள் வந்துவிட்டது. மின்சாரம் இல்லாத வீடுகளோ தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத வீடுகளோ இல்லவே இல்லை. செல்ஃபோன் வைத்திருக்காத மனிதரும் இல்லை. ஒருகாலத்தில் சாலையில் சைக்கிளைக்கூட கண்ணாறக் காணமாட்டோமோ என்றிருந்த நிலைமை மாறி இன்றைக்கு சாலை அகலப்படுத்தப்பட்டு அவ்வளவு மோட்டார் சைக்கிள்கள், கார்கள், லாரிகள், பேருந்துகள் என்று வினாடி நேரமும் ஓச்சல் ஒழிச்சல் இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கிறது. ஒருபக்கம் இத்தகைய வளர்ச்சிகள் இருந்தபோதிலும் காலம் அசுரத்தனமாய் ஒரு தலைமுறை மனிதர்களையே உருத்தெரியாமல் சாப்பிட்டு முடித்துவிட்டது. இதில் சேது காளிங்கராயரும், ராஜாமணியும் தப்பவில்லை. சாப்பிட்டுவிட்டு இரவு படுத்தவர் காலையில் எந்திரிக்கவில்லை. கணவர் இறந்ததை அறிந்ததும் ராஜாமணியும் உயிரைத்துறந்து விட்டார். மணமுடித்தவர்கள் மரணத்திலும் பிரியவில்லை.

முதுமை, அம்மை, காலரா பசியில் பட்டினியில் வறுமையில் மரணங்கள் என மரணத்தைப் பற்றி நிறையவே எழுதியுள்ளார். புள்ளக்குட்டிகள பெத்து வளர்த்து வாழ்ந்து சலிச்ச மனுசன் செத்துருக்காரு ஆட்டப்பாட்டத்தோட போய் சேரனும்ல. இறுதி சடங்குகள் குறித்து தயாரிப்புகள், பாடை கட்டுவது முதல் பிணங்கள் மயானக்குழியில் இறக்கப்பட்டு எரிக்கப்படும் வரை அந்தச் சடங்குகள் நடைபெறும் விதம் குறித்து சலிக்காமல் எழுதியிருக்கிறார்.

காலங்கள் கடக்கக் கடக்க அரசியலில், பொருளாதாரத்தில் சமூகத்தில் பற்பல மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பது போலவே வாழ்க்கை முறையிலும் பலவித மாற்றங்கள் நிகழ ஆரம்பித்துவிட்டன. மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து வாழ்வதும் பழகுவதும் அவர்களின் கோட்பாடுகளில் ஒன்றாகவே ஆகிப்போய்விட்டன. அதற்காக எவ்வளவு தூரத்திற்கு ஓடவும் உழைக்கவும் தயாராய் இருக்கின்றார்கள். நவீன நாகரீகத்தின் சாளரங்கள் வெகுவாய் திறந்து வைக்கப்பட்டு அதன் சாயத்தை பூசிக்கொள்ள அக்கறை காட்டுகின்றனர். வயசுக்கு வந்த பெண்கள் வீட்டின் இருட்டறையில் மறைந்து கிடந்த காலம் மாறிவிட்டது. பெண்கள் வேலைக்கிப் போறாங்க காலேஜுக்கு போறாங்க கடைத்தெருவுக்குப் போறாங்க சினிமாவுக்குப் போறாங்க. படித்த இளைஞனும் சரி இளைஞியும் சரி அவர்களின் பேச்சுக்களில் கூட அதன் படிமம் படிந்து கிடப்பதை நாம் சுலபத்தில் அனுமானித்துக் கொள்ள முடியும். காதல் காததூரம் என்பது போய் கைக்குள்ளேயே வந்துவிட்டது. பெரியோர்கள் பார்த்து திருமணம் என்பது போய் பிள்ளைகள் பார்த்து திருமணம் என்ற காலங்கள் வந்து ரொம்பக் காலமாகிவிட்டது.

பெண்கள் தாங்கள் பிறந்து வளர்ந்த வீடு அந்நியமா? கிருஷ்ணவேணிக்கும் ஒர் அந்நியத்தன்மையை உண்டாக்கிக்கொண்டிருந்தது. இக்கணமே பிறந்தகத்தை விட்டு புக்ககத்திற்கு சென்றுவிட மாட்டோமா வென்று துடிதுடித்துக்கொண்டு இருக்கிறார். கைவிட்டுச் சென்ற கணவன் எக்கணமாவது அவன் தன்னைத் தேடி வரத்தான் வருவான் என்றுதான் பேதலித்துப் போகிறது. வேண்டாத ஒன்றை வேண்டும் வேண்டுமென்று தவிக்கிறதே அது அவர்களுக்காகவா அவர்கள் பெற்ற பிள்ளைகளுக்காகவா?

பெற்ற பெண் வயதுக்கு வந்து வருஷங்கள் ஆகிவிட்டது. பிள்ளைகளுக்கும் அப்படித்தான். அவர்களுக்கான துணை அண்ணன்கள் வீட்டில் இருக்கிறது. அண்ணன் பிள்ளைகளுக்கான துணையும் கிருஷ்ணவேணியிடத்தில் இருக்கிறது. மனமிருந்தால் மார்க்கம் உண்டு. அண்ணன் தம்பிகளை நெருக்குதல் படுத்தி பிள்ளைகளின் மனசை நொறுக்க கொஞ்சமும் அவருக்கு இஷ்டமில்லை.

நாளை இந்த வீட்டை ஆளப்போகிறவர்கள் யாரோ எவரோ நிச்சயமாய்த் தெரியாது. காலம் இந்த வீட்டை வ்ண்ணம் குலுங்காமல் வடிவம் சிதையாமல் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளுமோ என்னவோ அதுவும் தெரியாது. ஆனாலும் வீடு மட்டும் இருக்கும். அது இருக்கின்ற இடத்தில் இருக்கத்தான் இருக்கும்.

நதிநீர் தன்போக்குக்கு ஓடிக்கொண்டிருக்கிறது. மழை தன் போக்குக்கு பெய்து கொண்டிருக்கிறது. காற்றும் தன் போக்குக்கு வீசிக்கொண்டிருக்கிறது. அதனதன் போக்கு அதன் சூழலைப் பொறுத்த விஷயமாயிருக்கிறது. சூழலைப் பொறுத்தே அதன் போக்குகளும் இருக்கின்றன. அப்படித்தான் கிருஷ்ணவேணியும் தன் சூழலைப் பொறுத்தே தன் உணர்வுகளை கட்டுப்படுத்திக் கொண்டு தன்னை மாற்றிக் கொள்ள முனைந்துவிட்டார்கள். பிள்ளைகளின் போக்கே தன் போக்கு என்று தன்னை மாற்றிக் கொண்டுவிட்டார். இனி இந்தளூரில் வாழ்க்கை இல்லை என்பதையும் முடிவு செய்து விட்டார். புகுந்த ஊரில் தன்னுடைய வாழ்க்கையை தொடங்கப் போகிறார்கள். விடியும் முன்பே கட்டிய துணிமணிகளோடும் காய்ந்த வயிறுகளோடும் வீட்டைவிட்டு வெளியே வந்தவர்கள் இருள் பிரியாமலும் சாம்பல் பூக்காமலும் இருந்த வெளியில் மங்கலாய் தெரிந்த வீட்டை அண்ணாந்து பார்த்தார்கள். அப்பா அம்மா நினைவுக்கு வந்தார்கள். அண்ணன்கள் நினைவுக்கு வந்தார்கள். இந்தளூரை நினைத்து தெருவை வெறித்துப் பார்த்தார்கள். சாலைப் பக்கம் வந்தார்கள். கண்ணுக்கெட்டிய தூரம் பாதையைப் பார்த்தார்கள். பாதை வெகு தூரமாய்.

கிராமத்தின் இயற்கைச் சூழல், உற்பத்தி முறைப்பாடு, சமூகச் சூழல, வர்க்க ஜாதிக் கட்டுமானங்கள் ஆகியவற்றை மிகத் துல்லியமாகச் சித்திரப்படுத்தியுள்ளார். காவிரியின் நீரோட்டம் போல் கால ஓட்டத்தையும் நம்மை முழுமையாக உணர வைக்கும் விதத்தில் எழுதியுள்ளார். மாற்றங்களின் ஊடாக நாம் வாழ்ந்து முடிந்தது போல் தோன்றுமளவிற்கு எதார்த்தமான எழுத்து. குறைபாடுகள் இல்லாமல் இல்லை.

அரசியல் நிகழ்வுகளை மேம்போக்காக விவரித்துள்ளார் என்றுதான் கூறவேண்டியுள்ளது. தஞ்சையில் சாணிப்பால் சவுக்கடிக்கெதிராக மற்றும் கூலிக்காக கம்யூனிஸ்டுகள் நடத்திய போராட்டங்கள் மற்றும் அதன் தாக்கங்கள் குறித்து அவர் பேசவே இல்லை என்பது பெருங்குறை. கூலிப் போராட்டத்தில் 44 பேர் உயிரோடு கொளுத்தப்பட்ட வெண்மணி சம்பவம் அவரது நினைவில் இல்லை என்பது அதிர்ச்சி அளிக்கிறது.

தஞ்சையில் தீண்டாமை மற்றும் சாதிய சுரண்டலுக்கு எதிராக பெரியார் நடத்திய போராட்டங்கள் அவரது சிந்தனைக்கு எட்டவில்லை. சனாதனத்திற்கு எதிராகவும் சமூக நீதிக்காகவும் பெரியார் கண்ட திராவிட சித்தாந்தம் ஏற்படுத்திய சமூக மற்றும் பொருளாதார மாற்றம் குறித்து மவுனமாகக் கடக்கிறார்.

கம்யூனிஸ்டுகளின் போராட்டங்களும், திராவிட ஆட்சியும் நிலவுடைமைகளிலும் உற்பத்தி உறவுகளிலும் தஞ்சையில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்தும் பேசவில்லை.

சமூக ரீதியாகவும் கல்விரீதியாகவும் பின்தங்கிய மக்களுக்கு மண்டல் கமிசன் அமுல்படுத்திய விபிசிங் ஆட்சியின் தாக்கம் குறித்தும் மவுனமாகக் கடந்து விடுகிறார்.

கலைஞன் அரசியல் பிரச்சாரம் செய்ய வேண்டியதில்லை. எந்தவொரு தத்துவத்திற்கும் சித்தாந்தத்திற்கும் சேவை செய்ய வேண்டியதில்லை. உண்மை என்பது மட்டும் போதுமானதே. ஆனால், எதார்த்தம் என்பது மேலே கூறியவற்றையும் உள்ளடக்கியதுதானே? அதனை விடுவது தீட்டும் சித்திரத்தின் ஒரு அம்சத்தை மூளியாய் விடுவதுதானே. ஆனாலும் குறைபாடுகள் குறைவு. நிறைவு உயிர்த்துடிப்பும் மிக்க அசலான தமிழ் படைப்பு எனக் கூற அப்படியில்லை.

●

கட்டுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற மாணவப் பருவத்திலிருந்து அரசியல், சமூகச் செயல்பாட்டாளர்.



KAAVYA TAMIL (QUARTERLY) OCTOBER-2022, MARCH 2023
Regd No : TN TAM 8012 / 43610
நெல்லை கால்கரை
வெ.சுடலைமுத்துத் தேவர்
நூற்றாண்டு விழா
1922 –2022
காவ்யா சண்முகசுந்தரத்தின்
சிறப்பு வெளியீடுகள்
நாட்டுப்புற அறிவியல்
தேசிங்கு ராஜனும் ராஜா தேசிங்கும்
சங்கத் தமிழ் வள்ளல் பாண்டித்துரைத் தேவர்
நாட்டுப்புறவியலும் நானும்
தொடர்புக்கு
044 - 23726882
98404 80232
KAAVYA TAMIL ISSN 2277 - 9221
44&45
தை
அக்டோபர் 2022 - மார்ச் 2023
மலர் 12 இதழ் 5&6
KAAVYA TAMIL ISSN 2277 - 9221
விலை ₹ 200
காவ்யா
தமிழ்
கலை, இலக்கியம், பண்பாட்டு பன்னாட்டுக் காலாண்டிதழ்
காந்தாரா
மாயக்காடும்
மக்கள்
வழக்காற்றியலும்
பொன்னியின் செல்வன்
பொன்னியில்லா
செல்வன்
காவ்யா சண்முகசுந்தரம்



கட்டுரை

# குழந்தைகளுக்கென்று 'பேமிலி ரூல்ஸ்' தேவையா?

மருத்துவர் **ப.வைத்திலிங்கம்**

குழந்தைகள் இருக்கும் வீடுகளை எளிதில் கண்டுபிடித்து விடலாம் என்று சொல்வார்கள். ஆங்காங்கே இறைந்து கிடக்கும் பொருள்கள், பொம்மைகள், புத்தகங்கள், சுவற்றில் இருக்கும் கிரையான் கிறுக்கல்கள் போன்றவைகள் வீட்டில் துறுதுறு குழந்தைகள் உள்ளனர் என்று சொல்லாமல் சொல்லிவிடும். குழந்தைகள் வளர்ந்து கற்றுக்கொள்ளும் வரை வீட்டில் ஒரே களேபரம்தான். பெரியவர்கள் சொல்வதைக் கேட்டு வீடு சுத்தமாகவும், அமைதியாகவும் இருக்க குழந்தைகளால் உதவ முடிவதில்லை. பெரியவர்களும் அவ்வப்போது குழந்தைகளிடம் சத்தம் போட்டு விட்டு பின்னர் வருந்துவார்கள். ஓரிரு குழந்தைகளை வீட்டில் வைத்துக்கொண்டே நம்மால் சமாளிக்க முடியாமல் போகும்போது, நூற்றுக்கணக்கான குழந்தைகளை வைத்துக் கொண்டு நர்சரிப் பள்ளிக் கூடத்தில் எப்படிச் சமாளிக்கிறார்கள் என்ற ஆச்சரியம் உங்களில் நிறைய பேருக்கு இருக்கும். வெரி சிம்பிள்! குழந்தைகளுக்கான ரூல்ஸ் அங்கே தெளிவாக இருக்கின்றன. அதை நடைமுறைப்படுத்த ஆசிரியர்கள் உள்ளனர். ஆர்வமும் மகிழ்ச்சியும் கொப்பளிக்க அவர்களைப் பின்பற்றும் ஆர்வத்துடன் குழந்தைகள் இருக்கிறார்கள்.

பெற்றோர்களுக்கு வீட்டில் உள்ள குழந்தைகளை எளிதில் கையாளத் தெரிய வேண்டும். ஒரு கட்டுக்கோப்பும் அமைதியும் ஒழுங்குமுறையும் வீட்டில் நிலவ வேண்டும் என்றால் வீட்டில் உள்ள சிறுவர், சிறுமிகள் சில அடிப்படை நல் ஒழுக்கங்களைப் பின்பற்றுபவர்களாக இருக்க வேண்டும். பள்ளிக்கூடத்தில் இருப்பது போல வீட்டிலும் குழந்தைகளுக்கான 'பேமிலி ரூல்ஸை' அவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்.

நீங்கள் போடும் வீட்டுச் சட்டங்கள் மூலம் உங்கள் குழந்தைகளிடம் நீங்கள் எதை பெரிதும் மதிக்கிறீர்கள் என்று சொல்ல வேண்டும். அவர்களிடம் இருந்து என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்றும் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும். சட்டங்கள் அனைத்தும் குழந்தைகளுக்கு மட்டுமல்ல: வீட்டில் உள்ள பெரியவர்களாகிய உங்களுக்கும் சேர்த்துதான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். பெரியவர்கள் முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டும்போது குழந்தைகள் எளிதில் பின் பற்றுவார்கள்.

**போடும் சட்டங்கள் எப்படி இருக்க வேண்டும்?**

குழந்தைகளுக்கான குடும்ப சட்டதிட்டங்கள் போட விரும்பும் பெற்றோர்கள், அவைகள் எளிதில் குழந்தைகளுக்கு புரியும்படி இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். குழந்தைகளிடம் பேசி எழுதி வீட்டில் எல்லோருக்கும் தெரியும்படி மாட்டி அல்லது ஒட்டி வைக்கலாம். குழந்தைகளின் அறையிலோ அல்லது ப்ரிஜிலோ கூட ஒட்டி வைக்கலாம்.

குழந்தைகளுக்கென்று போடும் ஹவுஸ் ரூல்ஸ் கடுமையானதாக இருக்கக் கூடாது. குழந்தைகளைப் பயமுறுத்தித் தண்டிக்கும் நோக்கம் இல்லாமல் இருக்க வேண்டும். தேவையானவைகளுக்கு மட்டும்தான் வரைமுறைகள் இருக்க வேண்டுமே ஒழிய குழந்தைகளை மிலிட்டரி ரூல்ஸ் போட்டு அவர்களின் சிறகை ஒடிக்கக் கூடாது.

குழந்தைகளுக்குப் புரியாதவாறு பொதுவாக ஒரு சட்டம் போட்டு அவர்களை திரு திருவென்று முழிக்கச் சொல்லக் கூடாது. உதாரணத்திற்கு 'யாரும் தப்பு செய்யக் கூடாது' . இந்த ரூல்ஸில் எது சரி, எது தப்பு என்பது குழந்தைகளுக்குத் தெரியாது.

ஒரு நேரத்தில் ஓரிரு சட்டங்கள்தான் போடலாம். அதை அவர்கள் புரிந்து கடைபிடிக்க ஆரம்பித்து, பின்னர் அவர்களின் இயல்பான பழக்கமாகிய பிறகுதான் அடுத்த செட் ரூல்ஸ்களுக்குப் போக வேண்டும். பெரிய லிஸ்டைத் தயாரித்து இவைகள்தான் நம்ம வீட்டு ரூல்ஸ் என்று சொல்லக் கூடாது.

குழந்தைகளிடம் விவாதித்து கலந்து பேசி அவர்களின் சம்மதத்துடன் போடப்படும் ரூல்ஸ்களை அவர்கள் எப்போதும் மீறுவதில்லை. எப்போதாவது மீறினாலும் பெரிதுபடுத்தாமல் விட்டு விட வேண்டியதுதான். தண்டனை எல்லாம் கொடுத்து துன்புறுத்தக் கூடாது. இருப்பினும் குடும்ப சட்டத்தை மீறும்போதே குழந்தையை எச்சரித்து அதன் விளைவுகளைத் தெளிவாக்கி விட வேண்டும். பெற்றோர்களின் தொடர் கண்காணிப்பில் சின்சியராகப் பின்பற்றும் குழந்தைகளை பாராட்டவோ ஊக்குவிக்கவோ தயங்கக் கூடாது.

**எதற்கெல்லாம் சட்டம் போடலாம்?**

குழந்தைகளுக்கான 'பேமிலி ரூல்ஸ்' போடுபவர்கள் கீழ்க்கண்ட கருத்துக்களை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்

*1. பாதுகாப்பு:*

குழந்தைகளின் உடல் பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுத்து வறைமுறைகளை வகுக்க வேண்டும். பாதுகாப்பு என்று சொல்லும்போது வீட்டில் உள்ள பர்னிச்சர்கள், வீட்டு உபயோகச் சாமான்களின் பாதுகாப்பையும் மனதில் கொள்ள வேண்டும். கூரான பொருள்கள், பர்னிச்சர்கள், மாடிப்படிகள், மரங்கள், நீர் நிலைகள், நீச்சல் குளம் முதலிய இடங்களை குழந்தைகள் எப்படி உபயோகப் படுத்த வேண்டும் என்று தெளிவாகச் சொல்ல வேண்டும்.

பள்ளியிலும் வெளியில் செல்லும்போதும் அறிமுகம் இல்லாத நபர்களை எப்படித் தவிர்க்க வேண்டும் என்று சொல்லித்தர வேண்டும்

*2. நற்பண்புகள்:*

நல்ல பண்புகளையும், பழக்கங்களையும் கற்க இந்தக் காலமே நல்ல தருணம். எப்போதும் உண்மை பேசுதல், பொருள்களின் உரிமை பற்றித் தெரிந்து கொண்டு, பிறர் பொருள்கள் மீது ஆசைப்படாமல் இருத்தல், தன்னிடம் உள்ள பொருள்களை பிறருடன் பகிர்ந்து கொள்ளுதல் போன்ற பழக்கங்களை எளிதில் கற்றுக் கொடுக்கலாம். வீட்டிற்கு வரும் நண்பர்கள், உறவினர்களை எப்படி வரவேற்று உபசரிப்பது என்று சொல்லிக் கொடுக்க சரியான நேரம் இதுவே. இதனால் குழந்தைகளுக்கு இயல்பாகவே உள்ள கூச்ச சுபாவம் எளிதில் போய்விடும்.

வீட்டில் காரணமின்றி சத்தம் போட்டுப் பேசுவதோ, கத்துவதோ ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்வதோ கண்டிப்பாக அனுமதிக்கக் கூடாது. குழந்தைகள் விளையாடும்

இடத்தை, முடிந்த பிறகு சுத்தம் செய்ய வேண்டியது விளையாடியவர்களின் வேலை என்று கண்டிப்புடன் எடுத்துச் சொல்லலாம். வீட்டை சுத்தமாக வைத்திருப்பதும், எடுத்த பொருள்களை அதே இடத்தில் பின்னர் வைத்து விடுவதும் அவர்களின் வேலை என்று சொல்ல வேண்டும்.

வீட்டில் பெற்றோர்களுக்கு அன்றாட வேலைகளில் உதவுவதை தினசரி செய்து பழக வேண்டும். சிறு சிறு வேலைகளைச் செய்வதில் குழந்தைகள் எல்லோருமே ஆர்வத்துடன் ஈடுபடுவார்கள்.

**3. சுத்தமும் சுகாதாரமும்:**

குழந்தைகளுக்கு ஆரோக்கியமான பழக்கங்களைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். கழிவறை, குளியல் அறைகளை உபயோகித்தல், தன் உடலை சுத்தமாகப் பேணுதல். கைகழுவும் முறை, சுத்தமான ஆடைகளை அணிவது போன்ற சுய சுத்தம், சுகாதாரம் தெரிய வேண்டும்.

**4. உணவுப் பழக்கங்கள்:**

வீட்டில் குறைந்த பட்சம் ஒரு வேளை உணவாவது அனைவரும் சேர்ந்து உண்ணும் பழக்கம் வேண்டும். சாப்பிடும்போது பெரியவர்கள் உள்பட யாருமே மொபைல் உபயோகிக்கக் கூடாது. குழந்தைகளுக்கும் சாப்பாடு ஊட்டும் சாதனமாகவும் மொபைலை பயன்படுத்தக் கூடாது. அதுபோல பாட்டில் ட்ரிங்ஸ், துரித உணவுகள் முதலியவற்றுக்கு வீட்டில் அனுமதியில்லை என்றும் தெளிவுபடுத்தலாம். உணவை முழுவதும் சாப்பிடாமல் வீணடிப்பதை அனுமதிக்கக் கூடாது.சாப்பிட்ட இடத்தை சுத்தம் செய்தல் முதலியனவும் பழக வேண்டும்.

**5. பிறருடன் பழகும் முறை:**

குழந்தைகள் வீட்டை விட்டு வெளி உலகுக்குச் செல்லும்போது பிறருடன் பழகும் திறன் பெற்றவர்களாக இருக்க வேண்டும். அவர்களுக்கு சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட மேனரிசங்கள் தேவை. அறிமுகம் ஆனவர்கள், அறிமுகம் இல்லாதவர்கள் போன்றோர்களுடன் எப்படிப் பழகுவது என்பது தெரிய வேண்டும், பொது இடங்களில் தன்முறை வரும் வரையிலும் காத்திருக்கத் தெரிய வேண்டும். கதவைத் தட்டிவிட்டு பிறர் அறைக்குள் நுழைவது, தன் வயது ஒத்தவர்களுடன் விளையாடுவது, பெரியவர்கள் பேசும்போது, தன்முறை வரும் வரையிலும் காத்திருந்து பேசுவது போன்றவை தெரிய வேண்டும். வீட்டில் அவர்கள் பழகும் முறையின் தொடர்ச்சியாக வெளி உலகிலும் நல்ல பண்புகளுடனும் பழக்கங்களுடனும் பயணிக்க




வேண்டும். சமூகத்தில், பள்ளியில்,பொது இடங்களில் எளிதில் பழகத் தெரிய வேண்டும்.

**இதனால் என்ன நன்மை?**

இம்மாதிரி வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் கடைபிடிக்கும்படியான சட்டதிட்டங்களை குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே அறிமுகப்படுத்துவதால் அவர்களுக்கு வெளியிலும் பொது விதிகளை மதித்து கடைபிடிக்கும் குணம் எளிதில் வந்துவிடுகிறது. பெற்றோர்களால் அனுமதிக்கப்படாத காரியங்களுக்கு குழந்தைகள் அடம் பிடிப்பதும், பிடிவாதக் குணமும் குறைந்து விடுகிறது. அது அவர்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது. இம்மாதிரி வளரும் குழந்தைகளுக்கு உடல் பருமன் போன்ற பிரச்சினைகளும் வருவதும் இல்லை. அவர்கள் வளரும் குடும்ப அமைப்பில் எது சாத்தியம், எது சாத்தியம் இல்லை என்பதையும் தெரிந்து அதற்கேற்றாற் போல் வளர ஆரம்பித்து விடுகிறார்கள். இம்மாதிரி சட்ட திட்டங்கள் போடும் பெற்றோர்களுக்கும் இயல்பாகவே குழந்தைகள் மீது உள்ள அன்பும் அக்கறையும் அதிகமாகிறது. குழந்தைகளும் ஒரு சுய கட்டுப்பாட்டைக் கற்றுக் கொண்டு வெளியுலகில் மன அழுத்தம் ஏதுமின்றி நல்லவர்களாக வலம் வர முடிகிறது.

●

கட்டுரையாளர், குழந்தை மருத்துவ நிபுணர்.




# பழந்தமிழில் சமண சமயச் சொற்கள் வருகை - வளர்ச்சி - ஒடுக்கம்

முனைவர் ஆ.கார்த்திகேயன்

சமணம் தமிழ்நாட்டில் 2000 ஆண்டுகளுக்கு முன்பே பரவியிருந்தது. கி.பி 7,8 ஆம் நூற்றாண்டுவரை மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தது. "அருக பதவி அடைந்தோர்களாகிய தீர்த்தங்கரர்களது சரித்திரங்கள் அறிவூட்டுவன என்றும் புண்ணியம் பயப்பன என்றும் இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை விளைப்பன என்றும்" (வையாபுரிப்பிள்ளை,1944) சமணர் கருதினர். இதனால் சமணச் சொற்கள் சில பழைய இலக்கியங்களில் புகுந்தன. இத்தகைய சொற்கள் பக்திப் பனுவல்களில் பொருள் மாற்றம் பெற்று வழங்கின. அதனைத் தொடர்ந்து வழக்கொழிந்து விட்டன. இச்சொற்கள் சிலவற்றின் வருகை, வளர்ச்சி குறித்தும் வீழ்ச்சி குறித்தும் இக்கட்டுரை விளக்குகிறது.

**அருகன்:**

அருகன் என்ற சொல் குறித்து இங்குக் காண்போம். இச்சொல் சிலம்பில் நாடுகாண் காதையில் பயன்படுத்தப்படுகிறது. கவுந்தி அடிகளோடு கண்ணகியும் கோவலனும் மதுரை மூதூருக்கு நடந்து செல்கையில் வழியில் இந்திர விகாரம். அருகன் கோயில் ஆகியவற்றைக் காண்கின்றனர். அருகதேவனின் கோயில் பற்றிக் குறிப்பிடுகையில்

"ஐவகை நின்ற அருகதானத்து" (சிலம்பு,10:19) என்று வருகிறது. இதற்குப் பொருள் பஞ்சபரமேட்டிகள் நிலைபெற்ற அருகனின் கோயில் என்பதாகும். அருகன், ஆச்சாரியர், உபாத்தியாயர், சாதுக்கள், சித்தர் போன்றோர் பஞ்சபரமேட்டி எனப்படுவர். இதே காதையில் அருகதேவனின் அரும்புகழ் விவரிக்கப்படுகிறது. "அங்கம் பயந்தோன், அருகன், அருண்முனிவன், பண்ணவன்" (நாடுகாண் காதை: 87). இதனைத் தொடர்ந்து கவுந்தி அடிகள் "அருகன், அறிவன், அறவோர்க்கு அல்லது" (10:202) வேறு ஒருவரையும் என் கைகள் குவித்து வணங்காது என்று உறுதி மொழிகிறார். திவாகர பிங்கல நிகண்டுகளிலும் 'சாவகர், அருகர், சமணராகும்' என்று அருகர் குறித்து வந்துள்ளது (மயிலை சீனி.வேங்கடசாமி, 2010. பக்.173).

பிராகிருத அகராதியில் அரிஹந்த என்றும் அரஹந்த என்றும் வடிவங்கள் காணப்படுகின்றன. இவற்றிற்குப் பல பொருண்மைகள் உள்ளன. போற்றத்தக்க ஆத்மாக்கள் (worthy Souls) என்பது ஒரு பொருள். இது தவிர 'எல்லாம் அறிந்தவர், ஜினதேவன், ஜினபகவான், தீர்த்தங்கரர், வணங்குதற்குரியவர்' என்றெல்லாம் பொருள் உள்ளன. அருகர்கள் மங்கலம் பொருந்தியவர்களாகவும் (அருஹந்தா மங்கலம்) உலகத்தில் உயர்ந்தவர்களாகவும் (லோகுத்தமா) பாதுகாவலராகவும் (சரணம் பவ்வஜ்ஜாமி) வருணிக்கப்படுகிறார்கள்.

அர்ஹத் (arhat) என்ற வட சொல் அருஹ என்று மாறுகிறது. இறுதியில் வரும் தகரம் (பல் அடைப்பொலி) கெடுகிறது. -ர்ஹ்- என்ற மெய்மயக்கம் உகர உயிரால் பிரிக்கப்படுகிறது. அடுத்த நிலையில் ஹகரம் (தொண்டை உரசொலி) ககரமாக (கடையண்ண அடைப்பொலி) மாறுகிறது. இறுதியில் -அன் ஒட்டு சேர்க்கப்பட்டு அருகன் ஆனது. arhat>. aruha> arukan. அருகர் என்ற சொல் தொடர்ந்து சைவத் திருமுறைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. சம்பந்தர் தேவாரத்தில் திருமுதுகுன்றம் பதிகத்தில் "அருகரொடு புத்தர் அவர் அறியா அரன் மலை யான்" (1:12) என்றும் "புத்தர் அருகர்தம் பொய்கள் புறம்போக்கி"(967) என்று வேறொரு பதிகத்திலும் பெரிய புராணத்தில் "பாழியும் அருகர் மேவும் பள்ளிகள் பலவும் ஆகி" (2499:4) என்றும் வருகின்றது.

சம்பந்தர் ஆகதர், ஆதர் போன்ற புதிய வடிவங்களையும் பயன்படுத்துகிறார். இவை இரண்டும் அருஹ என்ற வடிவத்தில் இருந்து வந்தவையே. ஆகதர் எனும் வடிவம் "மாசுசேர் ஆகதர்க்கு எளியேன் அலேன்" (திருவாலவாய் பதிகம்-3212). ஆலவாய் பதிகத்தில் வந்தது. ஆகதர் எப்படி வந்தது? arhat என்பதில் ரகரம் (அடியொலி) கெட்டு முதல் உயிர் நெடிலாயிற்று. சம்பந்தர் தேவாரத்தில் 'ஆதர்' என்றொரு வடிவமும் வந்துள்ளது என்று குறிப்பிட்டோம்."ஆதர் சமணரொடும்" என்று சம்பந்தர் தேவாரத்தில் காணப்படுகிறது (3469). இச்சொல் arhat -இன் நடுவில் வரும் மெய்மயக்கம் முழுதும் கெட்டு ஆதி நீண்டு ஆதர் என்றாகி இருக்கலாம்.

ஆருகத சமயமும் சமணத்தோடு தொடர்புடையது. அரிஷ்டநேமி தீர்த்தங்கரர் காலத்தில் சமணம் ஆர்கத தர்மம் என்று அறியப்பட்டது. இன்றும் பிகாரில் சமணம் ஆர்கத தர்மம் என்றே அறியப்படுகிறது. இச்சமயம் குறித்த விவரணை மயிலை சீனி வேங்கடசாமி படைத்த 'சமணமும் தமிழும்' என்ற நூலில் காணலாம்.

**நக்கன்**

மணிமேகலையில் நக்க சாரணர் என்ற தொடர் ஆதிரை பிச்சை இட்ட காதையில் வருகிறது. சாதுவன் கடற்பயணத்தில் உயிர் பிழைத்து நாகமலையில் உறங்கி ஓய்வெடுத்துக் கொண்டிருக்கையில் அம்மணமாய் அத்தீவில் வாழும் நக்க சாரணரிடம் அகப்படுகிறான். அங்கு நாகமலையைக் குறிப்பிடுகையில் "நக்க சாரணர் நாகர்வாழ் மலை" என்றும் "நக்க சாரணர் நயம் இலர் தோன்றி" என்றும் வருகிறது. (மணிமேகலை, ஆதிரை: 15,56) பின்னாளில் நக்கன் அருகன் என்ற பொருள் தந்தது. சமணத் துறவியரை நக்கன் என்று அழைப்பர். பாலிமொழி அகராதியில் 'நக்க ஸமண' என்ற சொல் நிர்வாணமாகத் திரியும் துறவியைக் குறிக்கிறது. (a naked acetic). புத்தத்துறவிகளும் அவ்வாறு இருந்திருக்கலாம்.

சம்பந்தர் சமணர்களைப் பற்றி குறிப்பிடுகையில் "தொக்க பீலியர் நக்கரையர்" (3403) என்று குறிப்பிடுகிறார். நக்கரையர் என்றால் இடையில் ஆடை அணியாதவர் என்பது பொருள். இன்னொரு பாடலில் "நக்குருவாயவரும் (நக்கு+உரு) (பாடல் எண்-3458) என்று சமணர் ஆடையின்றி இருப்பதைச் சுட்டுகிறார்.

நக்கன் என்ற சொல் சிவபெருமானையும் குறித்தது. "குளிர்வெண் பிறைசூடும் / நக்கன் நமையாள்வான் நல்லம் நகரானே" (சம்-தேவா) இவ்விடத்தில் நக்கன் சிவபெருமானைக் குறிக்கிறது. நக்கன் என்ற சொல்லுக்கு நகைமுகன் என்று பொருள் காண்கிறார் அறிஞர் ஐராவதம் மகாதேவன் அவர்கள். இது வடசொல் அன்று எனவும் நகு என்ற வினையடியாகப் பிறந்த (நகு+அன்) தமிழ்ச் சொல் எனவும் கூறுகிறார். இக் கருத்தை மறுபரிசீலனை செய்தால் இப்படிக் கூறலாம். 'நக்கம் அமர்ந்த திருமேனி' என்று வருகிற தேவார வரியில் நக்கம் திருமேனியை விசேடித்து வருவதால் அவரது கோலத்தையே குறிக்கிறது எனலாம். ஆடை

அணியாமல் புலித்தோலை அரையில் அணிந்தும் கோவணம் அணிந்தும் அரை நிர்வாணமாகக் காட்சி தரும் சிவனை நக்கன் அதாவது அரைநிர்வாணி என்று எடுத்துக் கொள்ளலாம். நரியைப் பரியாக்கியவன் நக்கன் என்பது சரியாகத் தோன்றவில்லை. பௌத்த சமணத்தில் பரவலாக அறியப்பட்ட சொல்லைப் புதிய பொருளில் சைவர்களும் பயன்படுத்தி இருக்கலாம். சொல்லின் மூலப் பொருள் தெரியாமலே ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரு காலத்தில் இறைவனின் பெயர் சூட்டப்பட்டிருக்கலாம். பழனியாண்டி, ஆண்டியப்பன் சொற்கள் இறைவனைக் குறிப்பது போல.

நக்க என்ற சொல் பாலி, பிராகிருதம் வழியாகத் தமிழுக்கு வந்தது. னக்ன (nagna) என்ற சமஸ்கிருதச் சொல் இடைக்கால இந்தோ- ஆரிய மொழியில் நக்க (nagga) என்றாகித் தமிழுக்கு வந்தது. இடையில் வரும் -க்ன்- (gn) என்ற மெய்மயக்கம் (- ரீரீ-) என்றாயிற்று. அடைப்பொலி + மூக்கொலி ஆகிய வேற்றுநிலை மெய்மயக்கம் ஓரினமாகி உடனிலை மயக்கம் ஆயிற்று. இச்சொல் இடைக்கால இலக்கியத்தோடே வழக்கொழிந்து போயிற்று. முதலில் சமணத் துறவிகளைக் குறித்து பின்னர் பொருள் மாற்றம் ஏற்பட்டுச் சிவனைச் சுட்டப் பயன்பட்டது.

**சாரணர்**

பௌத்த, சமண, சைவ சமயங்களுக்கும் பொதுவாக விளங்கும் மற்றொரு சொல் 'சாரணர்' என்பதாகும். 'சரண' (caraNa) என்ற வினைச் சொல்லுக்கு 'நடத்தல், திரிதல்' (wandering)என்று பொருள். சரணத்தர் என்ற சொல் 'பாதம் உடையவர்' என்ற பொருளில் பரிபாடலில் "தாளித நொய்ந் நூல் சரணத்தர் (10-10)" என்று வருகிறது. இதிலிருந்து சாரணர் என்ற பெயர்ச் சொல் வந்தது.

சமணத்தில் சாரணர் என்ற சொல் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. சிலம்பில் நாடுகாண் காதையில் "தருமம் சாற்றுஞ் சாரணர் தோன்றப் / பண்டைத் தொல்வினை பாறுக வென்றே"(163-164) ஆகிய வரிகளில் சாரணர் வந்துள்ளது. மற்றொரு இடத்தில்,

"நீரணி விழவினும் நெடுந்தேர் விழவினும் / சாரணர் வரூஉம் தகுதியுண் டாமென" எனவும் வருகிறது. இங்கு சாரணர் ஆகாச சாரிகளைக் குறித்தது. முதலில் தருமம் சாற்றும் சாரணர் என்றவிடத்து சமண முனிவரைக் குறித்தது. சாரணருள் பல வகையினர் உண்டு. 'தல சாரணர், ஜல சாரணர், ஆகாச சாரணர், புட்ப சாரணர், தந்து சாரணர் இப்படி எண்வகையர் என்பார் உ.வே.சா.' சாரணர் கவுந்தியினும் பழுத்த சமணர்; சிந்தை விளக்கால் முக்காலமும் காண்போர். ஆனால், கவுந்திக்கோ காலவுணர்ச்சி இல்லை என்பார் அடியார்க்கு நல்லார் (தெ.பொ.மீ.,2010, பக்-96).

மணிமேகலையிலும் நக்க சாரணி குறித்து வருகிறது. நாகமலை தீவில் நிர்வாணமாகத் திரியும் தீவுவாசிகளை அச்சொல் குறித்தது. நக்கன் என்ற சொல் இங்குச் சாதாரண மக்களைக் குறித்தது.

சைவத்தில் சுந்தரரால் தேவாரத்தில் சாரணன் என்ற சொல் எடுத்தாளப்படுகிறது. "சாரணன் தந்தை எம்பிரான் எந்தை தம்/பிரான் என்பொன் மாமணி" இங்கு 'சாரணன்' என்ற சொல்லுக்கு 'எங்கும் இயங்குபவன், புகலிடம் ஆனவன்' என்று பொருள் கொள்ளப்படுகிறது. 'நாலாயிரதிவ்வியப் பிரபந்தத்திலும்' மாதவர், வானவர், சாரணர், இயக்கர், சித்தரும் மயங்கினர்"என்று தேவகணங்களைக் குறிக்க சாரணர் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது.

அடைக்கலம் என்று பொருள்படும் சரண் சொல்லடியாகப் பிறந்த தத்திதம் என்று சொல்வர். ஆக சாரணர் என்ற சொல் பௌத்தம், சமணம், சைவம், வைணவம் எனச் சமயம் கடந்து பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இன்றும்கூட சாரணர் இயக்கம் உலக அளவில் புகழ் பெற்று விளங்குகிறது. Scout என்ற இயக்கத்திற்குச் சாரணர் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது.

**நிக்கந்தன்**

சிலம்பில் கந்தன் என்றொரு சொல் வருகிறது. "கந்தன் பள்ளி கடவுளர்க்கு எல்லாம்" (காடுகாண்-5) கந்தன் என்றது நிக்கந்தன் என்னும் சமண சமய கடவுளாகிய அருகனை ஆகும். (அடியார்க்கு நல்லார் உரை) கனாத்திறம் உரைத்த காதையில் நிக்கந்தக் கோட்டம் என்றும் வருகிறது. வளையாபதியிலும் "துக்கம் துடைக்கும் துகளறு காட்சிய / நிக்கந்த வேடத் திருவடிக்கணங்களை" என்று வருகிறது. 'நிக்கண்டன் கலைக்கோட்டுத் தண்டனார்' என்றொரு சங்க காலப் புலவர் இருந்துள்ளார். இப்புலவர் பெயர் நிக்கந்தன் என்ற சொல்லில் இருந்து பெறப்பட்டது என்று கூறுவர்.

நிக்கந்தன் என்னும் சொல் நிர்கிரந்த (nirgrantha) என்ற சொல்லோடு தொடர்புடையது. 'ணிஅண்ட' என்பது பிராகிருத வடிவம். பாலி மொழியில் 'நிகண்ட' (nigaNTha) என்ற சொல் நிர்வாண சமணத் துறவியைக் குறிக்கும். பந்தங்களிலிருந்து விடுபட்டவன் என்பது நிர்கிருந்த என்ற சொல்லின் பொருளாகும். (one who is freed from bonds.)

சமண சமயம் பழங்காலத்தில் வேறு சில பெயர்களாலும் அறியப்பட்டது. அரிஷ்டநேமி தீர்த்தங்கரர் (22 வது) காலத்தில் ஆர்கத தர்ம

*(aarhata dharma)* என்றும் பார்ஷ்வநாதர் (23) காலத்தில் பார்ஷவநாத தர்மம் என்றும் அறியப்பட்டது. மகாவீரர் காலத்தில் நிர்கிரந்த அல்லது நிர்கிருந்த பிரவசனசார *(Nirgrantha pravacana)* என்றும் அறியப்பட்டது. நிர்கிரந்த என்பதே தமிழில் நிக்கந்த என வழங்கலாயிற்று.

**கவுந்தி:**

சிலம்பில் கவுந்தி என்னும் துணைப் பாத்திரம் வருகிறது. கவுந்தி என்பது சமண சமய பெண்துறவியைக் குறிக்கும்.கோவலன் 'உறுதவத்தீர்' என்று கவுந்தியை விளிக்கிறான். இவர் இருந்தது புகாரில் புறஞ்சேரியில் அமைந்த சமணப் பள்ளியில் ஆகும். கவுந்திப் பள்ளி என்றே அதற்கு அடியார்க்கு நல்லார் பெயரிடுகிறார். சைனப் பெண் துறவிகளின் நிலையம் என்று கொள்ளலாம் என்பார் தெ.பொ.மீ.

கடிஞை, அறுவை (உறி), கைப்பீலி என்பன கொண்டு அவரது புறக்கோலம் அமைந்திருந்தது. அகம் அன்பினால் நிறைந்து வழிகிறது. கோவலன் , கண்ணகி மாட்டு அடிகளது அன்பு பெருக்கெடுத்துச் செல்வதைக் காண முடிகிறது. அருகன் வழி நிற்பார்க்கு எல்லாம் கைவரும். அருகனை அன்றி வேறு ஒருவர் நாமத்தை நவிலேன் என்று கூறுகிறார். கவுந்தி என்ற சொல் கல்வெட்டுகளில் வரும் 'கந்தி' என்ற சொல்லோடு தொடர்புடையது என்று ஐராவதம் கருதுகிறார். கந்தனும்(நிக்கந்தன்) கவுந்தியும் தொடர்புடைய சொற்களா?

**சாவகர்**

சாவகர் என்ற சொல் மதுரைக் காஞ்சியிலும் சிலப்பதிகாரத்திலும் வந்துள்ளது.

மதுரைக்காஞ்சியில் (475-480) சமணப் பள்ளியின் தோற்றம் அழகாக வர்ணிக்கப்படுகிறது.

" வண்டுபடப் பழுநிய தேனார் தோற்றத்துப் / பூவும் புகையும் சாவகர் பழிச்சச் / சென்ற காலமும் வரூஉம் அமயமும் / இன்றிவண் தோன்றிய ஒழுக்கமொடு நன்குணர்ந்து / வானமும் நிலனும் தாமும் முழுதுணர்ந்து / சான்ற கொள்கை சாயா யாக்கை / ஆன்றடங் கறிஞர் செறிந்தனர் நோன்மார்" சமணப் பள்ளியில் நோற்ற சமண நோன்பிகள், தேன் நாவில் இனிப்பது போல, பார்வைக்கு இனிமையானவர்கள்.

பூவின் மணமும் நறும் புகையும் சூழச் சாவகர்கள் போற்றித் துதிக்க விளங்கினர். முன்னால் தோன்றிய ஒருவனின் மனதில் நினைப்பதை உணரும் வல்லமை படைத்தவர். கடந்த காலத்தையும் எதிர்காலத்தில் நிகழவிருப்பதையும் உணரவல்லவர். செறிவான அறிவினை உடையவர்கள். இவ்விடத்தில் சாவகர் என்ற சொல் வருகிறது.

சிலம்பில் கோவலன் சாவக நோன்பியாகக் காட்டப்படுகிறான். "சாவக நோன்பி அடிகள் ஆதலின் / நாத்தூண் நங்கையொடு நாள்வழிப் படூஉம் / அடிசில் ஆக்குவதற்கு அமைந்தநற் கலங்கள் / நெடியாது அளிமின் நீர்" (சிலம்பு-கொலைக்களக் காதை -18-21). இங்குக் கண்ணகியே கோவலன் சாவக நோன்பி எனவும் அவன் பகல் உணவு உண்பதற்குச் சமைக்க வேண்டிய பாத்திரங்கள் கொடுப்பீராக என்றும் கேட்கிறாள்.

சாவக விரதத்தைக் கடைப்பிடிப்பவர்கள் பிரத்யேக உணவை உண்பர். அடைக்கலக் காதையிலும் சாவக நோன்பிகள் குறித்த செய்திகள் கிடைக்கின்றன. 'சோலைகள் நிறைந்த காவிரிப்பூம்பட்டினத்தில் பிண்டி எனப்படுகிற அசோக மர நிழலில் பல சாவகர்கள் அமர்ந்து சிலாதலத்தின் மீதமர்ந்த சாரணர்களின் உபதேசத்தைக்

கேட்டனர். இங்கு சாவக நோன்பிகளை 'உலக நோன்பிகள்' என்று இளங்கோவடிகள் அழைக்கிறார். அப்போது அங்கே பேராற்றலுடைய ஒரு பக்கத்துக் கை குரங்கின் கைபோல உடைய வானவன் தோன்றினான். அப்போது அங்குக் குழுமியிருந்த "சாவக ரெல்லாம் சாரணர் தொழுது , 'ஈங்கு யாதிவன் வரவு என' கேட்டனர். இவ்விடத்திலும் சாவகர் என்ற சொல்லாட்சி இடம் பெற்றுள்ளது. எட்டி சாயலன் கதை சிலம்பில் புகழ் பெற்ற கிளைக்கதை ஆகும்."சாவகர்க்கு எல்லாம் சாற்றினன்" என்றும் "தன் தெறல் வாழ்க்கைச் சாவக மாக்களும்" என்றும் இரு இடங்களில் எட்டி சாயலன் கதையில் வருகிறது. சாவக நோன்பி என்ற சொல்லுக்கு 'இல்லறத்தையுடைய சாவகர் என்றும் பிராகிருத மொழியில் இருந்து வந்த சொல் என்றும் சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி (பக்-1392) பொருள் தருகிறது.மணிமேகலையில் சாவகன் என்ற சொல் மாணாக்கன் என்ற பொருளிலும் வருகிறது (பார்வை -மேற்படி அகராதி).

"சங்கம் (சமணம்) தாமரை மலர் போன்றது. மலர் சகதி, நீரிலிருந்து தனித்திருப்பதைப் போல வினைமாசு இல்லாமல் சங்கம் திகழும். மலரின் தண்டு போல் ஆகம அங்க நூல்கள் விளங்கும். மலரின் விதையுறை ஐந்து பெரிய விரதங்களாகும். மலரின் இதழ்கள் சமணத் துறவிகளாவர். மலர்களை வட்டமிடும் வண்டுகள் போல சாவக மாக்கள் சங்கத்திற்கு வந்து செல்வர் (சமண சுத்தம்; 1991,

பக்-13). சாவக நோன்பிகளுக்கும் சங்கத்திற்கும் உள்ள உறவு இங்குத் தெரிந்து கொள்ள முடிகிறது. திருக்குறள் இல்லறவியலில் வரும் அறங்கள் யாவும் சாவகர்க்கு உரியவை என்று சொல்லிவிடலாம். ஞானசம்பந்தர் காலம்வரை சாவகர் என்ற சொல் வழக்கு இருந்திருக்கிறது. "மாபதம் அறியாதவர் சாவகர்" என்றும் "சாவாயும் வாது செய் சாவகர்" என்றும் தேவாரத்தில் வருகிறது.

சாவக (saavaga) என்ற பிராகிருதச் சொல் (shraavaka) என்ற சமஸ்கிருதச் சொல்லிலிருந்து வந்தது. அதாவது மொழி முதல் மெய்மயக்கம் தவிர்க்க ரகரம் கெடுகிறது. sh என்பது சகரமாக தமிழில் மாறிற்று. சாவகர் என்ற பழந்தமிழ்ச் சொல் பிராகிருத மொழியிலிருந்து வந்ததே.

**பரமேட்டி**

பரமேட்டி என்ற சொல் சமணத்தில் புகழ்பெற்ற சொல்லாகும். பஞ்ச பரமேட்டிகள் சமண சமயத்தில் ஐந்து படிநிலையில் உள்ள முக்கிய தெய்வங்களாவர் (spiritual guides). பஞ்ச பரமேட்டி மந்திரம் தலையாய பிரார்த்தனைச் சொற்களாகும். "அருகர், சித்தர், ஆச்சாரியார் (aayariyaana), உபாத்தியாயர், (uvajjaaya) சாதுக்கள் (saahu) ஆகியோர் பஞ்ச பரமேட்டிகள். பஞ்ச பரமேட்டிகளை வணங்குவது மங்கலகரமானது. இம்மந்திரம் பாவங்களை அழிக்க வல்லது" (சமண சுத்தம்; 1991:பக்-2). ‘ஓம்’ என்ற உச்சரிப்பு பஞ்ச பரமேட்டியைக் குறிக்கும். ஏனெனில் அது ஓர் ஐந்தெழுத்தால் ஆனது. ஐந்து எழுத்தாவது: அ,அ,அ,உ,ம். இவ்வெழுத்துக்கள் முறையே அருகன், அசரீரி (சித்தா), ஆச்சாரியார், உபாத்தியாயர், முனி ஆகிய உயர் தெய்வங்களைக் குறிக்கும். (சமண சுத்தம்:1991;பக்-7)

பரமேட்டி என்ற சொல் சிலம்பில் வந்துள்ளது என்று ஏற்கெனவே சுட்டிக் காட்டினோம். ‘ஐவகை நின்ற அருகதானத்து’ என்பது பஞ்சபரமேட்டிகள் நிலைபெற்ற அருகன் கோயிலைக் குறித்தது. பரமேட்டி என்ற சொல் இடைக்காலத் தமிழில் தாராளமாகப் பயின்று வருகிறது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் இச்சொல்லைக் கையாண்டுள்ளனர். பரமேட்டி என்ற சொல் சமண அருகனோடு சிவன், திருமால், பிரமன், பரம்பொருள் ஆகிய கடவுளர்களையும் குறித்தது. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் "பல்லாண்டு என்று பவித்திரனைப் பரமேட்டியை" என்று (திவ் பல்லாண்டு: 12) வருகிறது. திருமாலைப் பரமேட்டி என்று அழைக்கிறார் ஆழ்வார். தேவாரத்தில் "சாய்க்காட்டெம் பரமேட்டி பதமே" என்று சிவனை சம்பந்தர் குறிப்பிடுகிறார். சமணர்களை எதிர்த்த சம்பந்தர் பரமேட்டியைப் பல இடங்களில் கையாள்கிறார். இன்ன "கங்கையைப்...... சடையிற் பதித்த பரமேட்டி" (2:62-1) ‘நீ எம் பசுபதி பரமேட்டி’ "வெள்ளேற்றண்ணல் பரமேட்டி"(1:49). பட்டினத்தாரும் பரமேட்டியை விடவில்லை."பரமேட்டி சுட்டிறந்த ஞானத்தை சொல்"(613) என்று குறிப்பிட்டார். பரமேட்டி என்பதற்கு ‘தனக்கு மேலாக வேறு எவரும் இல்லாதவன்’ என்பது பொருள்.

பரமேஷ்டி (ParameeSTi) இல் உள்ள நாமடி சகரவொலி கடையண்ண அடைப்பொலியாக (ஒரினமாதல்) மாறுகிறது. சமண சமயத்தாரிடையே தமிழகத்தில் பிரபலமாக இருந்த சொல்லை வைணவ சைவ சமயத்தார் பிற்காலத்தில் பயன்படுத்திக் கொண்டனர். ஓங்கார மந்திரமும் சமண சைவ சமயங்களில் பயன்படுத்தப்பட்டது.

**சமண / அமண**

சமண /அமண என்ற சொல் குறித்து இப்பகுதியில் பார்க்கலாம். அம்மணம் என்ற சொல் எல்லாருக்கும் தெரியும். ஆடையின்றிப் பிறந்த கோலத்தில் இருப்பதுதான் அம்மணம். இச்சொல் நிர்வாணியாகத் திரிந்த சமணர்களைக் குறித்து நின்றது. சமணம் என்ற சொல்தான் அமண் என்று மாறி அம்மணம் என்றானது. இச்சொல் (சமணம்) சம்பந்தர் தேவாரத்தில் பலமுறை கையாளப்பட்டுள்ளது. சமண், அமண் ஆகிய இரண்டு வடிவங்களும் ஒரே பொருள் கொண்டவை.தேவாரத்திலிருந்து சமணர்கள் குறித்த தொடர்கள் சில:

1) ‘சிந்தையில் சமணொடு’ (110-10
2) ‘மோட்டமணர்’ (108-10)
3) ‘வன் சமண் குண்டர்’ (103-10)’
4) ‘நின்றுண் சமணும்’ (99-10)
5) ‘பிச்சைக் குடை நீழல் சமணர்’ (86-10)
6) ‘அறிவுரைச் சொல்லும் அறிவிலாச் சமணர்
7) ‘உழிதரு சமணர்’ (76-10)
8) ‘மயிலின் பீலி அமணர்’ (74-10)
9) ‘செடி நுகரும் சமணர்களும்’ (61-10)
10) ‘தடுக்கமரும் சமணரோடு’ (62-10)
11) ‘ஆலும் மயிலின் பீலியமணர்’ (74-10).
12) ‘புறங்கூறிய புன்சமணர்’

ஞானசம்பந்தர் தேவாரப் பாடல்களில் பல இடங்களிலும் இச்சொல்லைப் பயன்படுத்துகிறார். தமிழகத்தில் வாழ்ந்த சமணர்களின் பண்புகள் குறித்தும் அவர்களை வசைபாடி இழித்துரைப்பதும் இங்குக் காணமுடிகிறது. சமணர்கள் மயிற்பீலி வைத்திருப்பர். நின்றுகொண்டே உணவருந்தும் பழக்கம்

உடையவர்கள். தலையை முடித்து வரமாட்டார்கள். தடுக்கில் அமரும் பழக்கம் உடையவர்கள். அறிவுரை சொல்லும் ஆற்றல் இல்லாதவர். ஓரிடத்தில் நிலையாக வாழாமல் அலைந்து திரியும் (உழிதரு) வாழ்க்கை வாழ்பவர்கள். குகையில் வசிப்பவர்; வேழத்துக்கு நிகரானவர் "பாழியுறை வேழநிகர் பாழமணர்" என்பார் சம்பந்தர். (சம்ப- தேவா-3523) இவ்வாறு சமணர்களின் குணங்களை விவரிக்கிறார்.

திருவாலவாய் பதிகத்தில் 'சமணர்கள் வேத வேள்வியை நிந்தனை செய்வர் என்றும் வைதிகத்தின் வழி ஒழுகாதவர் என்றும் அருமறைகளைச் சிந்தை செய்யா அருகன்' என்றும் விவரிக்கிறார். (காண்க:ஆலவாய் பதிகம் (108:3956'3957,3960)

பக்தி இலக்கியங்கள் முழுவதும் தேடினால் விரிவான தகவல் கிடைக்கும். தேவார ஒளிநெறிக் கட்டுரையிலும் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

சமண என்னும் வடிவம் (shramana) என்ற சமஸ்கிருதச் சொல்லிலிருந்து வருவிக்கப்படுகிறது. மொழிமுதல் மெய்மயக்கம் (ஞ்ஹ தவிர) பிராகிருத மொழியில் தவிர்க்கப்படுகிறது. மெய்மயக்கத்தில் வரும் ரகரம் கெட்டு, பின்னர் தமிழில் சமண என்றாகிறது. சமண என்பது மேலும் தமிழில், மொழி முதல் சகரம் கெட்டு அமண (அமண்) என்றாகிறது. இந்த வடிவமும் (அமண்) தேவாரத்தில் அதிகமாக வருகிறது. சமணம் வேதப் பழமை வாய்ந்த ஒரு சமய இயக்கம். பிராமண சடங்குகளையும் வேள்விகளையும் எதிர்த்த இயக்கம். shramana என்ற சொல் புத்த ,சமணம் என்ற இரண்டையும் இணைத்து குறித்தது. பின்னாளில் சமணத்தை மட்டும் குறித்தது. சமணமும் தமிழும் என்ற மயிலை சீனி.வேங்கடசாமி எழுதிய மிகவும் பிரசித்தி பெற்ற நூலாகும்.

சதுமுகன் என்ற சொல் சமண சமயத்தில் அருகதேவனைக் குறித்தது. "சங்கரன் ஈசன் சுயம்பு சதுமுகன்". (சிலம்பு- நாடுகாண் காதை -186) "ஆனால் அச்சொல்லே பின்னாளில் நான்முகனைக் குறித்தது."சதுர்முகன் தாதையென் றுந்தீபற" (திருவா-திருவுந்தியார்) சங்கரன் என்ற சொல் தற்காலம் சிவனைக் குறிக்க முன்னாளில் அருகனையும் குறித்ததறிக.

**முடிவுரை:**

சமண பௌத்த சமயங்களில் பிரசித்தி பெற்ற சொற்களைப் பின்னாளில் சைவ வைணவர்களும் தம் நூல்களில் பயன்படுத்திக் கொண்டனர். அதற்குக் காரணம் அச்சொற்கள் மக்கள் மத்தியில் நிலைபெற்று பெருமதிப்புக்குரியனவாக, வழிபாட்டிற்குரியனவாக இருந்தன. சமணர்களோடு போரிட்டும் சமணச் சொற்களையும் சித்தாந்தங்களையும் உள்வாங்கியும் இந்து மதம் வளர்ந்தது. மேலே விவாதிக்கப்பட்ட சொற்கள் யாவும் பிராகிருதச் சொற்களே. அவை தமிழ் மொழிக்கு வந்த பிறகு பொருள் மாற்றம் (Semantic Change) அடைந்ததையும் காணமுடிகிறது. பௌத்த மதக் கொள்கைகள் பல இந்து மதத்தில் நின்று நிலவுகின்றன என்று மயிலை சீனி. வேங்கடசாமியும் தம் நூலில் குறிப்பிடுகிறார்.

குறிப்பு: ஒரு சொல்லின் பொருள் காலப் போக்கில் மாற்றம் அடைவதை பொருண்மை மாற்றம் என்பர். பேசுவோரின் நோக்கவிருப்பம் (intention) மாறுவதால் பொருண்மை மாற்றம் ஏற்படுகிறது. பழைய பொருள் இழந்து போகலாம். பொருண்மை மாற்றத்தால் சொற்பொருள் விரிவடையலாம்; சுருங்கலாம்.

**துணை நூல்கள்**


1) மீனாட்சிசுந்தரம், தெ.பொ. (2010). குடிமக்கள் காப்பியம், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை-14, (மறுபதிப்பு.)

2) மயிலை.சீனி.வேங்கடசாமி, (2010) சமணமும் தமிழும், செண்பகா பதிப்பகம், சென்னை-17

3) மயிலை.சீனி.வேங்கடசாமி,(2010) பௌத்தமும் தமிழும், செண்பகா பதிப்பகம், சென்னை.

4) சிலப்பதிகாரம், (2014) சாரதா பதிப்பகம், சென்னை-14.

5) திவ்வியப் பிரபந்தம் (2010) சாகித்ய அக்காதெமி வெளியீடு

6) சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும் (2008), உ.வே.சா. நூல் நிலையம், சென்னை-90.

7) சமண தடயம் (2005), நடன காசிநாதன், சத்தியமூர்த்தி (பதிப்பாசிரியர்கள்), மணிவாசகர் நூலகம், சென்னை-108.

8) ஐராவதம் மகாதேவன், தமிழகக் குகைக் கல்வெட்டுகளில் சமணம் (கட்டுரை) வரலாறு. காம்

9) ஐராவதம் மகாதேவன், நக்கன்-ஓர் சொல்லாய்வு, வரலாறு.காம்.

10) Samansuttam, (1993), Bhagawan Mahavir Memorial Samiti, New Delhi-21.

11) Tamil Concordance, Dr. Pandiyaraja.

12) Chicago University Dictionary of South Asian Languages Website.


●


கட்டுரையாளர், பேராசிரியர், எழுத்தாளர்.

முன்னறிவிப்பு

## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்
## மகத்தான படைப்பு விரைவில்...

# சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம்

### ஒரு நூற்றாண்டு வாசிப்புப் பின்புலத்தில்

பாடல் - பாடவேறுபாடு - உரைவேறுபாட்டு விளக்கங்கள் - பாடற்கருத்து - அருஞ்சொற்பொருள் - விரிவான ஆய்வு முன்னுரை எனும் அமைப்பில்

எண்மரின் பத்தாண்டுகாலக் கடும் உழைப்பில்


20 தொகுதிகள், 8000 பக்கங்கள்


உயர்ந்த கட்டமைப்பில்

தமிழக வரலாற்றில் முதல்முறையாக

## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு
## ஒரு வேண்டுகோள்!







**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

**பிப்ரவரி மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

5669, 4263, 1856, 3759, 1853, 2384,
1857, 5670, 495, 1118, 1855, 499,
5750, 5587, 497, 525, 884, 498,
1861, 189, 496, 198, 7825, 5671
5662, 3456, 5663, 5668, 7824,

தனி இதழ் ₹ **45.00**
ஆண்டு சந்தா ₹ **540.00**
மாணவர்களுக்கு ₹ **500.00**,
ஆயுள் சந்தா ₹ **5400.00**
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ **4050.00**
*சந்தாத் தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

**கிளைகள்**

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.



# பன்னாட்டு திணைக்குடி மொழிகளுக்கான பத்தாண்டுகள் (2022 - 2032) எதிர்நிற்கும் அறைகூவல்கள்

முனைவர் சி. மகேசுவரன்

ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்டு 9 - ஆம் நாளினை 'உலகத் திணைக்குடி மக்களுக்கான பன்னாட்டு நாளாக' *(International Day of World's Indigenous Peoples)* யுனெஸ்கோ... *(UNESCO)* கடைப்பிடிக்கிறது. இதற்கு முத்தாய்பாகக், கடந்த 2019-ஆம் ஆண்டினையே 'பன்னாட்டுத் திணைக்குடி மொழிகளுக்கான ஆண்டு' *(International Year of the Indigenous Languages)* என இந்நிறுவனம் அறிவித்துக் கொண்டாடியது. இந்நிலையில், எதிர்வரும் 2050 -ஆம் ஆண்டிற்குள் உலகின் பல பகுதிகளில் பேசப்பட்டு வரும் திணைக்குடி மொழிகளுள் 60% மொழிகள் அழிந்துவிடும் என்கிற தனது ஆழ்ந்த கவலையை யுனெஸ்கோ பதிவு செய்துள்ளதுடன், இத்தகைய 'அழிநிலைத் திணைக்குடி மொழிகளைத்' *(Endangered Indigenous Languages)* தொடர்ந்து உயிர்ப்புடனேயே வைத்திருப்பதற்கான ஆயத்தப் பணிகளை முன்னெடுக்குமாறு உலக நாடுகளை அறிவுறுத்தவும் செய்தது. இதற்கென, அழிநிலைத் திணைக்குடி மொழிகளைக் காப்பதற்கென உலக நாடுகள் கையில் எடுத்துள்ள 'மொழித் திட்டமிடல் முன்னெடுப்புகளை' *(Agenda of Language Planning)* இன்னும் முனைப்புடன் முடுக்கிவிட, நடப்பு ஆண்டான 2022-ஆம் ஆண்டு முதல் எதிர்வரும் 2032-ஆம் ஆண்டு வரைக்குமான பத்தாண்டுக் காலத்தைப் 'பன்னாட்டுத் திணைக்குடி



மொழிகளுக்கான பத்தாண்டுகள்' *(Decade for the International Indigenous Languages)* என யுனெஸ்கோ அறிவிக்கையும் செய்துள்ளது. இப்பத்தாண்டுகளில் உலக நாடுகள் ஒவ்வொன்றும் தத்தமது நாட்டினுடைய அழிநிலைத் திணைக்குடி மொழிகளை முற்றிலும் மறைந்துபோகாமல் காப்பாற்றுவதுடன், அவற்றைத் தொடர்ந்து உயிர்ப்புடனும் துடிப்புடனும் வைத்திருப்பதற்கென ஒரு செயல் திட்டத்தை *(Action Plan)* தமது பல்வேறு திட்டப் பணிகளுள் ஒன்றாகக் கொண்டாட வேண்டும் என்று அறிவுறுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம். இச்சீரிய பணியில் ஈடுபட்டுள்ள 'மொழியியலாளர்கள்' *(Linguists)* மற்றும் மொழித் திட்டமிடுவோர் *(Language Planners)* முன் எதிர்நிற்கும் அறைகூவல்களை எடுத்துக் காட்டுவது இக்கட்டுரைக் களமாக அமைகிறது.

**II. இந்தியாவில் செயல்படும் அழிநிலை மொழிகளுக்கான நடுவங்களும் அவற்றின் செயல்பாடுகளும்:**

இந்தியாவில் இனங்கண்டறியப்பட்டுள்ள அனைத்து மொழிகளுக்குமான ஒற்றை ஆராய்ச்சி நிறுவனமாகக் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக மைசூரைத் தலைமையகமாகக் கொண்டு நன் முறையில் செயலாற்றிவரும் 'இந்திய மொழிகள் நடுவண் நிறுவனமா'னது *(Central Institute of Indian Languages)*. ஒரு 'மொழி ஆவணமாக்கத் தரவுத் தொகுப்பகத்தை'த் *(Language Data)* தொடங்கி, இந்தியாவில் அழிநிலை மொழிகள் என இனங்கண்டறியப்படும் பல்வேறு திணைக்குடி மொழிகளை, மொழியாளர்களைக் கொண்டு, உரிய களப்பணி ஆய்வுகள் வாயிலாக அவற்றை ஆய்விற்கு உள்படுத்தித், தக்க 'மொழித் தரவுகளை'த் *(Language Data)* திரட்டித், தொடர்புடைய மொழிகளின் 'குறுநிலை இலக்கணம்' *(Sketch Grammar)* மற்றும் 'சிறு அகராதியை'த் *(Concise Dictionary)* தொகுத்து வெளியிடும் ஒப்பற்ற பணியில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இந்தியாவின் பல்வேறு பழம்பெரும் பல்கலைக் கழகங்கள், மத்திய பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட பல்வேறுபட்ட உயர்கல்வி நிறுவனங்கள் அந்தந்தப் பகுதிகளில் இனங்கண்டறியப்பட்ட அழிநிலை மொழிகளைத் தத்தமது 'அழிநிலை மொழிகளுக்கான நடுவங்கள்' *(Centres for Endangered Languages)* வாயிலாக, நேரிடைக் களப்பணித் திரட்டுதல்களின் அடிப்படையில், முறையான ஆவணமாக்கப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. இத்தகைய மொழி ஆவணமாக்கப் பணிகள் - மக்களும் அரசும் எதிர்பார்க்கும் வகையிலேயே - நன்முறையில் நடைபெறுகின்றனவா என்பதை உறுதிப்படுத்திட, ஒன்றுக்கொன்று நெருங்கிய புவியியல் பரப்புகளில் செயல்பட்டு வரும் நிறுவனங்களுள் ஏற்ற ஒன்றை 'அச்சாணி நிறுவனமாக'க் *(Hub)* கொண்டு மேற்பார்வையிடவும் நெறிப்படுத்திடவும் உரிய 'செயல் திட்டத்'தை ஆயத்தப்படுத்திட அறிவுறுத்தப்பட்டது. இதன் விளைவாக, இத்தகைய அச்சாணியாக அமைந்திடும் நிறுவனங்களால் அவற்றின் நேரிடை மேற்பார்வையின் கீழே செயல்படும் ஏனைய அழிநிலை மொழிகளுக்கான நடுவங்களின் செயல்பாடுகளைச் சரிவர கண்காணிக்க இயலும் என்பதுடன், அந்நிறுவனங்கள் ஒன்றுக்கொன்று உதவியாகச் செயல்படவும் அழிநிலை மொழிகள் ஆய்வு மற்றும் ஆவணமாக்கப் பணிகளில் எவ்வகையான 'படியாக்கமு'ம் *(Duplication)* ஏற்பட்டுவிடாமல் தவிர்க்கவும் இயலும் என எதிர்பார்க்கப்பட்டது. மேலும், அவ்வப்போது ஒவ்வோர் அழிநிலை மொழிகளுக்கான நடுவத்தில் நடத்தப்படும் அழிநிலை மொழிகள் தொடர்பான 'கருத்தரங்குகள்' *(Seminars)*, பயிலரங்குகள் *(Workshops)*, மீளாய்வுகள் *(Reviews)*, உள்ளிட்டவற்றில் பிற நிறுவனங்களைச் சார்ந்த வல்லுநர்கள் முறையான கருத்துரையாளர்களாகக் *(Resource Persons)* கலந்துகொண்டு தக்க கருத்துரைகள் நல்கிடவும் உரிய வாய்ப்புகள் உருவாகும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

**III. அழிநிலை மொழிகளுக்கான நடுவங்களின் செயல்பாடுகள் - ஒரு தர மதிப்பீடு:**

ஒன்றிய அரசிடமிருந்து உரிய 'நிதி நல்கை'யைப் *(Financial Grant)* பெற்று நாடெங்கிலும் உள்ள அழிநிலை மொழிகளுக்கான நடுவங்கள் செயல்பட்டன. இருப்பினும், காலப்போக்கில் தமக்கான அச்சாணி நிறுவனத்தின் குறுக்கீட்டை அதன் கீழுள்ள நிறுவனங்கள் 'கண்டுகொள்ளவில்லை' என்பதை விட 'விரும்பவில்லை' என்றே கூறவேண்டும்; அதே நேரம்,

அச்சாணி நிறுவனமாகச் செயல்பட்ட நிறுவனத்தைச் சார்ந்தோறும் தம்மைச் 'சட்டாம்பிள்ளை'யாக் *(Controlling Authority)* கருதிக்கொண்டு, தம் கீழுள்ள அழிநிலை மொழிகளுக்கான நடுவங்கள் மீது ஒரு வகையான மேலாதிக்கத்தைச் செலுத்தவே முயன்றனர் என்பதையும் மறுப்பதற்கு இல்லை எனினும், கருத்தரங்குகள், பயிலரங்குகள், மீளாய்வுகள் உள்ளிட்டவற்றின்போது அழிநிலை மொழிகளுக்கான நடுவங்கள் ஒன்றுக்கொன்று தக்க கருத்துப் பரிமாற்றங்களைச் செய்துகொண்டு, அவற்றின்வழியே தக்க பயன்களையும் பெற்றன என்பதும் மறுக்க இயலாத உண்மை ஆகும்.

## IV. 'பன்னாட்டுத் திணைக்குடி மொழிகளுக்கான பத்தாண்டுகளில்' இந்தியாவில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் :

'பன்னாட்டுத் திணைக்குடி மொழிகளுக்கான பத்தாண்டுகளில்' முதலாம் ஆண்டினைத் தற்போது நாம் கடந்துவிட்டோம். இந்நிலையில், மேற்குறித்துள்ள நடப்புகளின் பின்புலத்தில், எஞ்சியுள்ள 9 ஆண்டுகளில் இனித் திணைக்குடி மொழிகளுக்கு இந்தியா ஆற்றவேண்டிய முகாமையான மூன்று பணிகள் என்று கீழ்க் குறித்துள்ளவற்றைச் சுட்டலாம்:

*i.* அழிநிலைத் திணைக்குடி மொழிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆவணமாக்கப் பணிகள் வாயிலாக உருவான குறு இலக்கணம் மற்றும் சிறு அகராதி அடங்கிய ஆய்வறிக்கைகளை நூலாக்கம் செய்திடத் தேவையான கூடுதல் நிதி ஒதுக்கீட்டினை ஒன்றிய அரசு விரைந்து அளித்து உதவிட வேண்டும்.

*ii.* அழிநிலைத் திணைக்குடி மொழிகளை ஆவணப்படுத்திய ஆய்வறிக்கைகளைக் குறு இலக்கணம், 'சிறு அகராதி' என நூல் வடிவில் வெளியிடுவதுடன் நின்று விடாமல், அழிநிலை மொழிகளாக இனங்கண்டறியப்பட்ட திணைக்குடி மொழிகளை 'மறுவுயிர்ப்பு' *(Revitalization)* செய்திடும் பணியை அடுத்த கட்டமாக அந்தந்தப் பகுதிகளில் மேற்கொள்ளவும் உரிய செயல் திட்டத்தினை வடிவமைத்து, நடைமுறைப்படுத்திட முனைப்புடன் செயலாற்றிட வேண்டும்.

*iii.* மொழியியல் ஆய்வில் 'தகவலாளி' *(Informant)* என்று குறிப்பிடும் மரபை மாற்றி, அழிநிலைத் திணைக்குடி ஆவணமாக்க ஆய்வின்போது 'மொழிக் கருத்துரைஞர்' *(Language Consultant)* என்று பெயரளவிற்குச் சொல்லாடலில் *(Discourse)* மட்டும் மாற்றத்தைக் காட்டாமல், 'ஆய்வு அணுகுமுறை'யிலும் *(Research Approach)* ஆய்வாளர்கள் - திணைக்குடிகள் இருவர்க்கும் இடையே விரும்பத்தக்க மாற்றம் ஏற்படும் வகையில் நம்பிக்கையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## *V.* நிறைவுரை

அழிநிலைத் திணைக்குடி மொழிகளை நேரிடைக் களப்பணி ஆய்வின்வழியே ஆவணமாக்கிடும் பணியின்போது மேற்கொள்ளப்படும் பல்வேறு சீரிய முயற்சிகளையும் முன்னெடுப்புகளையும் சற்றும் கருத்தில் கொள்ளாமல், அழிநிலைத் திணைக்குடி மொழிகளை ஆவணமாக்கும் பணியை 'மொழியைப் பதப்படுத்துதல்' *(Mummification of Language)* என்று சிலர் மலினப்படுத்தினாலும் இதில் சிறிதளவும் உண்மை இல்லை என்பதை நாம் உணர்ந்திட வேண்டும்; ஏனெனில், 'மொழி இழப்பு' *(Loss of Language)* ஆவதற்கு முன்னரே மொழியியலாளர்களால் முறையாக ஆவணப்படுத்தப்பட்ட அழிநிலைத் திணைக்குடி மொழிகளை தேவை ஏற்படும்போது உயிர்ப்பிப்பதற்கான உரிய 'மொழித் தரவகமா'க *(Database of Language)* இத்தகைய ஆய்வறிக்கைகள் அல்லது நூல்களே எதிர் காலத்தில் தோன்றாத் துணையாகக் கை கொடுக்கும்; இச்சீரிய முயற்சிகளையும் முன்னெடுப்புகளையும் மீறித், திணைக்குடி மொழிகள் எவையேனும் அழிந்துபோக நேரிட்டால், அவற்றை மீண்டும் அத்'திணைக்குடி மொழி பேசுநர்க்'குக் *(Speakers of Indigenous Speech)* கற்பிப்பதற்கான அடிப்படைத் தரவகமாகவும் இவ்வாறான ஆவணமாக்க ஆய்வறிக்கைகளும் அவற்றின் வாயிலாகப் பெறப்பட்ட குறு இலக்கணமும் சிறு அகராதியுமே திகழ்ந்திடும் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.


அழிநிலைத் திணைக்குடி மொழிகளைக் களப்பணிவழியாக ஆய்ந்திடும் மொழியிய லாளர்களுக்கும் அத்திணைக்குடி மொழிகளைப் பேசுவோர்க்கும் இடையே நிலவிடும் 'நெருக்கவுறவா'னது *(Rapport)* எவ்வகைத் தொய்வும் இல்லாமல் என்றுமே தொடரும் உறவாகத் திகழ்ந்திட இப்பன்னாட்டுத் திணைக்குடி மொழிகளுக்கான பத்தாண்டுக் காலத்தை நல்ல மொழித் திட்டமிடலுடன் *(Language Planning)* பயன்படுத்திக்கொண்டு பயன்பெறுவோம்.

●

கட்டுரையாளர், மேனாள் இயக்குநர் பழங்குடியினர்
ஆய்வு நடுவம், நீலகிரி தமிழ்நாடு அரசு

## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் நாகர்கோவில் கிளையின் சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சிகள்

31.12.2022 அன்று நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் நாகர்கோவில் கிளையில் புத்தாண்டை புத்தகங்களோடு கொண்டாடுவோம் நிகழ்வில் 5 புதிய நூல்கள் வெளியீட்டு விழா நடைபெற்றது. இதில், தோழர். *S.K.*கங்கா, தோழர் இசக்கிமுத்து, தொல்லியல் அறிஞர் செந்தீ நடராசன், வரலாற்றறிஞர் அ.கா.பெருமாள், த.க.இ.பெ குமரி மாவட்ட தோழர்கள், அனந்த சுப்பிரமணியன், விஜயக்குமார், கவிஞர்.ந.நாகராஜன், ஆசிரியர் சிவப்பிரசாத், சமூக ஆர்வலர்கள் விஜிஸ், பிரிஸ்டோ, சர்ஜின் மற்றும் நாகர்கோவில் கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.





09.01.2023 அன்று குளச்சலில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் நாகர்கோவில் கிளை சார்பாக 37 ஆவது தேசிய புத்தகக் கண்காட்சியை குளச்சல் நகராட்சியின் தலைவர் திரு.நசீர் அவர்கள் திறந்து வைத்து முதல் விற்பனையைத் துவக்கி வைத்தார். இதில் குளச்சல் வட்டார கல்வி அலுவலர் *K.*ஹரிக்குமார், அ.ந.பள்ளி தலைமை ஆசிரியை *G.T.HS* ஜாஸ்மின், வரலாற்றறிஞர் அ.கா.பெருமாள், எழுத்தாளர் குறும்பனை சி.பெர்லின், எழுத்தாளர் கோட்டூர் மனோஜ், சமூக ஆர்வலர்கள் ஷமீனுதீன், முகம்மது சபீர், மதுரை மண்டல மேலாளர் அ.கிருஷ்ணமூர்த்தி மற்றும் நாகர்கோவில் கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

13.01.2023 அன்று சித்திரங்கோடு நகரில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் நாகர்கோவில் கிளையின் சார்பாக பொங்கல் பண்டிகை சிறப்பு புத்தகக் கண்காட்சியை பிருந்தாவன் ஆர்ட்ஸ் & ஸ்போர்ட்ஸ் கிளப் பொருளாளர் *I.G.P* ஜாண் கிறிஸ்டோபர் திறந்து வைத்து முதல் விற்பனையைத் துவக்கி வைத்தார். இதில், எழுத்தாளர் கோட்டூர் மனோஜ், சமூக ஆர்வலர்கள் விஜிஸ் சச்சின் மற்றும் அரசு அலுவலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.





24.01.2023 அன்று மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவாக்க மையம், நாகர்கோவில் சார்பாக நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் சார்பாக புத்தகக் கண்காட்சியை முதுநிலை விரிவாக்க மையத்தின் இயக்குனர், மற்றும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற தமிழியல் துறைத் தலைவர்.பேரா.ஞா.ஸ்டீபன் அவர்கள் திறந்து வைத்து முதல் விற்பனையைத் துவக்கி வைத்தார். ஆய்வு மாணவர்கள் பேராசிரியர்கள், மற்றும் நாகர்கோவில் கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கட்டுரை

# பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் – நீர் மேலாண்மை

ஜெ. அமுதராணி

உலகம் செழிக்க அடிப்படையாய் விளங்குவது நீராகும். மனிதர்கள் உணவு உண்ணாமல் கூட சில நாட்கள் இருந்திட இயலும். நீரினைப் பருகாமல் இருப்பது என்பது எளிதான செயல் கிடையாது. உலகத்தில் உயிர்கள் வாழவும் மிக மிக அவசியம் தண்ணீரின் தேவையாகும். ஆறு, ஏரி, வாய்க்கால், குளம், கிணறு போன்ற நீர் நிலைகளில் கைகளிலேயே நீரினை அள்ளிக்குடிக்கும் பழக்கம் போய் இன்று பாட்டில்களில் அடைத்து வைத்து விலைக்கு வாங்கிக் குடிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

**ஆய்வுச் சுருக்கம்:**

நம் முன்னோர்களால் மிகவும் போற்றிப் பாதுகாக்கப் பெற்று பயன்படுத்தப்பட்டு வந்த நீரை நாம் வீணாக்கியதால் இன்று நீரினை எப்படியெல்லாம் மேம்படுத்தலாம் என்ற நிலை இன்று உருவாகியுள்ளது. இதனை வள்ளுவர் .

"விசும்பின் துளிவீழின் அல்லால்மற்று ஆங்கே
பசும்புல் தலைகாண்ப தரிது"[1]



வான்பொழியும் நீரே உயிர்ப்பு என்பதற்கு அடிப்படையாய் அமைகின்றது. அப்படிப்பட்ட நீராதாரத்தை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பதே ஆய்வுச் சுருக்கமாக அமைந்துள்ளது.

**உள்ளடக்கம்:**

மழைநீரினை சேமித்து வைப்பதற்கு ஏற்ற நீர் நிலைகளை அமைக்கவேண்டும்.மழைநீரைச் சேமித்து சேமித்த நீரை திறம்படப் பயன்படுத்துவது என்பதையும் அறிந்திருக்க வேண்டும். இந்த மழை நீரினை ஏரிகள், குளங்களில் சேமித்து அவற்றை தக்க முறையில் பயன்படுத்தியும் நாட்டினை வளம்பெறச் செய்யவேண்டும்.

**பதினெண் கீழ்க்கணக்கு இலக்கியங்களில் நீர் மேலாண்மை**

**இனியவை நாற்பது :**

**குளம் :**

"காவோடு அறக்குளம் தொட்டல் மிகஇனிதே"[2]

என்ற பாடல்வரிகள் குளம் வெட்டுவித்தல் என்பது மிகப்பெரும் அறச்செயல் என்று போற்றப்பெறுகின்றது. மழைப் பொழிவினைத் தேக்கி வைத்துப் பயன்படுத்த ஏரிகள், குளங்கள் வெட்டுவிக்க வேண்டும் என்று இப்பாடலின் வரிகள் மூலம் இனியவை நாற்பது எடுத்துரைக்கின்றது.

நீர் வரும் வரத்துக்கால் நன்கு அமையாதகுளம் இருப்பின் அதனால் பயன் குறையும் என்ற செய்தியினை,

"வாய்நன் கமையாக் குளனும் வயிறாரத்
தாய்முலை யுண்ணாக் குழவியும் சேய்மரபில்
கல்விமாண் பில்லாத மாந்தரும் இம்மூவர்
நல்குரவு சேரப்பட்டார்[3]"

தாய்ப்பால் அருந்தாத குழந்தையும், கல்வி கற்க முடியாத நிலையில் உள்ளவர்களும் எப்படி உயர்வடைய முடியாதோ அதேபோல் வாய் நன்கு அமையாத குளமும் இருக்கும் என்பதை திரிகடுகம் என்ற நூலின் வழி எடுத்துக்காட்டப்பட்டுள்ளது,மேலும் சிறுபஞ்ச மூலம் என்ற நீதி நூலில் குளம் அமைக்கும் முறை பற்றியும், அதில் பொதுக்கிணறு அமைத்தல், வரத்துக்கால், மதகுகள், மிகைநீர் வெளியேறும் கலிங்கு, தூம்பு போன்றவைகளையும் எப்படி அமைக்க வேண்டும் என்ற செய்தியினை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

"காவோடு அறக்குளம் தொட்டானும் நாவினால்[4]"

சோலையை உண்டாக்குவதோடு, அறத்திற்குரிய குளத்தைத் தோண்டுவித்தவனும் உண்டு. குளம் வெட்டி நீரைச் சேமித்துப் பாதுகாப்பது மிகப்பெரிய அறச்செயலாக இங்கு உணர்த்தப்படுகிறது.

சோலைகளை அமைப்பதற்கு அடிப்படைத் தேவையே நீர். அத்தகைய நீரினை சேமிப்பதற்கு குளங்களையும்,கிணறுகளையும்,ஆற்றினையும்,ஏரிகளையும்,மேம்படுத்துவது அறச்செயளாக திரிகடுகம் உணர்த்துகின்றது.

**ஏரி:**

மிகுதியாக வரும் ஆற்று வெள்ளநீரை தம்முள் அடக்கிக் கொள்ளக்கூடிய பெரும் ஏரிகள் இருப்பதைத் தரும் என்பதை,

"யாறுள் அடங்குங்குளமுள வீறுசால்[5]"

இப்பாடலில் குறிப்பிடப்பெறும் ஆறு உள் அடங்கும் குளம் என்ற சொற்றொடர் நீர் மேலாண்மைத் திறத்தின் ஒரு முக்கிய வெளிப்பாடாகும்.பெருவெள்ளம் ஏற்படும் காலங்களில் அந்நீரினை உரிய முறையில் சேமித்து நீர் இல்லாத காலங்களில் பயன்படுத்தக் கூடிய நிகழ்வை இப்பாடல் வரிகள் எடுத்துக்காட்டுகின்றது. ஆற்றின் மிகுதியான நீரை உள்வாங்கிக் கொள்ளக்கூடிய பேரேரிகள் உரிய ஆழ அகலத்துடன் இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் வெள்ளக்காலங்களில் வரும் அதிகப்படியான நீர் வீணாகக் கடலில் கலக்காமல் முழுவதையும் சேமித்துப் பயன் பெறமுடியும்.

**கிணறு:**

மக்களுக்கு குடிநீர் தரவல்ல கிணறுகளை குறைவில்லாமல் செய்வது முதன்மையான அறச்செயலாகும். இதனை,

"கூவல் குறைவின்றித் தொட்டனும்"[6]

என்று திரிகடுகம் நூல் கூறுகின்றது.ஆழமான கிணற்றுநீர் தூய நீராக இருக்கும் என்பதையும்,கோடைகாலங்களில் குளிர்ச்சியாகவும்,குளிர்காலங்களில் வெதுவெதுப்பாகவும் திகழும் தன்மை கிணற்று நீருக்கு மட்டுமே உள்ளது என்பதை திரிகடுகத்தின் வழியாக அறிய முடிகிறது.

**கிணறு:**

"குளந்தொட்டுக் கோடுப்பதித்து வழிசீத்து உளந்தொட்டு
உழுவயலாக்கி வளந்தொட்டுப் பாடுபடும் கிணற்
றோடென்றிவ்வைம் பாற்படுத்தான் ஏகுஞ்சுவர்க்கத்
திளிது[7]

என்ற பாடல்வரிகளில் ஏரிகளில் அமைக்கப்பட வேண்டிய முறையை சிறுபஞ்சமூலம் என்ற நூலின் வழி எடுத்துரைக்கப்படுகிறது

1. குளம், 2.கலிங்கு, 3.வரத்துக்கால், மதகுகள், மிகைநீர் போகும் கால்கள் ஆகிய வழிகளை



அமைத்தல் வேண்டும். 4. பொதுக்கிணறு அமைத்தல் வேண்டும்.

ஏரிகளில் நீர் குறைவாக இருக்கும் போது ஏரி மதகுகள் மூலம் தண்ணீர் பாய்ச்சுவது அதிக நீர் வீணாகும் வழியாகும். அந்த நேரங்களில் மதகுகள் மூலம் நீர்பாய்ச்சுவதை விட நிலத்தடி நீரைப் பயன்படுத்துவது சிறந்த நீர் மேலாண்மை ஆகும்.

**சுனை:**

கடினமான பாறைப்பகுதிகளில் கூட கிணறுகள் வெட்டி மழை நீரைச் சேமித்துப் பயன்படுத்திய திறம் வெளிப்படுகின்றது. இன்றும் கூட மலைமீதமைந்த கோயில்களை ஒட்டிச் சுனை அமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

**கடல்:**

"கடனீர் முகந்த கமன்ஞ்சூ லெழிலி
குடமலை யாகத்துக் கொள்ளம் பிறைக்கும்.[8]"

"கருங்கடல் மேய்ந்த கமஞ்சூ லெழிலி
இருங்க லிறுவரை யேறி யுயிர்க்கும்[9]"

காற்றினால் மோதப்பட்ட மேகம் மின்னலையும், இருளையும், மாறி மாறிப் பரப்பித் தன் இனத்துடன் போய்ச் சைய மலையை அடைந்து அதனைச் சூழ்ந்து, இடைவிடாமல் மழைப் பொழியச் செய்கின்றது.

"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான் நல்காதாகி விடின் "[10]

மேகமானது கடலிலிருந்து நீரை மொண்டு வந்து அக்கடலிலேயே மழையாகப் பெய்யாவிடில் பெரியகடலும் தன் வளம்குறைந்து போகும்.

கடல்நீரே மழையை பெய்துவிக்க பெரிதும் ஆதாரமாக உள்ளது. மழைநீரால் தான் நாடுவளம் பெறும்; அத்தகைய மழைநீரை சேமித்து வைக்கத்தான் நாம் குளம், கிணறு, ஆறு, ஏரிகள் ஆகியவற்றை அமைத்துப் பயன்படுத்துகின்றோம்.

**ஏலாதி:**

"உண்ணீர்வளம்"[11]

குளம், கிணறு, வாய்க்கால் வெட்டுதல், ஊற்றுக்குழி தோண்டுதல் முதலியவற்றால் அதனை ஆங்காங்கு வளம்படுத்தித் தருபவற்றை 'உண்ணீர் வளம்' என்று ஏலாதி நூலின் பாடல் வரி எடுத்துரைக்கின்றது.

தண்ணீரின் பயன்பாட்டையும் தண்ணீர் இல்லாக் காலங்களில் ஊற்றுநீர் பயன்படுத்தும் முறையும் எடுத்துரைக்கின்றது.

**கடல்நீர்:**

**"மாவலந்த நோக்கினா யூணீய்ந்தார் மாக்கடல்சூழ் நாவலந்தீ வாள் வாரே நன்கு.[12]"**

நம் இந்திய நாடு மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்ட பகுதி அதனால் நாவலந்தீவு என்று அழைக்கப்படுகின்றது. இக்கடல் நீரையே மேகம் முகண்டு சென்று காற்றுடன் மழையை பெய்வித்தால்தான் நாடு செழிப்படையும்.நீர் கிடைப்பதற்கு ஒரே ஆதாரம் மழைநீரே! அத்தகை மழையை பொழியச் செய்ய வழியாக உள்ளது கடை நீரே.

**கிணறு:**

**"உணற்(கு) இனிய இன்னீர் பிறி(து) உழி இல் என்னும்**

**"கிணற்(று) அகத்துத் தேரைபோல் ஆகார்.[13]"**

குடிப்பதற்கு உவர்ப்பு இல்லாத நல்லநீர் என்று கிணற்று நீரை சங்க நூலாகிய பழமொழி நானூறும் சுட்டுகின்றது.

**"எற்றொன்றும் இல்லா இடத்துங் குடிப்பிறந்தார்**
**அற்றுத்தற் சேர்ந்தார்க் கசைவிடத் தூற்றாவர்**
**அற்றக் கடைத்தும் அகல்யா றகழ்ந்தக்கால்**
**தெற்றெனத் தெண்ணீர் படும்".**

**ஆற்றுநீர்:**

ஆற்றுநீர் வற்றிய காலங்களில் அகன்ற ஆற்றில் சிறிது குழி தோண்டினால் தூய தெளிந்த குடிநீர் கிடைக்கும். ஆற்றில் நீர் இல்லாத காலத்திலும் ஊற்றுநீர் பயன்படுத்திய செய்தியை நாலடியார் பாடல்வரி விளக்குகின்றது.

**"உறுபுனல் தந்துல கூட்டி அறுமிடத்தும்**
**கல்லூற் றுழியூறும் ஆறேபோல்"[14]**

நீர் வரத்து அதிகம் உள்ள காலத்திலும் உலக உயிர்களை காத்தும், உண்பதற்கு நீராகவும் பயன்பட்டு நீர் வற்றிய காலங்களிலும் மணற் பரப்பில் ஊற்று தோண்டி ஊற்று நீர் அளிக்கும் ஆற்றின் சிறப்புப் பற்றி சொல்லப்பட்டிருக்கின்றது.

**கிணறு:**

**"உறைப்பருங் காலத்தும் ஊற்றுநீர்க்கேணி**
**இறைத்துணினும் ஊராற்றும் என்பர்"[15]**

மழைத்துளித்தலில்லாத காலத்திலும் ஊற்று நீரையுடைய சிறிய நீர்நிலையை உண்பதற்கு நீராகவும் வயல் வெளிகளை வளம்பெறச் செய்ய இறைத்து உண்ணுவதற்கும் ஊரில் உள்ள அனைவர்க்கும் உதவுவதாக உள்ளது.

நீர் மேலாண்மையில் ஆறு, குளம், இவற்றை விட கேணி முதன்மையாக இடம் பெறுகின்றன என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

**"கேளாற்றக் கொள்ளாக் குளத்தின் கீழ்ப்**
**பைங்கூழ்போற"[16]**

அதிக மழை நீரைக் கொள்ளாத குளத்திலிருந்து வழிந்து ஓடும் நீர் ஏரியின் கண் அடைகின்றது. ஏரியில் வழிந்து ஓடும் நீர் கீழுள்ள பயிர்களை வளம் பெறச்செய்கின்றது. ஏரியின் சிறப்பு இங்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

**ஊற்றுநீர்:**

நீர்வரத்து இல்லாத கோடைகாலங்களில் ஆற்று மணலில் குழி தோண்டி அதிலிருந்து ஊறுகின்ற ஊற்று நீரினை உண்ணும் வழக்கம் நெடுங்காலமாக நம் மண்ணில் பயன்பட்டு வந்திருப்பது தெரியவருகிறது.

**முடிவுரை:**

1. குளம்,கேணி,ஆறு ஆகிய நீர்நிலைகளை பராமரிப்பதின் முக்கியத்துவத்தையும்,
2. ஆற்றுநீர் வற்றிய காலங்களில் ஊற்றுநீர் தோண்டி பயன்படுத்தியதும் இன்று ஆறுகளில் மணலே இல்லாத சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.

**அடிக்குறிப்பு:**

1. திருக்குறள் கு.எண், 16
2. இனியவை நாற்பது, பா.எண், 84
3. திரிகடுகம் பா.எண், 84
4 .மேலது பா.எண், 70
5. நான்மணிக்கடிகை, பா.எண், 54
6. திரிகடுகம் பா.எண், 6
7. சிறுபஞ்சமூலம் பா.எண், 65
8. கார்நாற்பது பா.எண், 33
9. மேலது பா.எண், 37
10. திருக்குறள் கு.எண், 17
11. ஏலாதி பா.எண், 51
12. மேலது பா.எண், 56
13. பழமொழி நானூறு பா.எண், 6
14. நாலடியார் பா.எண், 150
15. மேலது பா.எண், 185
16. மேலது பா.எண், 191

●

கட்டுரையாளர், முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை, மா.மன்னர் கல்லூரி (தி), புதுக்கோட்டை.